# ஏகத்துவத்தின் பலன்களும் இணைவைப்பின் அபாயங்களும்


ஆசிரியர்

*s. அப்பாஸ் அலீ Misc*



அழைப்பாளர்

அல்குபர் அழைப்பு நிலையம்

சவூதி அரேபியா

வெளியீடு

ரப்வா அழைப்பு நிலையம்

ரியாத் - சவூதி அரேபியா

# ثمرات التوحيد وأخطار الشرك

تأليف

عباس علي بن شاه الحميد

الداعية في المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

الناشر

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالربوة

الرياض – المملكة العربية السعودية

# பொருள் அட்டவணை


## ஏகத்துவம்.

1. ஏகத்துவம் ஒரு மாபெரும் பாக்கியம்.
2. கடைப்பிடிப்பதற்கு மிக எளிதானது.
3. ஏகத்துவமே முதன்மையானது.
4. மறைவான விஷயங்களை நம்ப வேண்டும்.
5. கலிமாவை எப்படி மொழிய வேண்டும்?
6. வெற்றியை பெற்றுத் தரும் வார்த்தை.

## இணைவைத்தல்

1. அல்லாஹ்வை நம்பும் மக்களிடம் இணைவைப்பு.
2. இணைவைப்பு என்றால் என்ன?

## இணைவைப்பின் வகைகள்

1. **அல்லாஹ்வின் அதிகாரத்தில் இணையில்லை**

1. அதிகாரத்தில் தலையிட எவருக்கும் அனுமதியில்லை.
2. காத்தல் அல்லாஹ்வின் அதிகாரம்.
3. பாக்கியங்களை வழங்குதல்.
4. குழந்தை பாக்கியத்தை தருவது அல்லாஹ்வின் அதிகாரம்.
5. அல்லாஹ்விடம் மட்டுமே குழந்தை பாக்கியத்தை கேட்க வேண்டும்.

6. வறுமையை நீக்குதல்.

7. மழையை வரவழைத்தல்.

8. துன்பத்தை நீக்குதல் அல்லாஹ்வின் ஆற்றல்.

9. நோயை குணப்படுத்துதல் அல்லாஹ்வின் அதிகாரம்.

## 2. இறைவனுடைய பெயர்களில் பண்புகளில் இணை யில்லை

1. அல்லாஹ்விற்குத் தூக்கம் இல்லை.

2. அல்லாஹ்விற்கு சோர்வு இல்லை.

3. அல்லாஹ்விற்கு மரணமில்லை.

4. அல்லாஹ்விற்கு மறதி இல்லை.

5. அல்லாஹ்விற்கு பசி தாகம் இல்லை.

6. அல்லாஹ்விற்குத் தேவைகள் இல்லை.

7. அல்லாஹ்விற்கு மனைவியும் பிள்ளைகளும் இல்லை.

8. அல்லாஹ்விற்கு பெற்றோர்கள் இல்லை.

9. இறைவன் கேட்பது போன்று யாராலும் கேட்க முடியாது.

10. இறைவன் பார்ப்பது போன்று யாராலும் பார்க்க முடியாது.

11. இறைவன் குணப்படுத்துவது போல் யாராலும் குணப்படுத்த முடியாது.

12. மறைவான ஞானம் அல்லாஹ்விற்கு மட்டுமே உள்ளது.

13. ஜின்களுக்கு மறைவான ஞானம் கிடையாது.

14. இறைத்தூதர்களுக்கும் மறைவான ஞானம் கிடையாது.

### 3. வணக்க வழிபாடுகளில் இணைவைக்கக்கூடாது.

1. இணைவைக்காமல் வழிபடுவது அடியார்களின் கடமை.
2. இணைவைக்காமல் வழிபடுவதே இஸ்லாத்தில் முதன்மை யானது.
3. இணைவைக்காமல் வழிபடுவதே இஸ்லாமிய கொள்கை.
4. இணைவைக்காமல் இருப்பவரே முஸ்லிமாக இருக்க முடியும்.
5. அல்லாஹ் விரும்பும் வணக்கம்.
6. இறைவன் வாங்கிய உறுதிமொழி.
7. நபித்தோழர்களிடம் இறைத்தூதர் வாங்கிய உறுதிமொழி.
8. இணைவைக்காமல் வணங்கியவருக்கே வெற்றி உண்டு.

## அல்லாஹ் அல்லாதவர்களின் பலவீனங்கள்

1. செவியுறமாட்டார்கள்.
2. பதில் தரமாட்டார்கள்.
3. மனிதர்கள் செய்வதை கூட செய்ய முடியாது.
4. உதவி செய்ய முடியாது.
5. நன்மையோ தீமையோ செய்ய இயலாது.
6. உணவளிக்க முடியாது.
7. செல்வத்தை அளிக்க முடியாது.
8. படைக்க இயலாது.

9. குழந்தை பாக்கியத்தை தரமுடியாது.

10. வானவர்களானாலும்அல்லாஹ்விற்கு நிகராக முடியாது.

11. நபிமார்களானாலும் அல்லாஹ்விற்கு நிகராக முடியாது.

12. கிறிஸ்த்துவர்கள் ஏன் இறைமறுப்பாளர்களாக ஆனார்கள்?

13. மக்கத்து காஃபிர்கள் ஏன் வழிகெட்டார்கள்?

14. நல்லடியார்களையும் வணங்கக் கூடாது.

## இணைவைப்பின் அபாயங்கள்

1. பேரழிவை உண்டாக்கும் பெரும்பாவம்.

2. இணைவைப்பது மாபெரும் அநியாயமாகும்.

3. இணைவைப்பது சைத்தானின் செயலாகும்.

4. இணைவைப்பது நெருப்பில் விழுவதை விட கொடியது.

5. இணைவைத்தவர்களுக்கு நிரந்தர நரகம் உண்டு.

6. இணைவைப்பவர்கள் உறவினரானாலும் நரகவாசியே.

7. இணைவைப்பது ஏன் பெருங்குற்றம்?

8. இணைவைப்பிற்கு எதிராக நபிமார்களின் வீரியப் பிரச்சாரம்.

9. நபிமார்கள் பிள்ளைகளுக்கு செய்த உபதேசம்.

## இணைவைப்பவர்கள் இழக்கும் பாக்கியங்கள்

1. அல்லாஹ்வை காணும் பாக்கியத்தை இழப்பார்கள்.

2. இணைவைத்தவர்களுக்கு சொர்க்கம் கிடைக்காது.

3. இணைவைப்பவர்களை அல்லாஹ் மன்னிக்கமாட்டான்.

4. இணைவைப்பவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படாது.

5. பாவங்களுக்கான பரிகாரம் கிடைக்காது.

6. மறுமையில் நபியவர்களின் பரிந்துரை கிடைக்காது.

7. இணைவைப்பவர்களின் பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படாது.

8. இணைவைப்பதால் நற்காரியங்கள் அழிந்துவிடுகிறது.

9. மறுமையில் எப்பலனும் கிடைக்காது.

10. உறவினராக இருந்தாலும் பாவமன்னிப்புத் தேடக்கூடாது.

11. இணைவைப்பவர்களுக்கு ஜனாஸா தொழக்கூடாது.

12. இணைவைப்பவர்களை திருமணம் செய்யக்கூடாது.

## மக்களிடையே நிலவும் இணைவைப்புகள்

1. அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிரார்த்திப்பது இணைவைப்பாகும்.

2. அல்லாஹ் அல்லாதவர்களிடத்தில் உதவிதேடுதல் இணைவைப்பாகும்.

3. அல்லாஹ் அல்லாதோரை சார்ந்திருத்தல்.

4. கவலைகள் ஏற்படும் போது....

5. மற்றவர்களிடம் பாவமன்னிப்பு தேடுதல் இணைவைப்பாகும்.

6. சாதாரணப் பொருட்களுக்கு சக்தி இருப்பதாக எண்ணுதல்.

7. தரீக்காவை பின்பற்றுதல் இணைவைப்பாகும்.

8. சோதிடம் குறிபார்த்தல் இணைவைப்பாகும்.

9. சகுணம் பார்த்தல் இணைவைப்பாகும்.

10. நல்ல நேரம் கெட்ட பார்த்தல் இணைவைப்பாகும்.

11. அல்லாஹ் அல்லாதவர்கள் மீது சத்தியம் செய்தல்.

12. மற்றவர்களுக்கு அறுத்துப்ப-யிடுதல் இணைவைப்பாகும்.

13. மற்றவர்களுக்கு நேர்ச்சை செய்தல் இணைவைப்பாகும்.

14. பிறரது காலில் விழுதல் இணைவைப்பாகும்.

15. ஸியாரத் என்ற பெயரில் இணைவைப்பு.

16. தர்ஹாக்கள் இணைவைப்பின் கேந்திரங்கள்.

17. சந்தனக்கூடு உரூஸ் கொண்டாட்டங்கள் இணைவைப்பாகும்.

18. பள்ளிவாசலுக்குள் இணைவைப்பு.

19. அல்லாஹ்வை அஞ்சுவது போல் மற்றவற்றை அஞ்சுதல்.

20. அல்லாஹ்வை நேசிப்பது போல் மற்றவைகளை நேசித்தல்.

21. மவ்லூதுகளிலும் இணைவைப்புக்கள் உண்டு.

22. வரம்பு மீறிப் புகழக்கூடாது.

23. ஓதிப்பார்ப்பதில் இணைவைப்பு.

24. தகடு தாயத்துகளை தொங்கவிடுதல் இணைவைப்பாகும்.

25. மார்க்கம் காட்டித்தராத முறையில் ஓதிப்பார்க்கக்கூடாது.

26. பிறர் பார்க்க வேண்டும் என்பதற்காக வணக்கங்களை புரிதல் இணைவைப்பாகும்.

27. பெயரில் இணைவைப்பு இருக்கக் கூடாது.

## இணைவைப்பில் விழுவதற்கான காரணங்கள்

1. அல்லாஹ்வின் வல்லமையை புரியாமல் இருத்தல்.

2. அல்லாஹ்வின் அருளை விட்டு நிராசையடைதல்.

3. பாவிகளால் இறைவனை நெருங்க முடியாது என்று நினைத்தல்.

4. இடைத்தரகர்களை ஏற்படுத்துதல்.

5. மறுமையில் மகான்கள் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை.

6. பரிந்துரை விசயத்தில் தவறான நம்பிக்கை.

# முன்னுரை

அகிலத்தைப் படைத்து பரிபாலித்துக் கொண்டிருக்கும் இறைவன் ஒருவனே என்ற உண்மையை அநேகமான மக்கள் ஒப்புக் கொள்கின்றனர். மதங்களால் மக்கள் வேறுபட்டாலும் ஒரு நேரத்தில் அவர்கள் அனைவரும் இந்த உண்மையை ஏற்றுக்கொள் கின்றனர். இந்த உண்மை அனைவரின் ஆழ்மனதிலும் இயல் பாகவே பதிந்துள்ளது.

இறைவனை அவன் கற்றுத்தந்த அடிப்படையில் வணங்கினாலே ஓரிறைக்கொள்கையில் நாம் நிலைத்திருக்க முடியும். அவரவர் மனதில் தோன்றும் எண்ணங்களுக்கு ஏற்ப இறைவனை மக்கள் வணங்க ஆரம்பித்தனர். இதனால் அவர்களே ஒப்புக்கொண்ட உண்மைக்கு எதிராக பலதெய்வக் கொள்கை அவர்களிடம் உருவாகிவிட்டது.

இஸ்லாம் மட்டுமே ஓரிறைக் கொள்கையை ஆணித்தரமாகக் கூறுவதுடன் ஓர் இறையுடன் மட்டுமே தொடர்புகொள்ளும் வழி முறைகளை மனிதனுக்கு கற்றுத்தருகின்றது. இதன் மூலம் உண்மையான இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள தொடர்பை வலுப்படுத்துகின்றது.

ஓரிறைக் கொள்கைக்குப் பங்கம் விளைவிக்கும் எல்லா நம்பிக்கைகளையும், செயல்பாடுகளையும் இஸ்லாம் தகர்த்து எறிகிறது. தவறான கொள்கைக்கு அழைப்பு விடும் காரணிகளை அறிந்து அவற்றையும் கிள்ளி எரிகிறது. ஓரிறைக் கொள்கையை விட்டு நழுவிச் செல்வதற்கான அனைத்து வழிகளையும் அடைக்கிறது. எனவேதான் இஸ்லாம் தனது தனித் தன்மையை இன்று வரை தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. இனியும் தக்க வைத்துக் கொண்டே இருக்கும்.

இஸ்லாம் கூறும் சரியான ஏகத்துவக் கொள்கையைப் பல முஸ்லிம்கள் புரியாத காரணத்தினால் ஓரிறைக் கொள்கைக்குப் பங்கம் விளைவிக்கும் இணைவைப்புக் காரியங்களில் சர்வ சாதாரணமாக ஈடுபட்டு வருகிறார்கள். இஸ்லாமும் எல்லா மதங்களைப் போன்றது என பிற மதத்தினர் நினைக்கின்ற வகையில் இவர்களின் செயல்பாடு அமைந்துள்ளது.

இணைவைப்பு என்ற பாவம் மற்ற பாவங்களைப் போன்ற தல்ல. திருட்டு, விபச்சாரம், பொய், அவதூறு போன்ற விஷயங்கள் பாவமாக இருந்தாலும் இவற்றை ஒருவன் செய்வதால் இஸ்லாத்தை விட்டு வெளியேறி விட மாட்டான். மாறாக பாவியாகி விடுவான்.

ஆனால் இணைவைப்பு என்ற பாவத்தைச் செய்து விட்டால் அவனுக்கும் இஸ்லாத்திற்கும் உள்ள தொடர்பு முறிகிறது. அவன் தன்னை முஸ்லிம் எனக் கூறிக்கொண்டாலும் இறைவனிடத்தில் அவன் முஸ்லிமாக கருதப்பட மாட்டான். இஸ்லாமிய சட்டபடியும் அவன் முஸ்லிமாக கருதப்படமாட்டான்.

ஓரிறைக் கொள்கையில் தடம் புரண்டு விடாமல் உண்மை முஸ்லிமாக மரணித்தால் தான் இம்மை மற்றும் மறுமை வாழ்வில் வெற்றி உண்டு. நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் சுருக்கமான முக்கியமான ஒரு உபதேசத்தை தனக்குச் செய்யுமாறு கேட்ட போது "ஏகத்துவக் கொள்கையை விட்டு தடம் புரண்டு விடாமல் உறுதியாக இருப்பீராக" என்றே நபி (ஸல்) அவர்கள் உபதேசித்தார்கள்.

நான் "அல்லாஹ்வின் தூதரே! இஸ்லாம் குறித்து (சுருக்கமாக) எனக்கு ஒரு விளக்கம் அளியுங்கள். 'தங்களுக்குப் பிறகு யாரிடமும்' அல்லது 'தங்களைத் தவிர வேறு யாரிடமும்' அது குறித்து நான் கேட்க வேண்டியதிருக்கலாகாது" என்று

வினவினேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "'அல்லாஹ்வின் மீது நான் நம்பிக்கை கொண்டேன்' என்று கூறி, அதில் உறுதியாக நிலைத்து நிற்பீராக!" என்று சொன்னார்கள். அறிவிப்பவர் : சுஃப்யான் பின் அப்தில்லாஹ் (ரலி). நூல் : முஸ்லிம் (62).

நபியவர்கள் கூறியவாறு ஈமானில் (ஓரிறைக் கொள்கையில்) என்றும் நிலைத்திருக்க வேண்டுமென்றால் ஏகத்துவக் கொள்கை யைப் பற்றியும் அதை தகர்த்தெரியும் இணைவைப்புக் காரியங் களைப் பற்றியும் தெளிவாக நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும். அப்போது தான் இஸ்லாத்தின் தூய கொள்கையை முழு அளவில் நம்மால் கடைப்பிடித்து முஸ்லிமாக வாழ முடியும்.

சமுதாயம் இத்தகைய நிலையை அடைவதற்கு உதவி செய்ய வேண்டும் என்ற நன்னோக்கில் இப்புத்தகம் தொகுக்கப் பட்டுள்ளது. ஏகத்துவத்தை விளக்குவதற்கு அல்லாஹ்வை மட்டும் வணங்க வேண்டும் என்று சொல்வதைக் காட்டிலும் அல்லாஹ் விற்கு எதனையும் யாரையும் இணையாக்கக் கூடாது என்று சொல்வது மிகப் பொருத்தமானதாகும்.

இணைவைப்பு என்ற நச்சுத் தன்மை மட்டும் முஸ்லிம்களிட மிருந்து அகன்று விட்டால் அவர்கள் உண்மை முஸ்லிம்களாக மாறி விடுவார்கள். எனவேதான் இப்புத்தகத்தின் பெரும்பகுதி இணைவைப்பைப் பற்றி விளக்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

எல்லாம் வல்ல இறைவன் நம் அனைவருக்கும் நேர்வழி காட்டுவானாக.

இப்படிக்கு
S. அப்பாஸ் அலீ Misc

# ஏகத்துவம்

அல்லாஹ்வின் உரிமைகள் மூன்றாகும். இந்த மூன்றிலும் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவது ஏகத்துவமாகும். அதாவது இந்த மூன்று விசயங்களிலும் அல்லாஹ் மட்டுமே தகுதியானவன் என்றும் அவனல்லாத வேறு யாருக்கும் இதில் கடுகளவு கூட பங்கில்லை என்றும் உறுதியாக நம்புவதாகும்.

1. இறைவனுடைய அதிகாரங்கள் அனைத்தும் அவன் ஒருவனுக்கு மட்டுமே உரியது. இதில் அவனுக்கு இணை ஏதும் இல்லை.
2. இறைவனுடைய தன்மைகளும் பண்புகளும் அவன் ஒருவனுக்கு மட்டுமே உண்டு. இதில் அவனுக்கு இணை ஏதும் இல்லை.
3. நாம் இறைவனை மட்டுமே வணங்க வேண்டும். அவனல்லாத வேறு யாரும் வணங்கத் தகுதியானவர் இல்லை. இவ்வாறு நம்புவது ஏகத்துவமாகும்.

மேலும் அவன் நம்புமாறு நமக்கு கட்டளையிட்ட விஷயங்களை நம்புவதும் அவன் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதும் அவன் தடுத்த காரியங்களை விட்டு விலகுவதும் ஏகத்துவமாகும்.

**ஏகத்துவம் ஒரு மாபெரும் பாக்கியம்**

செல்வமும், சொத்துக்களும் தான் பாக்கியம் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எல்லாவற்றையும் விட உயர்ந்த ஈடு இணையில்லாத ஒரு பாக்கியமாக ஏகத்துவம் இருந்து கொண்டிருக்கிறது.

அறிவால்தான் மனிதன் மற்ற உயிரினங்களை விட சிறப் புற்றுள்ளான். ஒவ்வொரு மனிதனும் அவனைப் படைத்த இறைவனை முதலில் சரியாக அறிய வேண்டும். இந்த அறிவு

ஒரு மனிதனிடம் வந்துவிட்டால் அவனுடைய இவ்வுலக வாழ்க்கை அர்த்தமுள்ள பயனுள்ள வாழ்க்கையாகி விடுகின்றது.

நற்குணங்களுக்கும் நல்லறங்களுக்கும் அடித்தளமாக ஏகத்துவம் உள்ளது. தீமைகளிலிருந்தும் தீய குணங்களிலிருந்தும் மனிதனை அது காக்கின்றது. எனவே மனிதன் இவ்வுலகிலேயே இதன் மூலம் பல்வேறு நன்மைகளை அடைகிறான். மரணித்து இறைவனிடம் சென்ற பிறகும் அவனுக்கு நிகரில்லா இன்பங்கள் வழங்கப்படுகின்றன.

எத்தனையோ கோடீஸ்வரர்களுக்கும் அரசர்களுக்கும் படித்து பட்டம் பெற்றவர்களுக்கும் கிடைக்காத ஏகத்துவ பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். இந்த வகையில் நாம் பெரும் பாக்கியவான்கள் ஆவர். எனவே இதை பெரும் பாக்கியமாக உணர்ந்து மரணிக்கும் வரை ஏகத்துவத்தை தக்க வைத்துக் கொள்ள நாம் அரும்பாடுபட வேண்டும்.

"என் முன்னோர்களான இப்ராஹீம், இஸ்ஹாக், யஃகூப் ஆகியோரின் மார்க்கத்தைப் பின்பற்றுகிறேன். அல்லாஹ்வுக்கு எதையும் நாங்கள் இணையாக்கலாகாது. இது எங்களுக்கும், மனித குலத்துக்கும் அல்லாஹ் செய்த அருள். எனினும் அதிகமான மக்கள் நன்றி செலுத்துவதில்லை." அல்குர்ஆன் (12 : 38)

ஏகத்துவத்தை கடைபிடிப்பவர் உலகில் மரியாதையாக வாழ்வார். அவரை விட கீழ் நிலையில் உள்ள கல் மரம் கால் நடைகள் போன்ற படைப்புகளையோ அவரைப் போன்ற மனிதர் களையோ வணங்கி தன் சுயமரியாதையை இழக்கமாட்டார். மாறாக அவரை விட பன்மடங்கு உயர்ந்த அல்லாஹ்வை வணங்கி கண்ணியமாக வாழ்வார்.

மேலும் அவர் ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய இடத்தில் வைத்து மதிப்பார். கல்லை கல்லாகவும் மரத்தை மரமாகவே காண்பார். கல்-லும் மரத்திலும் இல்லாத தன்மை

அதில் இருப்பதாக கருதமாட்டார். இந்த அடிப்படையில் அவர் சிறந்த அறிவாளியாக திகழ்கிறார். இவரை அறிவிலி என்றோ மூட நம்பிக்கையாளர் என்றோ பைத்தியக்காரர் என்றோ கூறமுடியாது.

மேலும் தன்னை படைத்த இறைவனை மட்டும் வணங்கும் மனிதனே இறைவன் தனக்கு வழங்கிய அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தும் சிறந்த மனிதன் ஆவான். இணைவைப்பவன் நன்றிகெட்ட தீயமனிதன் ஆவான்.

**கடைப்பிடிப்பதற்கு மிக எளிதானது**

தொழுகை நோன்பு ஹஜ் போன்ற வணக்கங்களை நிறைவேற்றுவதற்கு உடல் உழைப்பு தேவைப்படும். ஆனால் அல்லாஹ்விற்கு இணைவைக்காமல் அவனை நம்புவதற்கு எந்தக் கஷ்டமும் இல்லை.

பல பொருட்களை வழிபடுவது சிரமமாகும். சகல ஆற்றலும் கொண்ட ஒரே ஒரு இறைவனை வழிபடுவது இலகுவானதாகும். இந்த இலகுவான கொள்கையைத் தான் அல்லாஹ் முதலில் நம்மிடம் பெரிதாக எதிர்பார்க்கிறான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (மறுமையில்) நரகவாசிகளிலேயே மிக லேசான வேதனை தரப்படுபவரிடம், "பூமியிலிருக்கும் பொருள்களெல்லாம் உனக்கே சொந்தம் என்றிருந்தாலும் நீ அவற்றைப் பிணைத் தொகையாகத் தர(வும் அதன் மூலம் இந்த வேதனையிலிருந்து விடுதலை பெறவும்) நீ முன்வருவாய் அல்லவா?" என்று அல்லாஹ் கேட்பான். அதற்கு அவன், "ஆம்" என்று பதிலüப்பான்: அப்போது அல்லாஹ், "நீ ஆதமின் முதுகுத் தண்டில் (கருவாகாமல்) இருந்த போது இதை விட இலேசான ஒன்றை, எனக்கு (எதையும் எவரையும்) இணை கற்பிக்காமலிருப்பதை உன்னிடம் கேட்டிருந்தேன். ஆனால், (பூமிக்கு உன்னை அனுப்பிய போது) எனக்கு இணை கற்பிப்பதைத்

தவிர வேறெதற்குமே நீ ஒப்புக் கொள்ளவில்லை" என்று கூறுவான். அறிவிப்பவர் : அனஸ் (ரலி) நூல் : புகாரி (3334), முஸ்லிம் (2805).

**ஏகத்துவமே முதன்மையானது**

ஒவ்வொரு மனிதனும் முதலில் ஓரிறைக் கொள்கையை அறிய வேண்டும். ஏகத்துவத்தை ஏற்ற பிறகுதான் தொழுகை நோன்பு தானதர்மம் ஹஜ் நல்லறங்கள் நற்குணங்கள் கடமைகள் ஆகியவற்றை அவன் அறிய வேண்டும். ஏகத்துவம் இஸ்லாத்தின் முதல் முக்கிய தூணாக இருக்கிறது.

ஒருமனிதன் ஓரிறைக்கொள்கை விளங்காமல் இருக்கும் போது அவனிடம் இஸ்லாம் கூறும் குடும்பவியலைப் பற்றி பேசுவது சரியான செயல் இல்லை. அல்லாஹ்வின் கடமைகளை அறியாதவன் படைப்பினங்களின் கடமைகளை அறிந்து பலனில்லை.

எனவேதான் இஸ்லாமிய அழைப்புப் பணி செய்பவர்கள் முதலில் இதை நோக்கியே மக்களை அழைக்க வேண்டும். இதை விட்டுவிட்டு இன்னபிற நல்லறங்களை நோக்கி அழைக்கக்கூடாது.

இறைவன் பல்வேறு கட்டளைகளை மனிதனுக்கு இட்டுள்ளான். இக்கட்டளைகளில் முதன்மையானதும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததும் ஏகத்துவமே.

"என்னைத் தவிர வேறு யாரையும் வணங்காதீர்கள்! பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள்!" என்று உமது இறைவன் கட்டளையிட்டுள்ளான்..... உறவினருக்கும், ஏழைக்கும், நாடோடிக்கும் அவரவரின் உரிமையை வழங்குவீராக! ஒரேயடியாக வீண் விரயம் செய்து விடாதீர்! அல்குர்ஆன் (17 : 23 - 26).

அல்லாஹ்வை வணங்குங்கள்! அவனுக்கு எதையும் இணையாகக் கருதாதீர்கள்! பெற்றோர்களுக்கும், உறவினர்

களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், நெருங்கிய அண்டை வீட்டாருக்கும், தூரமான அண்டை வீட்டாருக்கும், பயணத் தோழருக்கும், நாடோடிகளுக்கும், உங்கள் அடிமைகளுக்கும் நன்மை செய்யுங்கள்! பெருமையடித்து, கர்வம் கொள்பவரை அல்லாஹ் நேசிக்க மாட்டான். அல்குர்ஆன் (4 : 36).

இந்த வசனங்களில் பெற்றோர்கள் உறவினர்கள் ஏழைகள் மற்றும் பலருக்கு நன்மை செய்ய வேண்டும் என அல்லாஹ் கட்டளையிடுகிறான். இக்கட்டளைகளுக்கு முன்பாக முதன்மை யாக அவனை மட்டுமே வணங்க வேண்டும் என்ற ஏகத்துவத்தை ஏவுகிறான். எனவே ஏகத்துவமே இறைவனுடைய கட்டளைகளில் முதன்மையானதும் முக்கியமானதுமாகும்.

நபி (ஸல்) அவர்கள் முஆத் பின் ஜபல் (ரலி) அவர்களை யமன் நாட்டுக்கு அனுப்பிய போது அவர்களிடம், "நீங்கள் வேதம் வழங்கப் பெற்ற ஒரு சமுதாயத்தாரிடம் செல்கின்றீர்கள். ஆகவே, அவர்களுக்கு முதலாவதாக, அல்லாஹ் ஒருவன் எனும் (ஏகஇறைக்) கொள்கையை ஏற்கும்படி அழைப்புக் கொடுங்கள். அதை அவர்கள் புரிந்து(ஏற்றுக்) கொண்டால், தினந்தோறும் ஐந்துநேரத் தொழுகைகளை அவர்கள் மீது அல்லாஹ் கடமையாக்கியுள்ளான் என்று அவர்களிடம் தெரிவியுங்கள். அவர்கள் (அதை ஏற்று) தொழவும் செய்தால் அவர்களிடையேயுள்ள செல்வர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அவர்களிடையேயுள்ள ஏழைகளுக்குச் செலுத்தப்படுகின்ற ஸகாத்தை அவர்களுடைய செல்வங்கபில் அல்லாஹ் கடமையாக்கியுள்ளான் என்று அவர்களிடம் தெரிவியுங்கள். அதையும் அவர்கள் ஒப்புக் கொண்டால் அவர்களிடமிருந்து (ஸகாத்தை) வசூலித்துக் கொள்ளுங்கள். (ஆனால்,) மக்களின் செல்வங்களில் சிறந்தவற்றைத் தவிர்த்திடுங்கள்" என்று

சொன்னார்கள். அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி). நூல் : புகாரி (7372).

ஏகத்துவம் என்பது மரத்தின் வேர் போன்றது. கட்டிடத்தின் அஸ்திவாரம் போன்றது. அஸ்திவாரம் இல்லாமல் எழுப்பப்படுகின்ற கட்டிடம் நிற்காது.

**மறைவான விஷயங்களை நம்ப வேண்டும்**

ஒரு முஸ்லிம் அவசியம் நம்ப வேண்டிய விஷயங்களை இறைத் தூதர் (ஸல்) அவர்கள் நமக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இவற்றை நம்பினால் தான் ஓரிறைக் கொள்கையை ஏற்றவர்களாக நாம் இருக்க முடியும். இவற்றை மறுத்து விட்டால் இறை மறுப்பாளர்களாக மரணிக்கும் நிலை ஏற்படும்.

அல்லாஹ்வையும், தூதர்களையும், வானவர்களையும், வேதங்களையும், சொர்க்கம் நரகத்தையும், மறுமையையும், மண்ணறை வாழ்க்கையையும் விதியையும் நாம் நம்ப வேண்டும்.

உங்கள் முகங்களை கிழக்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ திருப்புவது நன்மையன்று. மாறாக அல்லாஹ், இறுதிநாள், வானவர்கள், வேதம், மற்றும் நபிமார்களை நம்புவோரே நன்மை செய்பவர்கள். அல்குர்ஆன் (2 : 177)

நாங்கள் ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் அருகில் இருந்தபோது தூய வெண்ணிற ஆடை அணிந்த, அடர் கறுப்பு நிறத்தில் தலைமுடி உடைய ஒரு மனிதர் வந்தார். பயணத்தில் வந்த எந்த அடையாளமும் அவரிடம் காணப்பட வில்லை; எங்களில் எவருக்கும் அவரை (யார் என)த் தெரிய வில்லை. அவர் நபி (ஸல்) அவர்களின் அருகில் (சென்று), தம் முழங்கால்களை நபியவர்களின் முழங்கால்களோடு இணைத்துக் கொண்டு (நெருக்கமாக) அமர்ந்தார். அவர் தம் கைகளைத் தம் தொடைகள்மீது வைத்(து பவ்வியமாக அமர்ந்)தார். பிறகு

"முஹம்மதே! இஸ்லாம் (அடிபணிதல்) என்றால் என்னவென்று எனக்குத் தெரிவியுங்கள்" என்று கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இஸ்லாம் என்பது, அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் முஹம்மத் (ஆகிய நான்) அல்லாஹ்வின் தூதர் என்றும் நீங்கள் உறுதி கூறுவதாகும். மேலும், தொழுகையைக் கடைப்பிடிப்பதும், ஸகாத்தை வழங்கிவருவதும், ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பதும், சென்றுவர இயன்றால் இறையில்லம் கஅபாவில் "ஹஜ்' செய்வதும் ஆகும்" என்று பதிலளித்தார்கள். அதற்கு அந்த மனிதர் "உண்மைதான்" என்றார். அவர் இவ்வாறு கூறியதைக் கேட்டு, அவரே கேள்வியும் கேட்டுவிட்டு அவரே நபி (ஸல்) அவர்கள் அளித்த பதிலை உறுதிப்படுத்தவும் செய்கிறாரே என்று நாங்கள் வியப்படைந்தோம். அடுத்து அவர், "ஈமான் (இறைநம்பிக்கை) பற்றி எனக்குத் தெரிவியுங்கள்" என்று கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் நீங்கள் நம்புவதாகும்; நன்மை, தீமை அனைத்தும் விதியின்படியே நடக்கின்றன என்றும் நீங்கள் நம்புவதுமாகும்" என்று கூறினார்கள். அதற்கும் அம்மனிதர் "உண்மைதான்" என்றார். அறிவிப்பவர் : உமர் (ரலி) நூல் : முஸ்லிம் (08).

**கலிமாவை எப்படி மொழிய வேண்டும்?**

லாயிலாஹ இல்லல்லாஹு (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாருமில்லை) என்ற சொல் ஏகத்துவத்தின் தாரக மந்திரமாகும். இதை ஒருவன் மனப்பூர்வமாக ஏற்று பகிரங்கமாக மொழிந்தாலே அவன் இறைவனிடம் முஸ்லிம் ஆவான். இதன் மூலம் மனிதன் இஸ்லாமிற்குள் நுழைகிறான். இவ்வுலக வாழ்க்கையை விட்டு

அவன் பிரியும் போது கடைசியாக இதை அவன் மொழிந்தால் மறுஉலக வாழ்வில் அவன் வெற்றி யடைகிறான்.

அப்படிப்பட்ட இவ்வார்த்தையின் பொருளை விளங்காமல் இதன் கருத்துக்கு மாற்றமாக செயல்பட்டுக் கொண்டிருந்தால் இந்த வார்த்தையை வாயால் மொழிவதால் மட்டும் எந்தப் பயனும் ஏற்படாது.

லாயிலாஹ இல்லல்லாஹு என்ற வார்த்தையின் பொருளை விளங்கி செயல்படாத காரணத்தினால் தான் சமுதாய மக்கள் இணைவைப்பில் இலகுவாக ஈடுபட்டு விடுகிறார்கள். வணக்கத் திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் கிடையாது என்று வாயால் மொழிவதோடு அதைப் புரிந்து செயல்பட வேண்டும் என்று திருக்குர்ஆனும் நபிமொழியும் கட்டளை யிடுகிறது.

(முஹம்மதே!) அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்பதை அறிந்து கொள்வீராக! அல்குர்ஆன் (47 : 19)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்பதை அறிந்தவராக எவர் மரணிக்கிறாரோ அவர் சொர்க்கம் புகுந்துவிட்டார். அறிவிப்பவர் : உஸ்மான் பின் அஃப்பான் (ரலி). நூல் : அஹ்மத் (434).

இந்தக் கலிமா கூறும் கருத்தை மனதில் ஆழப்பதித்து அதில் தடம் புரளாமல் உறுதியாக வாழ்ந்து வந்தால் தான் சொர்க்கம் கிடைக்கும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்றும் உளப்பூர்வமாக உறுதி கூறும் எவருக்கும் அல்லாஹ் நரகத்தைத் தடை செய்து

விட்டான். அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி). நூல் : புகாரி (128).

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று யார் தமது உள்ளத்தால் உறுதியாக நம்பிச் சான்று கூறுகின்றாரோ அவரைத் தோட்டத்திற்கு அப்பால் நீ சந்தித்தால் அவருக்குச் சொர்க்கம் கிடைக்கவிருக்கிறது என்று நற்செய்தி சொல்!" என்று நபி (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி) நூல் : முஸ்லிம் (52).

**வெற்றியை பெற்றுத் தரும் வார்த்தை**

லாயிலாஹ இல்லல்லாஹு என்ற வார்த்தையை முறையான அடிப்படையில் புரிந்து அதன் கருத்திற்கு முரணில்லாத வகையில் நமது செயல்பாடுகளை அமைத்துக் கொண்டால் இந்த வார்த்தை மறுமையில் நமக்கு மிகப் பலனாக இருக்கும். நன்மை தீமைகள் எடை போடப்படும் தராசில் மிகுந்த எடை கொண்ட நன்மையாக இந்த வார்த்தை விளங்கும். நமது பாவங்கள் இதன் மூலம் மன்னிக்கப்படும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மறுமை நாளில் படைப்பினங்கள் கூடியிருக்கும் போது எனது சமூகத்தைச் சார்ந்த ஒருவர் தெரிவு செய்து அழைக்கப்படுவார். அவரிடம் தொன்னூற்று ஒன்பது (பாவ) ஏடுகள் விரித்துக் காட்டப்படும். ஒவ்வொரு (பாவ) ஏடும் பார்வை எட்டுகின்ற அளவிற்கு (பெரிதாக) இருக்கும். இவற்றில் எதையாவது நீ மறுக்கிறாயா? காவலர்களான எனது எழுத்தாளர்கள் (வானவர்கள்) உனக்கு அநியாயம் செய்து விட்டார்களா? என்று அல்லாஹ் அவரிடம் கேட்பான். "எனது இறைவா இல்லை" என்று அவர் கூறுவார். (பாவங்கள் செய்ததற்கான) காரணம் ஏதும் உன்னிடத்தில் உண்டா? என்று இறைவன் கேட்பான். எனது இறைவா இல்லை என்று அவர் கூறுவார். "உனக்கு நம்மிடத்தில்

நல்ல வாழ்வே உள்ளது. இன்றைய தினம் நீ அநீதியிழைக்கப்பட மாட்டாய்" என்று இறைவன் கூறுவான். அப்போது ஒரு சிறிய அட்டை வெளிவரும். அதில் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. முஹம்மத் அல்லாஹ்வின் அடிமையாகவும் தூதராகவும் உள்ளார் என்று நான் நம்புகிறேன்) என்று இருக்கும். உன்னுடைய (நன்மை தீமையின்) எடையை நிறுத்துப்பார் என்று அல்லாஹ் கூறுவான். அதற்கு அவர் "எனது இறைவா இந்தப் பெரும் (பாவ) ஏடுகள் இருக்கும் போது இந்தச் சிறிய அட்டை என்னவாகும்" என்று கேட்பார். அதற்கு இறைவன் உனக்கு அநீதி இழைக்கப்பட மாட்டாது என்று கூறுவான். பெரும் (பாவ) ஏடுகள் (தராசின்) ஒரு தட்டிலும் அந்தச் சிறிய அட்டை மறு தட்டிலும் வைக்கப்படும். அந்த பெரும் ஏடுகள் எடை குறைந்து விடும். சிறிய அட்டை கனத்து விடும். அல்லாஹ்வின் பெயர் இருக்கும் போது எதுவும் கனக்காது. அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரலி) நூல் : திர்மிதி (2563).

# இணைவைப்பு

**அல்லாஹ்வை நம்பும் மக்களிடம் இணைவைப்பு**

ஓரிறைக்கொள்கையை சரியாக விளங்காவிட்டால் அல்லாஹ்வை ஒருபுறம் நம்பிக்கொண்டு அவனுக்கு இணை கற்பிக்கின்ற நிலை ஏற்படும். நம் சமுதாயத்தில் கூட பலருடைய நிலை இவ்வாறு உள்ளது.

அவர்களில் பெரும்பாலோர் இணை கற்பிப்போராகவே தவிர அல்லாஹ்வை நம்புவதில்லை. அல்குர்ஆன் (12 : 106).

நபி (ஸல்) அவர்கள் இந்த உலகத்தை விட்டுப் பிரியும் போது இணைவைக்காமல் ஓரிறைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் மாபெரும் சமுதாயத்தை உருவாக்கிச் சென்றார்கள்.

இதன் பிறகு வரக்கூடிய சமூகத்தாரில் பலர் நபியவர்கள் ஒழித்துவிட்டுச் சென்ற இணைவைப்பில் விழுவார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் முன்னறிவுப்புச் செய்துள்ளார்கள். அவர்கள் கூறியது போல் தன்னை முஸ்லிம் என்று கூறிக்கொண்டு இணைவைத்துக் கொண்டிருக்கின்ற மக்களைத் தற்காலத்தில் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எனது சமூகத்தில் சில கூட்டத்தார்கள் இணைவைப்பாளர்களுடன் இணையும் வரை மறுமை நாள் வராது. என் சமூகத்தாரில் சில கூட்டத்தினர் சிலைகளை வணங்கும் வரை மறுமை நாள் வராது. அறிவிப்பவர் : சவ்பான் (ரலி) நூல் : அபூதாவுத் (3710).

இணைவைப்புக் குறித்து தெளிவாக அறிந்துகொண்டாலே அதில் விழாமல் நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

**இணைவைப்பு என்றால் என்ன?**

1. படைத்து பரிபாலித்தல் .
2. உயர்வான தன்மைகளும் பண்புகளும் .

3. வணக்கவழிபாடுகள் .

இவை மூன்றும் அல்லாஹ்வின் உரிமைகளாகும்.

அவனைப் போல் எதுவும் இல்லை. அவன் செவியுறுபவன்; பார்ப்பவன். அல்குர்ஆன் (42 : 11)

அவனுக்கு நிகராக யாருமில்லை. அல்குர்ஆன் (112 : 4)

அவனுக்கு இணையாளன் யாருமில்லை. அல்குர்ஆன் (6 : 163)

மேற்கண்ட வசனங்கள் தான் இணைவைப்பைப் புரிந்து கொள்வதற்கு அடிப்படையாகும். முதல் வசனத்தில் இறைவனுக்குப் பார்க்கும் கேட்கும் ஆற்றல் உள்ளது என்று கூறப்படுவதுடன் அவனைப் போன்று யாருமில்லை என்பதும் சேர்த்து கூறப்படுகிறது.

அல்லாஹ்வைப் போன்று எதுவும், எவரும் இருக்க முடியாது. அவனுடைய தன்மைகள் பண்புகள் ஆற்றல்கள் செயல்பாடுகளைப் போன்று எவரது தன்மைகளும், பண்புகளும், ஆற்றல்களும், செயல்பாடுகளும் இல்லை. அவனுக்கு நாம் செலுத்த வேண்டிய வணக்கத்தை அவனல்லாத வேறுயாருக்கும் செலுத்தக்கூடாது.

இவற்றில் ஏதாவது ஒன்றில் அவனல்லாத மற்றவர்களுக்கும் பங்குண்டு என்று நம்புவதும் இதன்படி செயல்படுவதும் இணைவைப்பாகும்.

# இணைவைப்பின் வகைகள்

## 1. அல்லாஹ்வின் அதிகாரத்தில் இணையில்லை

அல்லாஹ்வின் அதிகாரத்திற்கு மட்டும் உட்பட்ட விஷயங்களைப் பிறராலும் செய்ய முடியும் என்று நம்பினால் அது இணைவைப்பாகும். உதாரணமான எந்த மூலப் பொருளும் இல்லாமல் ஆகு எனக் கூறி படைத்தல், வானம் பூமி சூரியன் சந்திரன் கடல் ஆகியவற்றைப் படைத்து நிர்வாகம் செய்தல் மழையை வரவழைப்பது, பஞ்சத்தைக் கொடுப்பது, வறுமையை நீக்குவது, செல்வத்தை வழங்குவது, குழந்தையைத் தருவது, கவலையை அகற்றுவது, மரணிக்கச் செய்வது, உயிர் கொடுப்பது இது போன்ற படைத்து பரிபாலிக்கும் காரியங்களை அல்லாஹ் மட்டுமே செய்கிறான். இதை அவனல்லாத வேறு எவராவது செய்வார் என்று நம்பினால் இது இணைவைப்பாகும்.

அவன் இரவைப் பகலில் நுழைக்கிறான். பகலை இரவில் நுழைக்கிறான். சூரியனையும், சந்திரனையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறான். ஒவ்வொன்றும் குறிப்பிட்ட காலக்கெடு வரை செல்கின்றன. அவனே அல்லாஹ்; உங்கள் இறைவன். அவனுக்கே அதிகாரம். அவனன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள், அணுவளவும் அதிகாரம் படைத்தவர்களல்லர். அல்குர்ஆன் (35 : 13).

அவனுக்கே வானங்கள் மற்றும் பூமியின் அதிகாரம் உள்ளது. அவன் பிள்ளையை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அதிகாரத்தில் அவனுக்கு எந்தப் பங்காளியும் இல்லை. அவன் ஒவ்வொரு பொருளையும் படைத்தான். அதைத் திட்டமிட்டு அமைத்தான். அல்குர்ஆன் (25 : 2).

"வானங்களையும், பூமியையும் படைத்தவன் யார்?" என்று அவர்களிடம் நீர் கேட்டால் "அல்லாஹ்" என்று கூறுவார்கள். "அல்லாஹ்வையன்றி நீங்கள் பிரார்த்திப்பவற்றைப் பற்றிக்

கூறுங்கள்!" என்று கேட்பீராக! "அல்லாஹ் எனக்கு ஒரு தீங்கை நாடி விட்டால் அவனது தீங்கை அவர்கள் நீக்கி விடுவார்களா? அல்லது அவன் எனக்கு அருளை நாடினால் அவர்கள் அவனது அருளைத் தடுக்கக் கூடியவர்களா? அல்லாஹ் எனக்குப் போதும். சார்ந்திருப்போர் அவனையே சார்ந்திருப்பார்கள்" என்று கூறுவீராக! அல்குர்ஆன் (39 : 38)

யூத மத அறிஞர்களில் ஒருவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, "முஹம்மதே! அல்லாஹ், வானங்களை ஒரு விரல் மீதும், பூமிகளை ஒரு விரல் மீதும், மரங்களை ஒரு விரல் மீதும், தண்ணீர் மற்றும் ஈரமான மண்ணை ஒரு விரல் மீதும், இதரப் படைப்பினங்களை ஒரு விரல் மீதும் வைத்துக் கொண்டு, "நானே (ஏகாதிபத்தியம் உள்ள) அரசன்" என்று சொல்வான் என நாங்கள் (எங்களது வேத நூலான தவ்ராத்தில்) கண்டோம்" என்று சொன்னார். இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் அந்த அறிஞரின் கருத்தை உண்மையென ஆமோதிக்கும் விதத்தில், தமது கடைவாய்ப் பற்கள் தெரியச் சிரித்தார்கள். பிறகு, "அவர்கள் அல்லாஹ்வை எவ்வாறு மதிக்க வேண்டுமோ, அவ்வாறு மதிக்கவில்லை. மறுமை நாளில் பூமி முழுவதும் அவன் கைப்பிடியில் இருக்கும். வானங்கள் அவனது வலக்கரத்தில் சுருட்டப்பட்டிருக்கும். அவர்கள் இணைவைப்பவற்றிலிருந்து அவன் தூயவன்; உயர்ந்தவன்" எனும் (39:67ஆவது) வசனத்தை ஓதினார்கள். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) நூல் : புகாரி (4811).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (மறுமை நாளில்) அல்லாஹ் பூமியைத் தனது கைப்பிடிக்குள் அடக்கிக் கொள்வான்; வானங்களைத் தனது வலக்கரத்தில் சுருட்டிக் கொள்வான்; பிறகு, "நானே அரசன்! எங்கே பூமியின்

அரசர்கள்?" என்று கேட்பான். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) நூல் : புகாரி (4812).

**அதிகாரத்தில் தலையிட எவருக்கும் அனுமதியில்லை**

நேர்வழிகாட்டுதல் வழிகேட்டில் விடுதல் தண்டித்தல் மன்னித்தல் அழித்தல் காத்தல் தான் நாடியதை செய்தல் இவையும் அல்லாஹ்வின் அதிகாரங்களாகும்.

தன்னுடைய அதிகாரத்தில் பிறர் தலையிடுவதை அல்லாஹ் ஒரு போதும் ஒத்துக் கொள்ளவே மாட்டான். அநியாயம் புரிந்து கொண்டிருந்த தன் சமுதாயத்தை அழிக்குமாறு யூனுஸ் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தார்கள்.

அச்சமுதாயத்தினர் அல்லாஹ்வின் வேதனை வருவதைக் கண்ட போது மனம் திருந்தி இறைவனிடம் பாதுகாப்புக் கோரினார்கள். அவர்களின் வேண்டுதலை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு யூனுஸ் (அலை) அவர்கள் செய்த பிரார்த்தனையை நிராகரித்து விட்டான்.

இதனால் யூனுஸ் (அலை) அவர்கள் அல்லாஹ்விடத்தில் கோபித்துக் கொண்டார்கள். தண்டிப்பதும், தண்டிக்காமல் மன்னித்து விடுவதும் இறைவனின் அதிகாரம். இதை யூனுஸ் (அலை) அவர்கள் மறந்து அல்லாஹ்விடம் கோபம் கொண்ட போது அல்லாஹ் அவர்களைக் கண்டிக்கிறான்.

உமது இறைவனின் தீர்ப்புக்காகப் பொறுத்திருப்பீராக! மீனுடையவர் (யூனுஸ்) போல் நீர் ஆகி விடாதீர்! அவர் துக்கம் நிறைந்தவராக (இறைவனை) அழைத்தார். அவரது இறைவனிடமிருந்து அவருக்கு அருள் கிடைத்திருக்கா விட்டால் அவர் இழிந்தவராக வெட்ட வெளியில் எறியப்பட்டிருப்பார். ஆயினும் அவரை அவரது இறைவன் தேர்வு செய்தான். அவரை நல்லவராக்கினான். அல்குர்ஆன் (68 : 48 - 50)

உஹுதுப் போரில் எதிரிகளால் நபியவர்களின் பற்கள் உடைக்கப்பட்டு இரத்தம் ஓடிய போது வேதனையில் தன்னைத் தாக்கிய எதிரிகள் வெற்றி பெற முடியாது என்ற கருத்தை நபி (ஸல்) அவர்கள் தெரிவித்து விடுகிறார்கள்.

போரில் வெற்றியை அளிப்பதும், தோல்வியை அளிப்பதும் இறைவனின் அதிகாரமாகும். எனவே நபி (ஸல்) அவர்கள் வேதனையிலிருந்தாலும் இவ்வாறு கூறியதற்காக அல்லாஹ் அவர்களைக் கண்டித்து வசனத்தை இறக்கினான்.

உஹுதுப் போர் நாளில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய முன்வாய்ப் பற்களில் (கீழ் வரிசையில் வலப்புறப் பல்) ஒன்று உடைக்கப்பட்டது. அவர்களது முகம் காயப்படுத்தப் பட்டது. அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் காயத்திலிருந்து வழிந்த இரத்தத்தைத் துடைத்தபடியே, "தங்களுடைய நபியைக் காயப்படுத்தி, அவரது பல்லை உடைத்த ஒரு சமுதாயம் எப்படி உருப்படும்? அவரோ அவர்களை அல்லாஹ் வின் பக்கம் அழைத்துக் கொண்டிக்கிறார்"என்று கூறலானார்கள்.

அப்போது தான் வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், "(நபியே!) அதிகாரத்தில் உமக்கு எந்தப் பங்கும் இல்லை" (3:128) எனும் வசனத்தை அருளினான். அறிவிப்பவர் : அனஸ் (ரலி) நூல் : முஸ்லிம் (3667).

ஒருவர் எவ்வளவு பாவங்களைச் செய்தாலும் அவரை அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான் என்று நாம் கூறிவிடக் கூடாது. ஏனென்றால் மன்னிப்பதும், மன்னிக்காமல் இருப்பதும் இறை வனின் அதிகாரமாகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (முற் காலத்தில் வாழ்ந்த) ஒரு மனிதர், "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இன்ன மனிதனை அல்லாஹ் மன்னிக்க மாட்டான்"

என்று கூறினார். அல்லாஹ், "இன்ன மனிதனை நான் மன்னிக்க மாட்டேன் என என்மீது சத்தியமிட்டுச் சொன்னவன் யார்? நான் அந்த மனிதனை மன்னித்து விட்டேன். உன் நல்லறங்களை அழித்து விட்டேன்" என்றோ, அதைப் போன்றோ கூறினான். அறிவிப்பவர் : ஜுன்தப் பின் அப்தில்லாஹ் (ரலி) நூல் : முஸ்லிம் (5115).

## இறைவனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவைகள்

### காத்தல் அல்லாஹ்வின் அதிகாரம்

அழிவுகளிலிருந்தும், ஆபத்துகளிலிருந்தும் காக்கும் ஆற்றல் அல்லாஹ்விற்கு மட்டுமே உள்ளது.

"அல்லாஹ்வையன்றி நீங்கள் கற்பனை செய்தோரைப் பிரார்த்தித்துப் பாருங்கள்! உங்களை விட்டும் கஷ்டத்தை நீக்கவோ மாற்றவோ அவர்களுக்கு இயலாது" என்று கூறுவீராக! அல்குர்ஆன் (17: 56).

அல்லாஹ்வே சிறந்த பாதுகாவலன். அவன் கருணையாளர் களில் மிகப் பெரும் கருணையாளன்". அல்குர்ஆன் (12 : 64).

மனிதனுக்கு முன்னரும், பின்னரும் தொடர்ந்து வருவோர் (வானவர்) உள்ளனர். அல்லாஹ்வின் கட்டளைப்படி அவனைக் காப்பாற்றுகின்றனர். தம்மிடம் உள்ளதை ஒரு சமுதாயம் மாற்றிக் கொள்ளாத வரை அச்சமுதாயத்தில் உள்ளதை அல்லாஹ் மாற்ற மாட்டான். ஒரு சமுதாயத்திற்கு அல்லாஹ் தீங்கை நாடும் போது அதைத் தடுப்போர் இல்லை. அவர்களுக்கு அவனன்றி உதவி செய்பவரும் இல்லை. அல்குர்ஆன் (13 : 11).

### பாக்கியங்களை வழங்குதல்

மனிதர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அல்லாஹ்வே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறான். இதை அறியாத காரணத்தினால் தர்ஹாக்களுக்குச் சென்று இறந்து விட்ட மனிதரி

டத்தில் தங்கள் தேவைகைள வேண்டி இறைவனுக்கு இணை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உங்களிடம் உள்ள ஒவ்வொரு அருட்கொடையும் அல்லாஹ் வுடையது. பின்னர் உங்களுக்கு ஒரு தீங்கு ஏற்பட்டால் அவனிடமே முறையிடுகின்றீர்கள். அல்குர்ஆன் (16 : 53).

நீங்கள் கேட்ட ஒவ்வொன்றையும் அவன் உங்களுக்கு வழங்கி னான். அல்லாஹ்வின் அருட்கொடையை நீங்கள் எண்ணினால் அதை உங்களால் எண்ண முடியாது. மனிதன் அநீதி இழைப்பவன்; நன்றி கெட்டவன். அல்குர்ஆன் (14 : 34)

மனிதர்களே! உங்களுக்கு அல்லாஹ் செய்துள்ள அருளை எண்ணிப் பாருங்கள்! வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உங்க ளுக்கு உணவளிக்கும் அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பவன் உண்டா? அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. எவ்வாறு திசை திருப்பப்படுகிறீர்கள்? அல்குர்ஆன் (35 : 3)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் படுக்கைக்குச் செல்லும் போது "அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனா வ சகானா வ கஃபானா வ ஆவானா. ஃபகம் மிம்மன் லா காஃபிய லஹு, வலா முஃவிய" என்று கூறுவார்கள்.

(பொருள்: அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனே நமக்கு உணவளித்தான்; குடிநீர் வழங்கினான்; (நம் தேவைகளை நிறைவேற்றி) போதுமான அளவுக்குக் கொடுத்தான்; (தங்க இடமளித்து) தஞ்சமளித்தான். ஆனால், போதுமாக்கி வைப்பதற்கோ தஞ்சமளிப்பதற்கோ ஆளில்லாமல் எத்தனையோ பேர் இருக்கின்றனர்.) அறிவிப்பவர் : அனஸ் (ரலி). நூல் : முஸ்லிம் (5258).

**குழந்தை பாக்கியத்தைத் தருவது அல்லாஹ்வின் அதிகாரம்**

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் தர்ஹாக்களையும், கோயில்களையும் கிறித்தவ ஆலயங்களையும் நோக்கிச் சென்று சக்தியற்ற மனிதர்களிடம் இந்த பாக்கியத்தை வேண்டுகிறார்கள்.

திருமணத்தில் வாழைக் குலையைத் தொங்க விட்டால் குழந்தைச் செல்வம் பெருகும் என்று நம்புகிறார்கள். இதுவெல்லாம் இணைவைப்பாகும். ஏனென்றால் குழந்தையைத் தரும் ஆற்றல் அல்லாஹ் ஒருவனுக்கே உள்ளது.

வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அவன் நாடியதைப் படைக்கிறான். தான் நாடியோருக்குப் பெண்(குழந்தை)களை வழங்குகிறான். தான் நாடியோருக்கு ஆண் (குழந்தை)களை வழங்குகிறான். அல்லது ஆண்களையும், பெண் களையும் சேர்த்து அவர்களுக்கு வழங்குகிறான். தான் நாடியோரை மலடாக ஆக்குகிறான். அவன் அறிந்தவன்; ஆற்றலுடையவன். அல்குர்ஆன் (42 : 49)

**அல்லாஹ்விடம் மட்டுமே குழந்தை பாக்கியத்தைக் கேட்க வேண்டும்.**

குழந்தை பாக்கியத்தைக் கொடுக்காமல் இறைத் தூதர்களை அல்லாஹ் கடுமையாகச் சோதித்தான். ஆனால் அவர்கள் எந்த நிலையிலும் இறைவனை விட்டு விட்டு மற்றவர்களிடத்தில் சென்று குழந்தை பாக்கியத்தைத் தருமாறு பிரார்த்தித்து இணைவைப்பில் விழுந்துவிடவில்லை. மாறாக இறுதிவரை அவன் ஒருவனிடம் மன்றாடிக் கொண்டிருந்தார்கள்.

இறைவனிடம் பல வருடங்களாகப் பிரார்த்தனை செய்து குழந்தை பிறக்காவிட்டாலும் அல்லாஹ்வின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை இழந்து விடக்கூடாது. தொடர்ந்து வேண்டிக் கொண்டே இருக்க வேண்டும். அவன் நாடினால் முதிய வயதில் கூட குழந்தை பாக்கியத்தைக் கொடுத்து விடுவான்.

ஸக்கரிய்யா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆழமான நம்பிக்கை வைத்திருந்தார்கள். முதிய வயதை அடைந்த போதும் அல்லாஹ்விடத்திலே குழந்தை பாக்கியத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

என் இறைவா! என் எலும்பு பலவீனமடைந்து விட்டது. தலையும் நரையால் மின்னுகிறது. என் இறைவா! உன்னிடம் பிரார்த்தித்ததில் நான் துர்ப்பாக்கியசாலியாக இருந்ததில்லை. எனக்குப் பின் உறவினர்கள் குறித்து நான் அஞ்சுகிறேன். என் மனைவியும் பிள்ளைப்பேறு அற்றவளாக இருக்கிறார். எனவே ஒரு பொறுப்பாளரை நீ எனக்கு வழங்குவாயாக! எனக்குப் பின் உறவினர் கள் குறித்து நான் அஞ்சுகிறேன். என் மனைவியும் பிள்ளைப்பேறு அற்றவளாக இருக்கிறார். எனவே ஒரு பொறுப்பாளரை நீ எனக்கு வழங்குவாயாக! அவர் எனக்கும், யஃகூபின் குடும்பத்தாருக்கும் வாரிசாவார். என் இறைவா! அவரை (உன்னால்) பொருந்திக் கொள்ளப்பட்டவராக ஆக்குவாயாக!" என்று (ஸக்கரிய்யா) கூறினார். அல்குர்ஆன் (19 : 4 - 6).

அங்கே தான் ஸகரிய்யா தன் இரட்சகனிடம் பிரார்த்தித்து "இறைவா! உன்னிடமிருந்து எனக்கொரு தூய குழந்தையைத் தருவாயாக! நிச்சயமாக நீ வேண்டுதலைச் செவியுறுபவன்" என்று கூறினார். அல்குர்ஆன் (3 : 38).

"எங்கள் இறைவா! எங்கள் வாழ்க்கைத் துணைகளிலிருந்தும், மக்களிலிருந்தும் எங்களுக்குக் கண் குளிர்ச்சியைத் தருவாயாக! (உன்னை) அஞ்சுவோருக்கு முன்னோடியாகவும் எங்களை ஆக்குவாயாக!" என்று (நல்லடியார்கள்) கூறுகின்றனர். அல்குர்ஆன் (25 : 74).

**வறுமையை நீக்குதல்**

வறுமை நீங்கி செல்வம் கொழிக்க வேண்டும் என்பதற்காக மனிதன் எத்தனையோ மூட நம்பிக்கைகளிலும் இணைவைப்புக்

காரியங்களிலும் விழுகிறான். ஆனால் வறுமையை நீக்கும் சக்தி அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே உள்ளது என்பதை இவர்கள் விளங்கியிருந்தால் ஒரு போதும் மற்றவர்களை நாடிச் செல்லவே மாட்டார்கள்.

வானங்கள் மற்றும் பூமியின் திறவு கோல்கள் அவனுக்கே உரியன. தான் நாடி யோருக்குச் செல்வத்தை அவன் தாராளமாக வழங்குகிறான். குறைத்தும் வழங்குகிறான். அவன் ஒவ்வொரு பொருளையும் அறிந்தவன். அல்குர்ஆன் (42 : 12).

((முஹம்மதே!) உமக்கு முன் சென்ற சமுதாயங்களுக்கும் தூதர்களை அனுப்பினோம். அவர்கள் பணிவதற்காக அவர்களை வறுமையாலும், நோயாலும் தண்டித்தோம். அல்குர்ஆன் (6 : 42).

உம்மை வறுமையில் கண்டு தன்னிறைவு பெற்றவராக் கினான். அல்குர்ஆன் (93 : 8).

**மழையை வரவழைத்தல்**

மழை பொழிய வேண்டும் என்பதற்கு எத்தனையோ மூடப் பழக்க வழக்கங்களையும் இணைவைப்புக்காரியங்களை மக்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். மழையைக் கொடுக்கும் ஆற்றல் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டும் இருப்பதால் மழையை அவனிடம் வேண்டுவதைத் தவிர வேறு காரியங்களில் ஈடுபடக் கூடாது.

"உங்கள் தண்ணீர் வற்றி விட்டால் ஊறி வரும் நீரை உங்களுக்குக் கொண்டு வருபவன் யார் என்பதற்குப் பதில் சொல்லுங்கள்!" எனக் கேட்பீராக! அல்குர்ஆன் (67 : 30).

அவனே பூமியை உங்களுக்கு விரிப்பாகவும், வானத்தை முகடாகவும் அமைத்தான். வானிலிருந்து தண்ணீரையும் இறக்கினான். அதன் மூலம் கனிகளை உங்களுக்கு உணவாக (பூமியிலிருந்து) வெளிப்படுத்தினான். எனவே அறிந்து கொண்டே

அல்லாஹ்வுக்கு நிகராக எவரையும் கற்பனை செய்யாதீர்கள்! அல்குர்ஆன் (2 : 22).

அவனே வானிலிருந்து தண்ணீரை இறக்கினான். அதன் மூலம் ஒவ்வொரு பொருளின் விளைச்சலையும் வெளிப்படுத்து கிறோம். அதிலிருந்து பசுமையான பயிர்களை வெளிப்படுத்து கிறோம். அடுக்கி வைக்கப்பட்ட தானியத்தை அப்பயிர்களில் வெளிப்படுத்துகிறோம். பேரீச்சை மரத்தின் பாளைகளில் தொங்கும் பழக்குலைகளையும், திராட்சைத் தோட்டங்களையும், ஒலிவமரம், மாதுளை ஆகியவற்றையும் (வெளிப் படுத்துகிறோம்.) அவ்விரண் டும் (தோற்றத்தில்) ஒன்றுபட்டதாகவும், (தன்மையில்) வேறுபட்ட தாகவும் உள்ளன. அது பலன் கொடுக்கும் போது அதன் பலனையும், அது கனிவதையும் கவனியுங்கள்! நம்பிக்கை கொள்ளும் சமுதாயத் திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன.' அல்குர்ஆன் (6 : 99).

**துன்பத்தை நீக்குதல் அல்லாஹ்வின் ஆற்றல்**

துன்பங்கள் வரும் போது முஹ்யத்தீனே, அப்துல்காதிர் ஜீய்லானியே என்று அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பது இணைவைப்பாகும். ஏனென்றால் துன்பத்தை நீக்குவது அல்லாஹ்வின் அதிகாரத்திற்குள் உட்பட்டதாகும்.

தமக்கு ஏதேனும் துன்பம் ஏற்படும் போது "நாங்கள் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; நாங்கள் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள்" என்று அவர்கள் கூறுவார்கள். அல்குர்ஆன் (2 : 156).

அல்லாஹ் உமக்கு துன்பத்தை ஏற்படுத்தினால் அவனைத் தவிர அதை நீக்குபவன் யாருமில்லை. அவன் உமக்கு நன்மையை ஏற்படுத்தி விட்டால் அவன் அனைத்துப் பொருட்களின் மீது ஆற்றலுடையவன். அல்குர்ஆன் (6 : 17).

"அல்லாஹ்வையன்றி நீங்கள் கற்பனை செய்தோரைப் பிரார்த்தித்துப் பாருங்கள்! உங்களை விட்டும் கஷ்டத்தை

நீக்கவோ மாற்றவோ அவர்களுக்கு இயலாது" என்று கூறுவீராக! அல்குர்ஆன் (17 : 56).

"எனக்குத் துன்பம் நேர்ந்து விட்டது. நீ கருணையாளர்களுக் கெல்லாம் கருணையாளன்" என அய்யூப் தமது இறைவனை அழைத்த போது, அவரது பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டோம். அவருக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்கினோம். அவரது குடும்பத்தா ரையும் அவர்களுடன் அவர்களைப் போன்றோரையும் நம் அருளாக அவருக்கு வழங்கினோம். வணங்குவோருக்கு இது அறிவுரை. அல்குர்ஆன் (21 : 83, 84).

**நோயை குணப்படுத்துதல் அல்லாஹ்வின் அதிகாரம்**

நோயை நீக்கும் ஆற்றல் அல்லாஹ்விற்கு மட்டும் உரியது. அல்லாஹ்வைத் தவிர்த்து அவன் குணப்படுத்துவது போல் மற்றவரோ, மற்ற பொருளோ நோயை நீக்கும் சக்தி கொண்டது என்று நம்பினால் அது இணைவைப்பாகிவிடும்.

எந்த ஊருக்கு நபியை நாம் அனுப்பினாலும் அவ்வூரார் பணிய வேண்டும் என்பதற்காக அவர்களை வறுமையினாலும், நோயினாலும் நாம் பிடிக்காமல் இருந்ததில்லை. அல்குர்ஆன் (7 : 94).

நான் நோயுறும் போது அவனே எனக்கு நிவாரணம் தருகிறான் (என்று இப்ராஹீம் கூறினார்) அல்குர்ஆன் (26 : 80).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'ஒரு நோயாளியிடம் (உடல் நலம் விசாரிக்கச்) சென்றால்' அல்லது 'நோயாளி ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டால்' அவர்கள், "அத்ஹிபில் பாஸ் ரப்பந் நாஸ் இஷ்ஃபி, வ அன்த்தஷ் ஷாஃபி, லா ஷிஃபாஅ இல்லா ஷிஃபாஉக்க, ஷிஃபாஅன் லா யுஃகாதிரு சகமன்" என்று பிரார்த்திப்பார்கள்.

பொருள்: மனிதர்களைப் படைத்துப் பராமரிப்பவனே! நோயைப் போக்கி அறவே நோயில்லாதவாறு குணமளிப்பாயாக.

நீயே குணமளிப்பவன். உன் நிவாரணத்தைத் தவிர வேறு நிவாரணம் இல்லை. அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி) நூல் : புகாரி (5675).

## 2. இறைவனுடைய பெயர்களில் பண்புகளில் இணைவைக் கக்கூடாது

படைக்கப்படாமலும் தாய் தந்தை இல்லாமலும் இருத்தல் எந்தப்பொருளின் பக்கமும் தேவையுறாமல் இருத்தல் தூங்காமல் இருத்தல் சோர்வடையாமல் இருத்தல் தவறிழைக்காமல் இருத்தல் மறக்காமல் இருத்தல் மறைவானவற்றை அறிதல் மரணிக்காமல் இருத்தல் இவையெல்லாம் இறைவனின் பண்புகளாகும்.

இத்தகைய பண்புகள் இறைவனைத் தவிர வேறு யாருக்கும் இல்லை. யாருக்காவது இத்தகைய பண்புகள் இருப்பதாக ஒருவன் நினைத்தால் அவன் இணைவைத்தவனாகி விடுவான்.

**அல்லாஹ்விற்குத் தூக்கம் இல்லை.**

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரு மில்லை. அவன் என்றென்றும் உயிருடன் இருப்பவன். அவனுக்குச் சிறு உறக்கமோ, ஆழ்ந்த உறக்கமோ ஏற்படாது. அல்குர்ஆன் (2 : 255).

**அல்லாஹ்விற்குச் சோர்வு இல்லை**

வானங்களையும், பூமியையும், அவற்றுக்கு இடைப்பட்ட தையும் ஆறு நாட்களில் படைத்தோம். நமக்கு எந்தக் களைப்பும் ஏற்படவில்லை. அல்குர்ஆன் (50 : 38).

**அல்லாஹ்விற்கு மரணமில்லை**

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரு மில்லை. அவன் என்றென்றும் உயிருடன் இருப்பவன். அல்குர்ஆன் (3 : 2).

என்றென்றும் உயிருடனிருப்பவன் முன்னே முகங்கள் கவிழ்ந்து விடும். அநியாயத்தைச் சுமந்தவன் நஷ்டமடைந்து விட்டான். அல்குர்ஆன் (20 : 111).

**அல்லாஹ்விற்கு மறதி இல்லை**

உமது இறைவன் மறப்பவனாக இல்லை. அல்குர்ஆன் (19 : 64).

என் இறைவன் தவறிட மாட்டான். மறக்கவும் மாட்டான்" என்று அவர் கூறினார். அல்குர்ஆன் (20 : 52).

**அல்லாஹ்விற்கு பசி தாகம் இல்லை**

அவனே உணவளிக்கிறான். அவன் உணவளிக்கப்படுவ தில்லை" என்று கூறுவீராக! அல்குர்ஆன் (6 : 14).

**அல்லாஹ்விற்குத் தேவைகள் இல்லை**

அல்லாஹ் தேவையற்றவன்; சகிப்புத் தன்மை மிக்கவன். அல்குர்ஆன் (2 : 263).

அல்லாஹ் தேவையற்றவன். அல்குர்ஆன் (112 : 2).

**அல்லாஹ்விற்கு மனைவியும், பிள்ளைகளும் இல்லை**

அவனுக்கு மனைவி இல்லாத நிலையில் அவனுக்கு எவ்வாறு பிள்ளை இருக்க முடியும்? அல்குர்ஆன் (6 : 101).

எங்கள் இறைவனின் மகத்துவம் உயர்ந்தது. அவன் மனைவி யையோ, பிள்ளைகளையோ ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அல்குர்ஆன் (72 : 3).

**அல்லாஹ்விற்குப் பெற்றோர்கள் இல்லை**

அவனே முதலானவன்; முடிவானவன்; வெளிப்படையான வன்; அந்தரங்கமானவன். ஒவ்வொரு பொருளையும் அவன் அறிந்தவன். அல்குர்ஆன் (57 : 3).

யாரையும்) அவன் பெறவில்லை. (யாருக்கும்) பிறக்கவு மில்லை. அல்குர்ஆன் (112 : 3).

**இறைவன் கேட்பது போன்று யாராலும் கேட்க முடியாது**

அவனைப் போல் எதுவும் இல்லை. அவன் செவியுறுபவன்; பார்ப்பவன். அல்குர்ஆன் (42 : 11).

முதல் வசனத்தில் இறைவனுக்குப் பார்க்கும் கேட்கும் ஆற்றல் உள்ளது என்று கூறப்படுவதுடன் அவனைப் போன்று யாருமில்லை என்பதும் சேர்த்து கூறப்படுகிறது.

இறைவனுக்கும், படைப்பினங்களுக்கும் கேட்கும் ஆற்றல் இருந்தாலும் இரண்டுக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உள்ளது. அல்லாஹ்வின் கேட்கும் திறன் முழுமையானது. குறைபாடுகள் அற்றது. படைப்பினங்களின் கேட்கும் திறன் முழுமையற்றது. குறைபாடு உடையது.

1. பிறர் கூறுவதை மனிதர்கள் கேட்க வேண்டுமானால் சப்தமிட்டுக் கூற வேண்டும். சப்தமிடாமல் மனதிற்குள் பிறர் நினைப்பதை எவராலும், எதுவாலும் அறிய முடியாது. சப்தமிட்டுக் கூறினால் தான் அல்லாஹ்விற்கு விளங்கும் என்ற நிர்பந்தம் அவனுக்கில்லை. எனவேதான் மனிதர்களிடம் சப்தமிட்டுப் பேசுகிறோம். அல்லாஹ்விடம் சப்தமில்லாமல் வேண்டுகிறோம்.

2. குறிப்பிட்ட அளவைத் தாண்டி ஒலி உயருமானால் அதை மனிதனால் கேட்க முடியாது. சில நேரங்களில் அவனுடைய செவி செயலிழந்து விடும். ஆனால் அல்லாஹ்விற்கு இந்தப் பலவீனம் இல்லை.

3. பேசுபவர் அருகாமையில் இருந்தால் தான் அவர் சொல்வதை நம்மால் கேட்க முடியும். பேசுபவருக்கும், கேட்பவருக் கும் நீண்ட தூரம் இருந்தால் சொல்லப்பட்டதைக் கேட்க முடியாது. ஆனால் அல்லாஹ்விற்கு இத்தகைய பலவீனம் இல்ல.

4. தனித்தனி நபர்களாகக் கூறினால் தான் கூறப்பட்டதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். பலர் ஒரே நேரத்தில் பல

கருத்துக்களை கூறினால் எல்லாருடைய கூற்றையும் நம்மால் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் கோடான கோடி மக்கள் கூடி நின்று ஒரே நேரத்தில் அனைவரும் சேர்ந்து தங்களது தேவைகளை அல்லாஹ்விடத்தில் முன்வைத்தாலும் ஒவ்வொருவரின் தேவை கள் என்ன என்பதை அல்லாஹ் புரிந்து கொள்வான். எனவேதான் மனிதர்களிடம் தனித் தனியாகச் சென்று கருத்துக் களைத் தெரிவிக் கிறோம். அல்லாஹ்விடம் ஒரே நேரத்தில் பலர் முறையிடுகிறோம்.

5. நமக்குத் தெரிந்த மொழியில் பேசினால் தான் நமக்குப் புரியும். ஆனால் அல்லாஹ்வோ உலகில் எந்த மொழியில் யார் பேசினாலும் அதை அவன் புரிந்து கொள்வான். சொல்லப் போனால் அல்லாஹ்விடம் உறையாடுவதற்கு மொழியே தேவையில்லை.

**இறைவன் பார்ப்பது போன்று யாராலும் பார்க்க முடியாது**

அவனைப் போல் எதுவும் இல்லை. அவன் செவியுறுபவன்; பார்ப்பவன். அல்குர்ஆன் (42 : 11).

மனிதர்களுக்கும், மற்ற பிற உயிரினங்களுக்கும் பார்க்கும் சக்தி உள்ளது. இறைவனுக்கும் பார்க்கும் சத்தி உள்ளது. இதனால் படைப்பினங்கள் அல்லாஹ்விற்கு நிகராகி விட்டன என்று நம்பி விடக் கூடாது.

ஏனென்றால் இறைவனுக்கும், படைப்பினங்களுக்கும் பார்க்கும் ஆற்றல் இருந்தாலும் பார்க்கும் முறையில் பலத்த வித்தியாசம் இருக்கிறது. இறைவன் அவனுடைய உயர்வான தகுதிக்கு ஏற்றவாறு பார்ப்பான். படைப்பினங்கள் அவர்களின் பலவீனங்களுக்கு ஏற்றவாறு பார்ப்பார்கள்.

1. வெளிச்சம் இருந்தால் தான் மனிதனால் பார்க்க முடியும். ஆனால் கரும் இருட்டில் கூட மனிதர்கள் செய்வதை அல்லாஹ் வால் காண முடியும்.

2. அதிக வெளிச்சம் ஏற்பட்டாலும் மனிதர்களால் பார்க்க முடியாது. உதாரணமாக மேகமூட்டம் இல்லாமல் சூரியன் உச்சியில் இருக்கும் போது அதை நம்மால் உற்றுப் பார்க்க முடியாது. கண்கள் கூசும். ஆனால் ஒளி எவ்வளவு அதிகரித்தாலும் அல்லாஹ்வால் எதையும் பார்க்க முடியும்.

3. நமது பார்வை தடுப்புகளைத் தாண்டிச் செல்லாது. திரைக்கு அப்பால் சுவற்றுக்கு அப்பால் என்ன நடக்கிறது என்பதை நம்மால் அறிய முடியாது. ஆனால் கதவைப் பூட்டிக் கொண்டு யார் என்ன செய்தாலும் அறைக்குள் நடப்பதை அல்லாஹ் நன்கறிவான்.

4. நமது பார்வை குறிப்பிட்ட எல்லை வரைக்கும் மட்டுமே செல்கிறது. தூரம் அதிகமாக அதிகமாக காட்சிகள் கண்களுக்குத் தெரியாது. ஆனால் உலகின் எந்தப் பகுதியில் என்ன நடந்தாலும் அல்லாஹ் அதைக் காண்பான்.

5. நமது பார்வை குறிப்பிட்ட திசையை நோக்கி மட்டுமே இருக்கும். வடக்கே நோக்கி இருந்தால் தெற்கில் என்ன நடக்கிறது என்பது தெரியாது. கிழக்கு நோக்கி இருந்தால் மேற்கே என்ன நடக்கிறது என்பதை நம்மால் காண முடியாது. ஆனால் அல்லாஹ்வோ எந்தத் திசையில் என்ன நடந்தாலும் அதைக் காண்பான்.

**இறைவன் குணப்படுத்துவது போல் யாராலும் குணப்படுத்த முடியாது**

உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவியும் தேடுகிறோம். அல்குர்ஆன் (1 : 5).

இறைவனும் நோயைக் குணப்படுத்துகிறான். மருத்துவரும் நோயைக் குணப்படுத்துகிறார். ஆனால் இவ்விருவரும் குணப்படுத்தும் முறையில் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. அல்லாஹ் குணப்படுத்துவதைப் போல் மருத்துவர் குணப்படுத்து

வது கிடையாது. ஏனென்றால் அல்லாஹ்வைப் போன்று யாரு மில்லை என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

1. மருத்துவரிடம் நமக்கு ஏற்பட்ட குறை பாதிப்புகள் என்னவென்பதைத் தெளிவாக எடுத்துரைத்தால் தான் அவரால் மருத்துவம் செய்ய முடியும். ஆனால் அல்லாஹ் நம்மிடம் எந்த விசாரனையும் செய்யாமல் நோயை அகற்றுகிறான்.

2. மருத்துவம் செய்வதற்கு மருத்துவருக்கு இதயத் துடிப்பை அறியும் கருவி உள்ளுறுப்புகளைப் படம்பிடிக்கும் கருவி தேவைப் படுகிறது. வயிற்றில் கட்டிகள் இருந்தால் அதை வெட்டி எடுக்க கத்தி தேவைப்படுகிறது. இன்னும் பல சாதனங்கள் இருந்தால் தான் அவரால் சிகிச்சை அளிக்க முடியும். ஆனால் அல்லாஹ்விற்கு கத்தியோ, புகைப்படக் கருவியோ இதயத்துடிப்பை அறியும் கருவியோ எதுவும் தேவையில்லை. ஆப்ரேசன் எதுவும் இல்லாம லேயே குணப்படுத்தும் சக்தி அவனுக்கு உள்ளது.

3. நோய்க்கான மருந்துகளை எழுதிக் கொடுத்து அவற்றைச் சரியாக உண்டு வருமாறு மருத்துவர் கூறுவார். அவர் கூறியதைப் போன்று மருந்தைச் சாப்பிட்டால் தான் நோய் குணமாகும். ஆனால் அல்லாஹ்விற்கோ நோயைக் குணப்படுத்த எந்த மருந்தும், மாத்திரையும் தேவையில்லை.

4. மருத்துவர் உடனடியாக நோயைக் குணப்படுத்திவிட மாட்டார். நீண்ட கால அவகாசம் அவருக்குத் தேவைப்படும். ஆனால் அல்லாஹ்விற்கோ எந்த அவகாசமும் வேண்டியதில்லை.

5. மருத்துவரின் சிகிச்சை பலனளிக்காமல் நோயாளி இறப்ப துண்டு. மருத்துவரின் சிகிச்சை தோற்பதுண்டு. ஆனால் அல்லாஹ் வின் சிகிச்சை வெற்றியடைவது நிச்சயம்.

உதாரணத்திற்காகத் தான் இங்கே மூன்று விஷயங்களைக் கூறியுள்ளோம். இது போன்று பல விஷயங்களில் அல்லாஹ்

விற்கும், அடியார்களுக்கும் மத்தியில் பல்வேறு வித்தியாசங்கள் உள்ளன. அல்லாஹ்வுடைய தனித் தன்மைகளில் பிறரைக் கூட்டுச் சேர்த்து விட்டால் இணைவைப்பு ஏற்பட்டு விடுகிறது.

அல்லாஹ் பார்ப்பது போன்றும், கேட்பது போன்றும், உதவி செய்வது போன்றும், நோயை நீக்குவது போன்றும் படைப்பினங் களில் யாராவது காண்பார் என்றோ, கேட்பார் என்றோ. உதவி செய்வார் என்றோ. நோயை நீக்குவார் என்றோ ஒருவன் நம்பினால் அவன் அல்லாஹ்விற்கு இணை கற்பித்தவனாக ஆகிவிடுவான்.

மனிதர்களுக்கு எந்த ஆற்றல் உள்ளதோ அதைத் தாண்டி அவர்களுக்கு இல்லாத ஆற்றல் இருப்பதாக நம்பக்கூடாது.

**மறைவான ஞானம் அல்லாஹ்விற்கு மட்டுமே உள்ளது**

எதிர்காலத்தில் நடக்கப்போகின்றவற்றை அறிதல் அல்லாஹ் வின் தன்மையாகும். இது அவனல்லாத வேறு யாருக்கும் இல்லை.

மறைவானவற்றின் திறவுகோல்கள் அவனிடமே உள்ளன. அவனைத் தவிர யாரும் அதை அறிய மாட்டார். அவன் தரையிலும், கடலிலும் உள்ளவற்றை அறிவான். ஓர் இலை கீழே விழுந்தாலும் அவன் அதை அறியாமல் இருப்பதில்லை. பூமியின் இருள்களில் உள்ள விதையானாலும், ஈரமானதோ காய்ந்ததோ ஆனாலும் தெளிவான ஏட்டில் இல்லாமல் இல்லை. அல்குர்ஆன் (6 : 59).

தூதர்களை அல்லாஹ் ஒன்று திரட்டும் நாளில் "உங்களுக்கு என்ன பதில் அளிக்கப்பட்டது?" என்று கேட்பான். "எங்களுக்கு (இது பற்றி) எந்த அறிவும் இல்லை. நீயே மறைவானவற்றை அறிபவன்" என்று அவர்கள் கூறுவார்கள். அல்குர்ஆன் (5 : 109).

**ஜின்களுக்கு மறைவான ஞானம் கிடையாது**

ஜின்கள் பெயரில் மக்களைச் சுரண்டுவதற்காக பலர் அல்லாஹ்விற்கு நிகரான தன்மைகள் ஜின்களுக்கு இருப்பதாகக் கூறுகிறார்கள். இதுவெல்லாம் இணைவைப்பாகும்.

சுலைமான் (அலை) அவர்கள் இறந்தது கூடத் தெரியாமல் ஜின்கள் இருந்தன. எனவே ஜின்களுக்கும் மறைவான ஞானம் இல்லை என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

அவருக்கு நாம் மரணத்தை ஏற்படுத்திய போது பூமியில் ஊர்ந்து செல்லும் உயிரினம் (கரையான்) தான் அவரது மரணத்தைக் காட்டிக் கொடுத்தது. அது அவரது கைத்தடியைச் சாப்பிட்டது. அவர் கீழே விழுந்ததும் "நமக்கு மறைவானவை தெரிந்திருந்தால் இழிவு தரும் இத்துன்பத்தில் இருந்திருக்க மாட்டோமே" என்பதை ஜின்கள் விளங்கிக் கொண்டன. அல்குர்ஆன் (34 : 14).

**இறைத் தூதர்களுக்கும் மறைவான ஞானம் கிடையாது**

ஆதம் (அலை) அவர்களுக்கு மறைவான ஞானம் இல்லாத காரணத்தினால் தான் சைத்தானுடைய சதியை அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. சைத்தான் சொல்வது உண்மை என்று நம்பி ஏமாந்து போனார்கள். மறைவான ஞானம் இருந்திருந்தால் சைத்தான் பொய் சொல்கிறான் என்பதை அறிந்து இறைக் கட்டளையை மீறியிருக்க மாட்டார்கள்.

ஆதமுடைய மக்களே! உங்கள் பெற்றோர் இருவரையும் ஷைத்தான் சொர்க்கத்திலிருந்து வெளியேற்றியது போல் உங்களை யும் அவன் குழப்பி விட வேண்டாம். அவர்களின் வெட்கத்தலங் களை அவர்களுக்குக் காட்ட ஆடைகளை அவர்களை விட்டும் அவன் கழற்றினான். அல்குர்ஆன் (7 : 27).

தனக்கு மறைவான ஞானம் கிடையாது என்று நூஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்.

"என்னிடம் அல்லாஹ்வின் கருவூலங்கள் உள்ளன என்று உங்களிடம் கூற மாட்டேன். மறைவானவற்றையும் நான் அறிய மாட்டேன். நான் வானவர் என்றும் உங்களிடம் கூற மாட்டேன். உங்கள் கண்கள் இழிவாகக் காண்போருக்கு அல்லாஹ் எந்த நன்மையும் அளிக்கவே மாட்டான் எனவும் கூற மாட்டேன். அவர்களின் உள்ளங்களில் உள்ளதை அல்லாஹ் மிக அறிபவன். (அவ்வாறு கூறினால்) நான் அநீதி இழைத்தவனாகி விடுவேன்" (எனவும் நூஹ் கூறினார்.) அல்குர்ஆன் (11 : 31).

இணைவைப்பவர்களுக்கு பாவமன்னிப்புத் தேடக் கூடாது என்ற ஞானம் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு இல்லாத காரணத் தினால் இணைவைத்துக் கொண்டிருந்த தன் தந்தைக்காக பாவ மன்னிப்புத் தேடினார்கள். அது தவறு என்று இறைவன் உணர்த்திய போது அதிலிருந்து விலகிக் கொண்டார்கள். இதிலிருந்து இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும் மறைவான ஞானம் இல்லை என்பது தெளிவாகிறது.

இப்ராஹீம் தம் தந்தைக்காக பாவ மன்னிப்புத் தேடியது, தந்தைக்கு அவர் அளித்த வாக்குறுதியின் காரணமாகவே. அவர் அல்லாஹ்வின் எதிரி என்பது அவருக்குத் தெரிந்த பின் அதிலிருந்து விலகிக் கொண்டார். இப்ராஹீம் பணிவுள்ளவர்; சகிப்புத் தன்மை உள்ளவர். அல்குர்ஆன் (9 : 114).

### 3. வணக்க வழிபாடுகளில் இணைவைக்கக் கூடாது

அல்லாஹ்விற்கு மட்டும் நாம் செய்ய வேண்டிய வணக்கங்களைப் பிறருக்குச் செய்தால் அதுவும் இணைவைப் பாகும். உதாரணமாக பிரார்த்தித்தல், உதவி தேடுதல், அடைக்களம் தேடுதல், பாதுகாப்புத் தேடுதல், சத்தியம் செய்தல், நேர்ச்சை செய்தல், அறுத்துப் பலியிடுதல், தொழுதல், நோன்பு நோற்றல், சிரம் பணிதல் இது போன்று அல்லாஹ் விற்கு மட்டும்

செய்ய வேண்டிய வணக்கங்களை எவருக்கா வது ஒருவன் செய்து விடுவானால் அவன் இணைவைத்த வனாகிவிடுவான்.

வணக்கங்கள் அனைத்தும் அல்லாஹ்விற்கு மட்டுமே உரியது. இவற்றில் எதையாவது பிறருக்குச் செய்து விட்டால் இணைவைத்தவராக ஆகிவிடுவார்.

நான் அல்லாஹ்விற்கு இணை கற்பிக்காமல் அவனை வணங்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளேன். அவன் பக்கமே அழைக்கிறேன். மீளுதலும் அவனிடமே உள்ளது" என்று கூறுவீராக! அல்குர்ஆன் (13: 36).

வணக்கத்தை அல்லாஹ்வுக்கே கலப்பற்றதாக்கி வணங்கு மாறும், உறுதியாக நிற்குமாறும், தொழுகையை நிலை நாட்டுமாறும், ஸகாத்தைக் கொடுக்குமாறும் தவிர அவர்களுக்கு வேறு கட்டளை பிறப்பிக்கப்படவில்லை. இதுவே நேரான மார்க்கம். அல்குர்ஆன் (98: 05).

அல்லாஹ்விற்கு நிகராக எதையும் ஆக்காமல் அவனை வணங்குங்கள். அல்குர்ஆன் (4: 36).

அப்துல் கைஸ் குலத்தைச் சேர்ந்த சிலர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, "இறைவனின் தூதரே! நாங்கள் 'ரபீஆ' குலத்தாரின் (இன்ன) குடும்பத்தார் ஆவோம். எங்களுக்கும், உங்களுக்குமிடையே 'முளர்' குலத்து இறை மறுப்பாளர்கள் (நாம் சந்திக்க முடியாதபடி தடையாக) உள்ளனர். இதனால் (போர் நிறுத்தம் நிகழும்) புனித மாதங்களில் தவிர வேறு மாதங்களில் நாங்கள் உங்களிடம் வர முடியாது. ஆகவே, எங்களுக்கு ஒரு கட்டளையிடுங்கள். அதை(ச் செயல்படுத்துமாறு) எங்களுக்கு அப்பால் இருப்பவர்களுக்கு நாங்கள் கட்டளையிடுவோம். அதைக் கடைப்பிடித்து நடந்தால் நாங்களும் சொர்க்கம் செல்வோம்" என்று கூறினர். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நான்கு விஷயங்களை உங்களுக்கு நான் கட்டளையிடுகின்றேன்.

நான்கு பொருட்களை உங்களுக்குத் தடை செய்கின்றேன்: அல்லாஹ்விற்கு எதையும் இணையாக்காமல் அவன் ஒருவனை மட்டுமே வணங்குங்கள். தொழுகையைக் கடைப்பிடியுங்கள். ஸகாத் வழங்குங்கள். ரமளான் மாதத்தில் நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள். அத்துடன் போரில் கிடைக்கும் பொருட்களிரிருந்து ஐந்திலொரு பங்கை (அரசு பொது நிதிக்கு)ச் செலுத்துங்கள். அறிவிப்பவர் : அபூசயீத் அல்குத்ரீ (ரலி) நூல் : முஸ்லிம் (26).

**இணைவைக்காமல் வழிபடுவது அடியார்களின் கடமை**

இணைவைக்காமல் வணங்குவது நம்மீது கடமையாகும். நான் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் 'உஃபைர்' என்றழைக்கப் பட்ட கழுதையின் மீது அமர்ந்திருந்தேன். அப்போது அவர்கள், "முஆதே! அல்லாஹ்வுக்கு மக்கள் மீதுள்ள உரிமை என்ன, மக்களுக்கு அல்லாஹ்வின் மீதுள்ள உரிமை என்ன என்பதை நீர் அறிவீரா?" என்று (என்னிடம்) கேட்டார்கள். நான், "அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிந்த வர்கள்" என்று பதில் கூறினேன். நபி (ஸல்) அவர்கள், "மக்கள் மீது அல்லாஹ்வுக்குள்ள உரிமை என்னவென்றால், அவர்கள் அவனை(யே) வணங்கிட வேண்டும், அவனுக்கு எதனையும் (எவரையும்) இணை கற்பிக்கக் கூடாது என்பதாகும். அல்லாஹ்வின் மீது மக்களுக்குள்ள உரிமை, அவனுக்கு இணை கற்பிக்காமலிருப்பவரை அவன் வேதனைப்படுத்தாமல் இருப்பதாகும்" என்று பதில் கூறினார்கள். நான், "அல்லாஹ்வின் தூதரே! நான் மக்களுக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கட்டுமா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "அவர்களுக்கு (இந்த நற்செய்தியை) அறிவிக்காதீர்கள். அவர்கள் இதையே நம்பி (நற்செயல்கüல் ஈடுபடாமல்) இருந்து விடுவார்கள்" என்று பதிலளித்தார்கள். அறிவிப்பவர் : முஆத் (ரலி) அவர்கள். நூல் : புகாரி (2856), முஸ்லிம் (30).

## இணைவைக்காமல் வழிபடுவதே இஸ்லாத்தில் முதன்மையானது

முஆத் (ரலி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் யமன் நாட்டிற்கு அனுப்பினார்கள். அல்லாஹ்விற்கு இணைவைக்கா மல் அவன் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும் என்பதை முதலாவதாக அந்நாட்டு மக்களுக்கு உபதேசம் செய்யுமாறு நபி (ஸல்) அவர்கள் முஆத் (ரலி) அவர்களிடத்தில் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் முஆத் பின் ஜபல் (ரலி) அவர்களை யமன் நாட்டுக்கு அனுப்பிய போது அவர்களிடம், "நீங்கள் வேதம் வழங்கப்பெற்ற ஒரு சமுதாயத்தாரிடம் செல்கின்றீர்கள். ஆகவே, அவர்களுக்கு முதலாவதாக, அல்லாஹ் ஒருவன் எனும் (ஏகஇறைக்) கொள்கையை ஏற்கும்படி அழைப்புக் கொடுங்கள். அதை அவர்கள் புரிந்து (ஏற்றுக்) கொண்டால், தினந்தோறும் ஐந்துநேரத் தொழுகைகளை அவர்கள் மீது அல்லாஹ் கடமை யாக்கியுள்ளான் என்று அவர்களிடம் தெரிவியுங்கள். அவர்கள் (அதை ஏற்று) தொழவும் செய்தால் அவர்களிடையேயுள்ள செல்வர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அவர்களிடையேயுள்ள ஏழைகளுக்குச் செலுத்தப்படுகின்ற ஸகாத்தை அவர்களுடைய செல்வங்களில் அல்லாஹ் கடமையாக்கியுள்ளான் என்று அவர்களிடம் தெரிவியுங்கள். அதையும் அவர்கள் ஒப்புக் கொண்டால் அவர்களிடமிருந்து (ஸகாத்தை) வசூலித்துக் கொள்ளுங்கள். (ஆனால்,) மக்களின் செல்வங்களில் சிறந்தவற்றைத் தவிர்த்திடுங்கள்" என்று சொன்னார்கள். அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி). நூல் : புகாரி (7372).

அல்லாஹ்விற்கு இணைவைக்காமல் அவன் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும் என்ற ஏகத்துவக் கொள்கை நபியவர்களின் பிரச்சாரத்தில் முதன்மையானதாக இருந்தது.

"அவர் உங்களுக்கு என்ன (செய்யும்படி) கட்டளையிடு கின்றார்?" என்று ஹெராக்ளியஸ் (என்னிடம்) கேட்டார். நான் "அல்லாஹ்வுக்கு எதனையும் இணையாக்காமல் அவன் ஒருவனையே வணங்குங்கள்; உங்கள் மூதாதையர் சொல்லி வருகின்ற (அறியாமைக்கால) கூற்றுகளையெல்லாம் விட்டு விடுங்கள் என்று கூறுகிறார். தொழுகையை நிறைவேற்றும் படியும், 'ஸகாத்' கொடுக்கும்படியும், உண்மை பேசும்படியும், சுயக்கட்டுப்பாட்டுடன் வாழும்படியும், உறவுகளைப் பேணும் படியும் எங்களுக்கு அவர் கட்டளையிடுகின்றார்" என்று சொன்னேன். அறிவிப்பவர் : அபூ சுஃப்யான் (ரலி). நூல் : புகாரி (7).

நான் (நபி (ஸல்) அவர்களிடம்) அல்லாஹ்வின் தூதரே நான் அவசியம் கடைபிடிக்க வேண்டியதை எனக்குக் கூறுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர்கள் அல்லாஹ்விற்கு இணையாக நீர் எதையும் ஆக்காமல் அவனை வணங்க வேண்டும். கடமையான தொழுகையைத் தொழ வேண்டும். கடமையான சகாத்தை நீ நிறைவேற்ற வேண்டும். முஸ்லிமிற்கு நலம் நாட வேண்டும். இறை நிராகரிப்பாளனை விட்டு விலகிவிடு என்று கூறினார்கள். அறிவிப்பவர் : ஜரீர் பின் அப்தில்லாஹ் (ரலி). நூல் : அஹ்மத் (18364).

**இணைவைக்காமல் வழிபடுவதே இஸ்லாமிய கொள்கை**

அல்லாஹ்வையும், மற்றவர்களையும் வழிபடுவது இஸ்லாமியக் கொள்கையல்ல. மாறாக அல்லாஹ்விற்கு எந்த இணையும் கற்பிக்காமல் அவனை மட்டும் வணங்குவதே இஸ்லாமியக் கொள்கையாகும்.

நபியவர்களிடத்தில் இஸ்லாம் என்றால் என்ன என்று ஜிப்ரீல் (அலை) அவர்கள் கேட்ட போது இணைவைக்காமல் வழிபடுவது என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் ஒரு நாள் மக்களுக்குத் தென்படும் விதத்தில் (அமர்ந்து) இருந்த போது அவர்களிடம் ஒரு மனிதர் வந்து "ஈமான் என்றால் என்ன?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "ஈமான் என்பது, அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய சந்திப்பையும் அவனுடைய தூதர்களையும் நீர் நம்புவதும், (மறுமையில்) உயிர்ப்பித்து எழுப்பப்படுவதை நீர் நம்புவதுமாகும்" என்று பதிலளித்தார்கள்.

அடுத்து அவர், "இஸ்லாம் என்றால் என்ன?" என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள், "இஸ்லாம் என்பது அல்லாஹ் விற்கு நீர் எதனையும் இணையாக்காமல் அவனை வணங்கு வதும், தொழுகையை நிலை நிறுத்துவதும், கடமையாக்கப் பட்ட (வறியோர் உரிமையான) ஸகாத்தைக் கொடுத்து வருவதும், ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பதுமாகும்" என்றார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : புகாரி (50).

இஸ்லாத்தின் முதல் ஆணிவேராக விளங்கக் கூடிய லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற வார்த்தையின் பொருளை விளங்கினால் யாரும் இணைவைக்க மாட்டார்கள். அல்லாஹ் வணக்கத்திற்குரியவன் என்பது இதன் பொருள் இல்லை. மாறாக அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் வணக்கத்திற்கு தகுதியானவர் இல்லை என்பதே இதன் பொருளாகும். மேலும் அல்லாஹ் என்ற அரபுச் சொல்லானது அல் இலாஹ் என்பதின் சுருக்கமாகும். அல் இலாஹ் என்றால் வணங்குவதற்குரியவன் என்பது பொருள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : இஸ்லாம் ஐந்து (தூண்கள்) மீது நிறுவப்பட்டுள்ளது. அல்லாஹ்வையே வழி பட்டு, அவன் அல்லாதவற்றை நிராகரிப்பது; தொழுகையைக் கடைப்பிடிப்பது; ஸகாத் வழங்குவது; இறையில்லம் கஅபாவில் ஹஜ் செய்வது; ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பது.

(ஆகியனவே அந்த ஐந்தும்.) அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) . நூல் : முஸ்லிம் (20).

**இணைவைக்காமல் இருப்பவரே முஸ்லிமாக இருக்க முடியும்**

இஸ்லாமியப் பெயர்களைச் சூடிக் கொள்வதாலோ, தொப்பி தலைப்பாகை அணிவதாலோ, தாடியை மட்டும் வைப்பதாலோ, முஸ்லிம்களோடு சேர்ந்து வாழ்வதாலோ யாரும் முஸ்லிமாகி விட முடியாது.

ஓரிறைக் கொள்கைக்கு முழுக்க முழுக்க எதிரான இணைவைப்பை வேறோடு கிள்ளி எறிந்தால் தான் முஸ்லிமாக இருக்க முடியும். இணைவைப்பு ஒருவரை இஸ்லாத்திலிருந்து வெளியேற்றுகின்ற கொடிய பாவமாகும்.

இஸ்லாமும் இணைவைப்பும் ஒன்றுக்கொன்று எதிரானவை ஆகும். இந்த இரண்டும் ஒருவரிடத்தில் ஒன்று சேரவே முடியாது. ஒருவர் இறந்தவராகவும் உயிருள்ளவராகவும் இருக்க முடியாது. இறந்தவர் என்றால் உயிரில்லை என்று பொருள். உயிருள்ளவர் என்றால் இறக்க வில்லை என்று பொருள்.

இது போன்று தான் ஒருவர் முஸ்லிமாக இருந்தால் இணைவைப்பவராக இருக்க மாட்டார். இணைவைப்பவர் முஸ்லி மாக இருக்க மாட்டார்கள். இணைவைத்துக்கொண்டு அல்லாஹ் விடத்தில் முஸ்லிமாக இருக்கவே முடியாது.

"வானங்களையும், பூமியையும் படைத்தவனை நோக்கி உண்மை வழியில் நின்றவனாக என் முகத்தைத் திருப்பி விட்டேன். நான் இணை கற்பித்தவனல்லன்; (என்றும் கூறினார்). அல்குர்ஆன் (6: 79).

"எனக்கு என் இறைவன் நேரான பாதையைக் காட்டி விட்டான். அது நேரான மார்க்கம். உண்மை வழியில் நின்ற இப்ராஹீமின் மார்க்கம். அவர் இணை கற்பித்தவராக இருக்க வில்லை" என்று (முஹம்மதே!) கூறுவீராக! அல்குர்ஆன் (6: 161).

அல்லாஹ்வின் வசனங்கள் உமக்கு அருளப்பட்ட பின்னர் அதை விட்டும் உம்மை (எதுவும்) தடுத்திட வேண்டாம்! உமது இறைவனை நோக்கி அழைப்பீராக! இணை கற்பிப்பவராக நீர் ஆகாதீர்! அல்குர்ஆன் (28: 87).

இஸ்லாத்தை ஏற்குமாறு ரோம் நாட்டின் அரசருக்கு நபியவர்கள் கடிதம் எழுதிய போது இணைவைக்காதீர்கள் என்றே வலியுறுத்திக் கூறினார்கள். இணைவைக்காதவர் தான் முஸ்லிமாக இருக்க முடியும் என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கடிதத்தைக் கொண்டு வருமாறு ஹெராக்ளியஸ் உத்தரவிட்டார். அக்கடிதத்தை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் திஹ்யதுல் கல்பீ (ரலி) அவர்களிடம் கொடுத்து, புஸ்ரா நகர ஆட்சியர் (ஹாரிஸ் பின் அபீஷம்ர்) வாயிலாக ஹெராக்ளியஸிடம் ஒப்படைக்கும்படி கூறியிருந்தார்கள். ஹெராக்ளியஸ் அதை வாசிக்கச் செய்தார். அந்தக் கடிதத்தில் (பின்வருமாறு) எழுதப்பட்டிருந்தது:

அளவில்லா அருளாளன் நிகரில்லா அன்புடையோன் அல்லாஹ்வின் திருப்பெயரால்...

இது அல்லாஹ்வின் அடியாரும், அவனுடைய தூதரு மாகிய முஹம்மதிடமிருந்து ரோமாபுரியின் அதிபர் ஹெராக் ளியஸுக்கு (எழுதப்படும் கடிதம்:) நேர்வழியைப் பின் பற்றிய வர் மீது சாந்தி நிலவட்டும்.

இறை வாழ்த்துக்குப் பின் (விஷயம் என்னவென்றால்); இஸ்லாத்தை எற்குமாறு உங்களை நான் அழைக்கின்றேன். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். (ஏற்றுக் கொண்டால் ஈருலகிலும்) நீங்கள் பாதுகாப்புப் பெறுவீர்கள். (நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால்,) அல்லாஹ் உங்களுக்குச் சேரவேண்டிய நன்மையை இரு மடங்காகத் தருவான். நீங்கள்

புறக்கணித்தால், (உங்கள் நாட்டுக் குடிமக்களான) குடியான வர்களின் பாவமும் (அவர்கள் இஸ்லாத்தை ஏற்காமல் போவதன் குற்றமும்) உங்களையே சாரும்.

"வேதக்காரர்களே! எங்களுக்கும், உங்களுக்கும் இடையிலுள்ள பொதுவான ஒரு விஷயத்திற்கு வாருங்கள். (அஃது யாதெனில்:) 'அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் நாம் வணங்கலாகாது; அவனுக்கு எதனையும் எவரையும் நாம் இணைவைக்கலாகாது; அல்லாஹ்வையன்றி நம்மில் யாரும் யாரையும் இரட்சகர்களாக்கிக் கொள்ளலாகாது. இதன் பிறகும் அவர்கள் ஏற்க மறுத்தால் 'திண்ணமாக நாங்கள் முஸ்லிம்கள் (அல்லாஹ்விற்கு அடிபணிந்தவர்கள்) தான் என்பதற்கு நீங்கள் சாட்சிகளாக இருங்கள்' என்று கூறிவிடுங்கள்." அறிவிப்பவர் : அபூ சுஃப்யான் (ரலி). நூல் : புகாரி (7).

**அல்லாஹ் விரும்பும் வணக்கம்**

தன்னையும், பிறரையும் வணங்குவதை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான். தன்னை மட்டும் அடியார்கள் வணங்குவதே அல்லாஹ்விற்கு விருப்பமான வணக்கமாகும்.

நானும் உங்களைப் போன்ற மனிதனே. உங்களின் இறைவன் ஒரே ஒரு இறைவனே. யார் தன் இறைவனின் சந்திப்பை எதிர்பார்க்கின்றாரோ அவர் தன் இறைவனை வணங்குவதில் அவனுக்கு எந்த இணையும் ஏற்படுத்தாமல் நல்லறங்கள் செய்யட்டும் எனக் கூறுவீராக. அல்குர்ஆன் (18: 110).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ; அல்லாஹ் உங்களிடத் தில் மூன்று விஷயங்களை விரும்புகிறான். மூன்று விஷயங்களை வெறுக்கிறான். நீங்கள் அவனுக்கு இணை வைக்காமல் வணங்குவதையும், உங்களின் காரியத்திற்கு யாரை அவன் பொறுப்பாளனாக நியமித்துள்ளானோ அவருக்கு நீங்கள் நலம் நாடுவதையும், பிரிந்துவிடாமல் அல்லாஹ்வின் கயிற்றை

நீங்கள் அனைவரும் பற்றிப் பிடிப்பதையும் அல்லாஹ் உங்களிடத்தில் விரும்புகிறான். (ஆதாரமில்லாமல்) இவ்வாறு சொல்லப்பட்டது, அவர் சொன்னார் என்று கூறுவதையும் (தேவையில்லாமல்) அதிகமாகக் கேள்வி கேட்பதையும் பொருளை விரையமாக்கு வதையும் அல்லாஹ் உங்களிடத்தில் வெறுக்கிறான். அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி). நூல் : அஹ்மத் (8361), முஸ்லிம் (3533).

**இறைவன் வாங்கிய உறுதிமொழி**

இணைவைக்கக் கூடாது என்று இஸ்ரவேலர்களிடத்தில் இறைவன் உறுதிமொழி வாங்கினான்.

"அல்லாஹ்வைத் தவிர (யாரையும்) நீங்கள் வணங்கக் கூடாது; பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், அனாதைகளுக் கும், ஏழைகளுக்கும் நல்லுதவி புரிய வேண்டும்; மக்களிடம் அழகானதையே பேச வேண்டும்; தொழுகையை நிலை நாட்ட வேண்டும்; ஸகாத்தையும் கொடுக்க வேண்டும்" என்று இஸ்ராயீலின் மக்களிடம் நாம் உறுதி மொழி எடுத்த பின்னர் உங்களில் சிலரைத் தவிர (மற்றவர்கள்) புறக்கணித்து அலட்சியப்படுத்தினீர்கள். அல்குர்ஆன் (2: 83).

"எனக்கு எதையும் இணை கற்பிக்காதீர்! தவாஃப் செய்வோருக் காகவும், நின்று வணங்குவோருக்காகவும், ருகூவு செய்து ஸஜ்தா செய்வோருக்காகவும் எனது ஆலயத்தைத் தூய்மைப் படுத்துவீராக!" என்று (கூறி) அந்த ஆலயத்தின் இடத்தை இப்ராஹீமுக்கு நாம் நிர்ணயித்ததை நினைவூட்டு வீராக! அல்குர்ஆன் (22:26).

**நபித்தோழர்களிடம் இறைத் தூதர் வாங்கிய உறுதிமொழி**

நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களிடத்தில் இணைவைக் கக்கூடாது என்று உறுதிமொழி வாங்கினார்கள்.

நாங்கள் ஒன்பது பேர், அல்லது எட்டுப் பேர், அல்லது ஏழு பேர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இருந்தோம். அப்போது அவர்கள் "நீங்கள் அல்லாஹ்வின் தூதரிடம் உறுதிமொழி அளிக்கக் கூடாதா?" என்று கேட்டார்கள். அது நாங்கள் உறுதி மொழி அளித்திருந்த புதிதாகும். எனவே, "அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் முன்பே உறுதி மொழி அளித்து விட்டோம்" என்று கூறினோம். பின்னர் அவர்கள் "நீங்கள் அல்லாஹ்வின் தூதரிடம் உறுதிமொழி அளிக்கக் கூடாதா?" என்று (மீண்டும்) கேட்டார்கள். "அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் (ஏற்கெனவே) உறுதிமொழி அளித்து விட்டோம்" என்று நாங்கள் (திரும்பவும்) கூறினோம். பின்னர் (மூன்றாவது முறையாக) "நீங்கள் அல்லாஹ்வின் தூதரிடம் உறுதிமொழி அளிக்கக் கூடாதா?" என்று கேட்ட போது, நாங்கள் எங்கள் கைகளை நீட்டி "அல்லாஹ்வின் தூதரே! தங்களிடம் நாங்கள் உறுதிமொழி அளிக்கிறோம். எதற்காக நாங்கள் தங்களிடம் உறுதிமொழி அளிக்க வேண்டும்?" என்று கேட்டோம். அதற்கு அவர்கள், "அல்லாஹ்விற்கு எதையும் இணையாக்காமல் அவன் ஒருவனையே நீங்கள் வழிபட வேண்டும்; ஐவேளைத் தொழுகைகளைத் தொழ வேண்டும்; எனக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் (என்று உறுதிமொழி அளியுங்கள்)" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அவ்ஃப் பின் மாலிக் அல்அஷ்ஜஈ (ரலி). நூல் : முஸ்லிம் (1886).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் உறுதிமொழி கொடுத்த (மதீனாவின்) தலைவர்களில் நானும் ஒருவனாவேன். நாங்கள் அல்லாஹ்வுக்கு எதனையும் இணை கற்பிக்க மாட்டோம் என்றும், திருட மாட்டோம் என்றும், விபசாரம் புரிய மாட்டோம் என்றும், அல்லாஹ் புனிதப்படுத்தியுள்ள (மனித) உயிரை நியாயமின்றிக் கொல்ல மாட்டோம் என்றும், நாங்கள் (பிறர்

பொருளை) அபகரிக்க மாட்டோம் என்றும், இந்த வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்றினால் (எங்களுக்கு) சொர்க்கம் உண்டு என்ற அடிப்படையிலும், இக்குற்றங்களில் எதையேனும் நாங்கள் செய்து விட்டால் அதன் தீர்ப்பு அல்லாஹ்விடமே உண்டு அடிப்படையிலும் நாங்கள் நபி (ஸல்) அவர்களிடம் உறுதிமொழி கொடுத்தோம். அறிவிப்பவர் : உபாதா பின் ஸாமித் (ரலி). நூல் : புகாரி (3893).

**இணைவைக்காமல் வணங்கியவருக்கே வெற்றி உண்டு**

இணைவைக்காமல் அல்லாஹ்விற்கு மட்டும் வணக்கங் களைப் புரிந்தவர்கள் சொர்க்கம் செல்வார்கள்.

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, "என்னைச் சொர்க்கத்தில் சேர்க்கும் ஒரு (நற்)செயலை எனக்குக் கூறுங்கள்" எனக் கேட்டார். அப்போது நபித் தோழர்கள் (வியப்புற்று) "இவருக்கென்ன (ஆயிற்று)? இவருக்கென்ன (ஆயிற்று)?" என்றனர். நபி (ஸல்) அவர்கள் "இவருக்கு ஏதோ தேவையிருக்கிறது (போலும்)!" (என்று கூறிவிட்டு அவரிடம்), "நீர் அல்லாஹ்விற்கு எதனையும் இணைவைக்காமல் அவனை வணங்க வேண்டும்; தொழுகையை நிலைநாட்ட வேண்டும்; ஸகாத் வழங்க வேண்டும்; உறவினர்களிடம் இணக்கமாக நடக்க வேண்டும்" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அபூ அய்யூப் (ரலி). நூல் : புகாரி (1396), முஸ்லிம் (13).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்விற்கு இணைவைக்காமல் அவனை மட்டும் வணங் கியும் தொழுகையை நிலைநாட்டியும் சகாத்தைக் கொடுத்தும் பெரும்பாவங்களைச் செய்யாமல் (மறுமையில்) வருபவருக்கு சொர்க்கம் கிடைக்கும். அறிவிப்பவர் : அபூ அய்யூப் அல்அன்சாரீ (ரலி). நூல் : நஸயீ (3944).

# அல்லாஹ் அல்லாதவர்களின் பலவீனங்கள்

## செவியுற மாட்டார்கள்

இறந்துவிட்ட நல்லடியார்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவார்கள் என்ற எண்ணத்தில் பலர் அல்லாஹ் அல்லாதவரிடம் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் வேண்டுவதை கேட்கும் ஆற்றல் இறந்தவர்களுக்கு இல்லை. இவர்களின் தேவைகளை நிறைவேற்றும் சக்தியும் இறந்தவர்களுக்கு இல்லை.

நீங்கள் அவர்களை அழைத்தால் உங்கள் அழைப்பை அவர்கள் செவியுற மாட்டார்கள். செவியேற்றார்கள் என்று வைத்துக் கொண்டாலும் உங்களுக்குப் பதில் தர மாட்டார்கள். கியாமத் நாளில் நீங்கள் இணை கற்பித்ததை அவர்கள் மறுத்து விடுவார்கள். நன்கறிந்தவனைப் போல் உமக்கு எவரும் அறிவிக்க முடியாது. அல்குர்ஆன் (35 : 14).

அவனன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் உங்களுக்கு உதவிட இயலாது. தமக்கே அவர்கள் உதவ முடியாது. நீங்கள் அவர்களை நேர்வழியின்பால் அழைத்தால் அவர்கள் செவியுற மாட்டார்கள். அல்குர்ஆன் (7 : 197, 198)

கியாமத் நாள் வரை தமக்குப் பதில்தராத, அல்லாஹ் அல்லாதோரை அழைப்பவரை விட மிகவும் வழி கெட்டவர் யார்? அவர்களோ தம்மை அழைப்பது பற்றி அறியாது உள்ளனர். அல்குர்ஆன் (46 : 5).

## பதில் தர மாட்டார்கள்

உயிருள்ளவனைப் பிறர் அழைக்கும் போது அந்த அழைப்பிற்கு அவனால் பதிலளிக்க முடியும். இறந்து போன பிறகு உயிருடன் இருக்கும் போது செய்த காரியங்களைக் கூட இறந்தவர்களால் செய்ய இயலாது. எனவே தான் கப்ர் வணங்கிகள் எப்படி பிரார்த்தித்தாலும் அவர்களின் பிரார்த்

தனைக்கு செத்துப் போனவர்களிடமிருந்து எந்தப் பதிலும் வருவதில்லை.

கியாமத் நாள் வரை தமக்குப் பதில் தராத, அல்லாஹ் அல்லாதோரை அழைப்பவரை விட மிகவும் வழி கெட்டவர் யார்? அவர்களோ தம்மை அழைப்பது பற்றி அறியாது உள்ளனர். அல்குர்ஆன் (46 : 5).

அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் உங்களைப் போன்ற அடிமைகளே. நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் அவர்களை அழைத்துப் பாருங்கள்! அவர்கள் உங்களுக்குப் பதில் தரட்டும்! அல்குர்ஆன் (7 : 194).

**மனிதர்கள் செய்வதை கூட செய்ய முடியாது.**

உயிரோடு இருக்கும் போது இருந்த ஆற்றலை விட இறந்த பிறகு மகான்களுக்கு பன்மடங்கு ஆற்றல் கூடுகிறது என்று கப்ரு வணங்கிகள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ்வால் மட்டுமே செய்வதற்கு சாத்தியமான விஷயங்களை இறந்தவர்கள் செய்வார்கள் என்ற மூடத்தனத்தில் மூழ்கி இருக்கிறார்கள்.

அல்லாஹ் செய்யக்கூடிய பெரிய பெரிய காரியங்களை இறந்து போன இவர்கள் செய்ய வேண்டாம். உயிருள்ள உயிரினம் செய்யக் கூடிய காரியத்தையாவது இவர்களால் செய்ய முடியுமா? ஆடுகளும் மாடுகளும் நடக்கிறது. கத்துகிறது. மனிதன் பேசுகிறான். பொருட்களை கையால் பிடிக்கிறான். இது போன்று இறந்தவர்களால் எழுந்து வந்து நடந்து காட்ட முடியுமா? பொருட்களை பிடித்துக் காட்ட முடியுமா?

கால்நடை செய்யக்கூடிய காரியங்களையே இவர்களால் செய்ய முடியவில்லை என்றால் அல்லாஹ்வால் மட்டும் செய்வதற்கு சாத்தியமான விஷயங்களை இவர்களால் எப்படிச் செய்ய முடியும்? இப்படி அல்லாஹ் திருக்குர்ஆனில் கேட்கிறான்.

"அவர்களுக்கு நடக்கிற கால்கள் உள்ளனவா? அல்லது பிடிக்கிற கைகள் உள்ளனவா? அல்லது பார்க்கிற கண்கள் உள்ளனவா? அல்லது கேட்கிற காதுகள் உள்ளனவா? உங்கள் தெய்வங்களை அழைத்து எனக்கெதிராக சூழ்ச்சி செய்யுங்கள்! எனக்கு எந்த அவகாசமும் தராதீர்கள்!" என்று கூறுவீராக! அல்குர்ஆன் (7 : 195).

மூஸாவுடைய சமூகத்தார் அவருக்குப் பின் அவர்களது நகைகளால் காளைக் கன்றின் வடிவத்தை (கடவுளாக) கற்பனை செய்து கொண்டனர். அதற்கு மாட்டின் சப்தமும் இருந்தது. 'அது அவர்களிடம் பேசாது என்பதையும் அவர்களுக்கு எந்த வழியையும் காட்டாது என்பதையும் அவர்கள் அறிய வேண்டாமா? அவர்கள் இதைக் கற்பனை செய்து அநீதி இழைத்தோரானார்கள். அல்குர்ஆன் (7 : 148).

அவர்களை நேர்வழியின்பால் நீங்கள் அழைத்தால் அவர்கள் உங்களைப் பின்பற்ற மாட்டார்கள். நீங்கள் அவர்களை அழைப்பதும், மௌனமாக இருப்பதும் உங்களைப் பொறுத்த வரை சமமானது. அல்குர்ஆன் (7 : 193).

**உதவி செய்ய முடியாது**

அவனன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் உங்களுக்கு உதவிட இயலாது. தமக்கே அவர்கள் உதவ முடியாது. அல்குர்ஆன் (7 : 197).

இவர்களுக்கு உதவிட அவர்களுக்கு இயலாது. தமக்கே கூட அவர்கள் உதவிக் கொள்ள மாட்டார்கள். அல்குர்ஆன் (7 : 192).

அல்லாஹ்வையன்றி பாதுகாவலர்களை ஏற்படுத்திக் கொண்டோரின் உதாரணம் சிலந்திப் பூச்சியைப் போன்றது. அது ஒரு வீட்டை அமைத்துக் கொண்டது. வீடுகளிலேயே சிலந்தியின் வீடு தான் மிகவும் பலவீனமானது. (அதை) அவர்கள் அறியக் கூடாதா? அல்குர்ஆன் (29 : 41).

**நன்மையோ தீமையோ செய்ய இயலாது**

அல்லாஹ்வையன்றி உமக்குப் பயனும், தீங்கும் தராதவற்றைப் பிரார்த்திக்காதீர்! (அவ்வாறு) செய்தால் நீர் அநீதி இழைத்தவராவீர்! அல்குர்ஆன் (10 : 106).

அல்லாஹ்வையன்றி தனக்குத் தீங்கிழைக்காததையும், பயன் தராததையும் பிரார்த்திக்கிறான். இதுவே தூரமான வழி கேடாகும். அல்குர்ஆன் (22 : 12).

"அல்லாஹ்வையன்றி உங்களுக்கு எந்தப் பயனும் அளிக் காதவற்றையும் உங்களுக்குத் தீங்கும் தராதவற்றையும் வணங்குகின்றீர்களா?" என்று கேட்டார். அல்குர்ஆன் (21 : 66).

**உணவளிக்க முடியாது**

வானங்களிலும், பூமியிலும் இவர்களுக்கான உணவில் சிறிதளவும் கைவசம் வைத்திராதவர்களையும், சக்தியற் றோரையும் அவர்கள் அல்லாஹ்வையன்றி வணங்குகின்றனர். அல்குர்ஆன் (16 : 73).

மனிதர்களே! உங்களுக்கு அல்லாஹ் செய்துள்ள அருளை எண்ணிப்பாருங்கள்! வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிக்கும் அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பவன் உண்டா? அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. எவ்வாறு திசை திருப்பப்படுகிறீர்கள்? அல்குர்ஆன் (35 : 3).

அவன் தனது உணவை நிறுத்தி விட்டால் உங்களுக்கு உணவளிப்பவன் உண்டா? மாறாக வரம்பு மீறுவதிலும் வெறுப்பிலுமே அவர்கள் மூழ்கி விட்டனர். அல்குர்ஆன் (67 : 21).

**செல்வத்தை அளிக்க முடியாது**

அல்லாஹ்வையன்றி நீங்கள் கற்பனையாகப் படைத்த சிலைகளையே வணங்குகிறீர்கள். அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை வணங்குகிறீர்களோ அவர்கள் உங்களுக்குச் செல்வம்

வழங்க இயலாது. எனவே அல்லாஹ்விடமே செல்வத்தைத் தேடுங்கள்! அவனையே வணங்குங்கள்! அவனுக்கு நன்றி செலுத்துங்கள்! அவனிடமே திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்! அல்குர்ஆன் (29 : 17).

அல்லாஹ்வே செல்வம் அளிப்பவன்; உறுதியானவன்; ஆற்றல் உடையவன். அல்குர்ஆன் (51 : 58).

அல்லாஹ் தனது அடியார்களுக்குச் செல்வத்தைத் தாராளமாக வழங்கினால் பூமியில் வரம்பு மீறுகின்றனர். எனினும் தான் நாடியதை அளவோடு அவன் இறக்குகிறான். அவன் தனது அடியார்களை நன்கறிந்தவன்; பார்ப்பவன். அல்குர்ஆன் (42 : 27).

**படைக்க இயலாது**

மனிதர்களே! உங்களுக்கு ஓர் உதாரணம் கூறப்படுகிறது. அதைச் செவிதாழ்த்திக் கேளுங்கள்! அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் அனைவரும் ஒன்று திரண்டாலும் ஓர் ஈயைக் கூட படைக்க முடியாது. ஈ அவர்களிடமிருந்து எதையேனும் பறித்துக் கொண்டால் அதை அந்த ஈயிடமிருந்து அவர்களால் மீட்கவும் முடியாது. தேடுவோனும் தேடப்படுவோனும் பலவீனமாக இருக்கிறார்கள். அல்குர்ஆன் (22 : 73).

"அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைக்கிற, உங்கள் தெய்வங்கள் பூமியில் எதனைப் படைத்தன?" என்று எனக்குக் காட்டுங்கள்! அல்லது வானங்களிலாவது அவர்களுக்குப் பங்கு உண்டா? என்பதற்குப் பதில் சொல்லுங்கள்! என்று கேட்பீராக! அல்குர்ஆன் (35 : 40).

அல்லாஹ்வையன்றி யாரை அழைக்கிறார்களோ அவர்கள் எதையும் படைக்க மாட்டார்கள். அவர்களே படைக்கப் படுகின்றனர். அல்குர்ஆன் (16 : 20).

எதையும் படைக்காதவற்றையா அவர்கள் (இறைவனுக்கு) இணை கற்பிக் கின்றனர்? அவர்களே படைக்கப் படுகின்றனர். அல்குர்ஆன் (7 : 191).

**குழந்தை பாக்கியத்தைத் தர முடியாது**

வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அவன் நாடியதைப் படைக்கிறான். தான் நாடியோருக்குப் பெண்(குழந்தை)களை வழங்குகிறான். தான் நாடியோருக்கு ஆண்(குழந்தை)களை வழங்குகிறான். அல்லது ஆண்களையும், பெண்களையும் சேர்த்து அவர்களுக்கு வழங்குகிறான். தான் நாடியோரை மலடாக ஆக்குகிறான். அவன் அறிந்தவன்; ஆற்றலுடையவன். அல்குர்ஆன் (42 : 49).

**வானவர்களானாலும் அல்லாஹ்விற்கு நிகராக முடியாது**

வானவர்கள் மனிதனை விட சிறந்த படைப்பாகும். எப்பொழுதும் இறைவனை வணங்கிக்கொண்டிருப்பவர்கள். மனிதனை விட பன்மடங்கு ஆற்றல் உள்ளவர்கள். இவர்களை அல்லாஹ்விற்கு நிகராக ஆக்கினாலும் அல்லாஹ் இதை அங்கீ கரிக்கமாட்டான்.

(அது) அவர்கள் அனைவரையும் அவன் ஒன்று திரட்டும் நாள்! பின்னர் "இவர்கள் உங்களைத் தான் வணங்குவோராக இருந்தார்களா?"என்று வானவர்களிடம் கேட்பான். "நீ தூயவன். நீயே எங்கள் பாதுகாவலன். அவர்களுடன் (எங்களுக்கு சம்பந்தம்) இல்லை. மாறாக இவர்கள் ஜின்களையே வணங்கி வந்தனர். இவர்களில் அதிகமானோர் அவர்களையே நம்பினர்" என்று கூறுவார்கள். அல்குர்ஆன் (34 : 40, 41).

**நபிமார்களானாலும் அல்லாஹ்விற்கு நிகராக முடியாது**

நபிமார்கள் அனைவரும் இறை நேசர்கள் என்பது உறுதியான விஷயமாகும். அப்படிப்பட்ட இறைத் தூதர்களை அல்லாஹ்விற்கு நிகராக ஆக்கிவிடக் கூடாது என்று திருக்

குர்ஆன் கூறுகிறது. அப்படியானால் இறைத் தூதர்களின் தகுதியை எட்டாத மனிதர்களை அல்லாஹ்விற்கு இணையாக்குவது எவ்வளவு மோசமான செயல்?

எந்த மனிதருக்காவது அல்லாஹ் வேதத்தையும், அதிகாரத்தையும், நபி எனும் தகுதியையும் வழங்கினால் (அதன்) பின் "அல்லாஹ்வையன்றி எனக்கு அடிமைகளாக ஆகி விடுங்கள்!" என்று கூறுகின்ற அதிகாரம் அவருக்கு இல்லை. மாறாக, "வேதத்தை நீங்கள் கற்றுக் கொடுப்போராக இருப்ப தாலும், அதை வாசித்துக் கொண்டிருப்பதாலும் இறைவனுக் குரியோராக ஆகிவிடுங்கள்!" (என்றே கூறினர்) "வானவர்களையும், நபிமார் களையும் கடவுள்களாக்கிக் கொள்ளுங்கள்!" என்று அவர் உங்களுக்கு ஏவமாட்டார். நீங்கள் முஸ்லிம்களாக ஆன பின் (ஏக இறைவனை) மறுக்குமாறு அவர் உங்களுக்கு ஏவுவாரா? அல்குர்ஆன் (3 : 79,80).

நபிமார்கள் உட்பட அடிமை என்ற தகுதியைத் தாண்டி இறைவனின் தன்மைகளை ஒரு போதும் அடைய முடியாது.

வானங்களிலும், பூமியிலும் உள்ள ஒவ்வொருவரும் அளவற்ற அருளாளனிடம் அடிமையாகவே வருவார்கள். அல்குர்ஆன் (19 : 93).

**கிறித்துவர்கள் ஏன் இறை மறுப்பாளர்களாக ஆனார்கள்?**

கிறித்துவர்கள் இறை நேசர் என்று நிரூபிக்கப்படாத சாதாரண மனிதரை அல்லாஹ்விற்கு நிகராக ஆக்கவில்லை. மாறாக இறை நேசர் என்று அல்லாஹ்வால் நிரூபிக்கப்பட்ட ஈஸா (அலை) அவர்களிடமே பிரார்த்தித்தார்கள்.

தந்தையில்லாமல் அற்புதமாகப் பிறந்த சிறப்பு இவர்களுக்கு உண்டு. குருடர்களுக்கு பார்வைகளை வரவழைப் பது, இறந்தவர்களுக்கு உயிரூட்டுவது, குஷ்ட நோயாளிகளைக் குணப்படுத்துவது, வீட்டில் மறைத்து வைக்கப்பட்ட பொருட்களை

அறிவிப்பது, களிமண்ணால் செய்யப்பட்ட பறவைகளுக்கு உயிர் கொடுப்பது இப்படி எண்ணற்ற அற்புதங்களை அல்லாஹ் ஈஸா (அலை) அவர்களுக்கு வழங்கினான்.

இஸ்ராயீலின் மக்களுக்குத் தூதராகவும் (அவரை அனுப்பினான்.) "உங்கள் இறைவனிடமிருந்து சான்றை நான் கொண்டு வந்துள்ளேன். உங்களுக்காக களிமண்ணால் பறவை யின் வடிவம் அமைத்து, அதில் ஊதுவேன்; அல்லாஹ்வின் விருப்பப்படி அது பறவையாக ஆகும். அல்லாஹ்வின் விருப்பப்படி பிறவிக் குருடையும், குஷ்டத்தையும் நீக்குவேன்; இறந்தோரை உயிர்ப்பிப்பேன்; நீங்கள் உண்பதையும், உங்கள் வீடுகளில் நீங்கள் சேமித்து வைத்திருப்பதையும் உங்களுக்குக் கூறுவேன்; நீங்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் இதில் உங்களுக்குச் சான்று உள்ளது" (என்றார்). அல்குர்ஆன் (3 : 49).

எல்லா வகையிலும் சிறந்த ஈஸா (அலை) அவர்களிடம் பிரார்த்தித்து அவர்களை அல்லாஹ்விற்கு இணையாக ஆக்கிய கிறித்தவர்கள் இறை மறுப்பாளர்கள் என்றும் முஸ்லிம்கள் அல்ல என்றும் நாம் நம்பும் போது ஈஸா (அலை) அவர்களின் தகுதியை அடையாதவர்களிடம் பிரார்த்திப்பவர்கள் முஸ்லிமாக இருக்க முடியுமா என்று நாம் சிந்திக்க வேண்டும்.

"மர்யமின் மகன் மஸீஹ் தான் அல்லாஹ்" எனக் கூறிய வர்கள் (ஏக இறைவனை) மறுத்து விட்டனர். "இஸ்ராயீலின் மக்களே! என் இறைவனும், உங்கள் இறைவனுமாகிய அல்லாஹ் வை வணங்குங்கள்! அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கி விட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை" என்றே மஸீஹ் கூறினார். அல்குர்ஆன் (5 : 72).

ஈஸா (அலை) அவர்களிடம் பிரார்த்தனை செய்தால் மறுமை யில் உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கையில் கிறித்தவர்கள் ஈஸா (அலை) அவர்களை இறைவனுடைய தகுதிக்கு உயர்த்தி யுள்ளார்கள்.

இவர்களைப் போன்றே நம் சமுதாயத்தில் பலர் மகான்கள் மறுமையில் நமக்கு உதவி செய்வார்கள் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். தன்னிடம் பிரார்த்தித்தவர்களுக்கு ஈஸா (அலை) அவர்களால் மறுமையில் எந்த உதவியும் செய்ய முடியாது. அவ்வாறிருக்க முகவரி இல்லாமல் மகான்கள் என்று யூகிக்கப்படுபவர்களால் மறுமை யில் மக்களுக்கு எந்த உதவியும் செய்ய முடியாது.

"மர்யமின் மகன் ஈஸாவே! 'அல்லாஹ்வையன்றி என்னையும், என் தாயாரையும் கடவுள்களாக்கிக் கொள்ளுங்கள்!' என நீர் தான் மக்களுக்குக் கூறினீரா?" என்று அல்லாஹ் (மறுமையில்) கேட்கும் போது, "நீ தூயவன். எனக்குத் தகுதி யில்லாத வார்த்தையை நான் கூற உரிமையில்லாதவன். நான் அவ்வாறு கூறியிருந்தால் அதை நீ அறிவாய். எனக்குள் உள்ளதை நீ அறிவாய்! உனக்குள் உள்ளதை நான் அறிய மாட்டேன். நீயே மறைவானவற்றை அறிபவன்" என்று அவர் பதிலளிப்பார்.

"நீ எனக்குக் கட்டளையிட்டபடி 'எனது இறைவனும், உங்கள் இறைவனுமாகிய அல்லாஹ்வை வணங்குங்கள்!' என்பதைத் தவிர வேறு எதையும் நான் அவர்களிடம் கூறவில்லை. நான் அவர்களுடன் இருக்கும் போது அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தேன். என்னை நீ கைப்பற்றியதும் நீயே அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தாய். நீ அனைத்துப் பொருட்களையும் கண்காணிப்பவன்."

"அவர்களை நீ தண்டித்தால் அவர்கள் உனது அடியார்களே. அவர்களை நீ மன்னித்தால் நீ மிகைத்தவன்; ஞானமிக்கவன்" (எனவும் அவர் கூறுவார்). அல்குர்ஆன் (5 : 116 - 118).

**மக்கத்து கா∴பிர்கள் ஏன் வழிகெட்டார்கள்**

மக்கத்துக் கா∴பிர்கள் அல்லாஹ் கடவுள் இல்லை என்று மறுக்கவில்லை. இந்த வானம் பூமி அனைத்தையும் படைத்ததும், மழையை இறக்குவதும், பேரழிவுகள் வரும் போது காப்பாற்றுவதும், அல்லாஹ் தான் என்பதில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தார்கள். அல்லாஹ்விற்கு மேலாக அவர்கள் யாரையும் நினைக்கவில்லை. என்றாலும் இந்த நம்பிக்கை அவர்களுக்கு எப்பலனையும் தரவில்லை. அவர்களை கா∴பிர்கள் என்றே அல்லாஹ் கூறுகிறான். நபி (ஸல்) அவர்களும் அவர்களை இணைவைப்பாளர்கள் என்றே கூறினார்கள். அவர்களிடம் போரிட்டார்கள்.

ஏனென்றால் படைத்து பரிபாலிப்பவன் அல்லாஹ்தான் என அவர்கள் நம்பினாலும் வழிபாடுகளை அவனல்லாத மற்ற வர்களுக்கு செய்தனர். அல்லாஹ்வின் மூன்று உரிமைகளில் மூன்றாவது உரிமையான வணக்கத்தில் இணைவைத்தனர். இதனால் அவர்கள் முஸ்லிம்களாக இருக்கவில்லை.

மக்கத்துக் கா∴பிர்கள் அல்லாஹ்வின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக எவற்றை நம்பினார்களோ அந்த அதிகாரங்கள் அப்துல்காதிர் ஜீலானிக்கும், ஷாகுல் ஹமீது பாதுஷாவுக்கும் உள்ளது என்று இன்றைக்கு நம்புபவர்கள் முஸ்லிம்களாக இருக்க முடியாது.

பெரும் துன்பங்கள் வரும் போது முஹ்யத்தீனே என்று அழைப்பவர்கள் நம் சமூகத்தில் இருக்கிறார்கள். ஆனால் மக்கத்துக் கா∴பிர்கள் பெரும் துன்பங்கள் வரும் போது அல்லாஹ்வை மட்டுமே அழைப்பார்கள். மற்ற கடவுள்களை

மறந்து விடுவார்கள். இந்த வகையில் மக்கத்துக் காஃபிர்களை விட மோசமான நிலையில் இவர்கள் இருக்கிறார்கள்.

"வானங்களையும், பூமியையும் படைத்தவனும், சூரியனை யும், சந்திரனையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவனும் யார்?" என்று அவர்களிடம் நீர் கேட்டால் "அல்லாஹ்" என்று கூறுவார்கள். அப்படியாயின் "எவ்வாறு அவர்கள் திசை திருப் பப்படுகிறார்கள்?" அல்குர்ஆன் (29 : 61).

"வானத்திலிருந்து தண்ணீரை இறக்கி பூமி செத்த பின் அதன் மூலம் அதற்கு உயிரூட்டுபவன் யார்?" என்று அவர்களிடம் நீர் கேட்டால் "அல்லாஹ்" என்றே கூறுவார்கள். "அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்" என்று கூறுவீராக! மாறாக அவர்களில் அதிகமானோர் விளங்கிக்கொள்வதில்லை. அல்குர்ஆன் (29 : 63).

"வானங்களையும், பூமியையும் படைத்தவன் யார்?" என்று அவர்களிடம் நீர் கேட்டால் "அல்லாஹ்" என்று அவர்கள் கூறுவார்கள். "அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்" என்று கூறுவீராக! எனினும் அவர்களில் அதிமானோர் அறிய மாட்டார்கள். அல்குர்ஆன் (31 : 25).

முகடுகளைப் போல் அலைகள் அவர்களை மூடும் போது உளத்தூய்மையுடன் வணக்கத்தை உரித்தாக்கி அவனைப் பிரார்த் திக்கின்றனர். அவர்களைக் காப்பாற்றித் தரையில் சேர்த்ததும் அவர்களில் நேர்மையாக நடப்பவரும் உள்ளனர். நன்றி கெட்ட சதிகாரர்களைத் தவிர வேறு எவரும் நமது சான்றுகளை நிராகரிப்பதில்லை. அல்குர்ஆன் (31 : 32).

சிறந்த மகானும் இறைத் தூதருமான இப்ராஹீம் (அலை) அவர்களையே அல்லாஹ்விற்கு நிகராக மக்கத்துக் காஃபிர்கள் கருதினார்கள். இஸ்மாயீல் (அலை) அவர்களையும் அல்லாஹ் விற்கு இணையாகக் கருதினார்கள். இதனால் இறை மறுப்பா ளர்களாக ஆனார்கள்.

அப்படியானால் முகவரியில்லாதவர்களை எல்லாம் அல்லாஹ்விற்கு நிகராக ஆக்குபவர்கள் எப்படி முஸ்லிம் களாக இருக்க முடியும்?

நபி (ஸல்) அவர்கள் (மக்காவுக்கு) வந்த போது கஅபா வில் சிலைகள் இருந்ததால் உள்ளே நுழைய மறுத்து அவற்றை அப்புறப்படுத்துமாறு கட்டளையிட்டார்கள். உடனே அவை அப்புறப்படுத்தப்பட்டன. அச்சிலைகளில் (குறி பார்ப்ப தற்குரிய) அம்புகளைக் கையில் தாங்கியவாறு இப்றாஹீம் (அலை), இஸ்மாஈல் (அலை) ஆகியோரின் உருவங்கள் இருந்தன. அவற்றையும் வெளியேற்றினார்கள். இதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ் இ(தைச் செய்த)வர்களை அழிப்பானாக...! அல்லாஹ்வின் மீது ஆணையாக...! இவ்விரு வரும் (இரு நபிமார்களும்) அம்புகள் மூலமாக குறி பார்ப்பவர் களாக ஒரு போதும் இருந்ததில்லை என்பதை இதைச் செய்த வர்கள் அறிந்தே வைத்திருக்கின்றனர் என்று கூறிவிட்டு கஅபா வில் நுழைந்தார்கள். அதன் ஓரங்களில் (நின்று) தக்பீர் கூறி னார்கள். அதில் தொழவில்லை. அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி). நூல்: புகாரீ (1601).

**நல்லடியார்களையும் வணங்கக் கூடாது**

நபி (ஸல்) அவர்கள் காலத்தில் இருந்த மக்கள் நல்லடி யார்களை வணங்கினர். அல்லாஹ்வுக்கு இணையாக யாரை ஏற்படுத்தினாலும் அல்லாஹ் அதை அங்கீகரிக்கமாட்டான்.

இவர்கள் யாரை அழைக்கின்றார்களோ அவர்களில் இறைவனுக்கு மிக நெருக்கமானவர்கள் தங்கள் இறைவனிடம் நெருங்குவதற்குரிய வழியை தேடுகிறார்கள். அவனுடைய அருளை எதிர்பார்க்கின்றனர். அவனுடைய தண்டனையை அஞ்சுகின்றனர். அல்குர்ஆன் (17 : 57.)

யூதர்களும் கிரிஸ்தவர்களும் நல்லடியார்கள் விசயத்தில் வரம்பு மீறினர். அவர்களை அல்லாஹ்வுடைய இடத்தில் வைத்தனர்.

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள் : உம்மு ஹபீபா அவர்களும் உம்மு சலமா அவர்களும் (அபிசீனிய ஹிஜ்ரத்தின் போது) அபிசீனியாவில் தாங்கள் பார்த்த உருவப்படங்கள் கொண்ட ஒரு கிறிஸ்தவ ஆலயத்தைக் குறித்து (என்னிடம்) பேசினார்கள். மேலும் அவ்விருவரும், நபி (ஸல்) அவர்களிடம் அதைப் பற்றிக் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "(அவர்கள் எத்தகையவர்கள் என்றால்) அவர்களிடையே நல்ல மனிதர் ஒருவர் வாழ்ந்து இறந்துவிடும் போது அவரது சமாதியின் மீது வணக்கத்தலம் ஒன்றைக் கட்டி அதில் (அவருடைய) அந்த உருவங்களை வரைவார்கள். அவர்கள்தாம் மறுமைநாளில் அல்லாஹ்விடம் மக்களிலேயே மிக மோசமானவர்கள்" என்று கூறினார்கள். நூல் : புகாரி (427).

## இணைவைப்பின் அபாயங்கள்

### பேரழிவை உண்டாக்கும் பெரும்பாவம்

நான் நபி (ஸல்) அவர்களிடம், "அல்லாஹ்விடம் பாவங்களில் மிகப் பெரியது எது?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "அல்லாஹ் உன்னைப் படைத்திருக்க, அவனுக்கு நீ இணை கற்பிப்பது" என்று சொன்னார்கள். நான், "நிச்சயமாக அது மிகப் பெரிய குற்றம் தான்" என்று சொன்னேன். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி). நூல் : புகாரி (4477).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : பேரழிவை உண்டாக்கும் பெரும் பாவங்களைத் தவிர்த்து விடுங்கள். (இறைவனுக்கு) இணைவைப்பதும் சூனியம் செய் வதும் அவற்றில் அடங்கும். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : புகாரி (5764).

நபியவர்கள் கற்றுக் கொடுத்த ஏகத்துவ வாக்கியத்தை மொழியும் போது அழிவுகளிலிருந்து முஸ்லிம் காக்கப் படுகிறான். ஆனால் இணைவைப்பு என்ற பாவத்தைச் செய்து விட்டால் இந்த பாதுகாப்பு அகன்று நாசமாகி விடுகிறான்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஃபஜர் தொழுகைக்குப் பிறகு இரு கால்களையும் மடக்கியவாறே (வேறு விஷயங்களை) பேசுவதற்கு முன்னால் லாயிலாஹ இல்லல்லாஹூ வஹ்தஹூ லாஷரீக்க லஹூ லஹுல் முல்(க்)கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீ(த்)து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர் என்று பத்து முறை எவர் கூறுகிறாரோ அவருக்குப் பத்து நன்மைகள் எழுதப்படுகின்றன. பத்து பாவங்கள் அவரை விட்டும் அழிக்கப்படுகின்றன. அவருக் காகப் பத்து தகுதிகள் உயர்த்தப்படுகின்றன. அந்த நாள் முழுவதும் அனைத்து ஆபத்துகளிலிருந்தும் பாதுகாக்கப்படுகிறார். ஷைத்தானிட மிருந்தும் பாதுகாக்கப்படுகிறார். அந்நாளில் அல்லாஹ்விற்கு இணை கற்பிப்பதைத் தவிர வேறெந்த பாவத்தாலும் அவரை நாசமாக்க இயலாது.

பொருள் : அல்லாஹ் ஒருவனையன்றி வேறு யாரும் வணக்கத்திற்குத் தகுதியானவர்கள் இல்லை. அவனுக்கு எந்த நிகரும் இல்லை. அதிகாரமும், புகழும் அவனுக்கே உரியது. அவன் உயிர்பிக்கிறான். மரணிக்கச் செய்கிறான். எல்லாவற் றின் மீதும் அவன் ஆற்றல் உள்ளவனாக இருக்கிறான். அறிவிப்பவர் : அபூதர் (ரலி). நூல் : திர்மிதி (3396).

**இணைவைப்பது பெரும்பாவங்களில் முதன்மையானதாகும்**

இறைவன் பல்வேறு தீமைகளை தடைசெய்துள்ளான். இறைவன் தடைசெய்த தீமைகளில் மிகப்பெரியது இணைவைப்பாகும். பாவங்களில் முதல் பெரிய பாவமாக இணைவைப்பையே அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

"வாருங்கள்! உங்கள் இறைவன் உங்களுக்குத் தடை செய்ததைக் கூறுகிறேன்" என்று (முஹம்மதே!) கூறுவீராக! அது, "நீங்கள் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்கக் கூடாது" என்பதே. பெற்றோருக்கு உதவுங்கள்! வறுமையின் காரணமாக உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்! உங்க ளுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். வெட்கக் கேடான காரியங்களில் வெளிப்படையானதையும், இரகசியமா னதையும் நெருங்காதீர்கள்! அல்லாஹ் தடை செய்துள்ளதால் எவரையும் (அதற்கான) உரிமை இருந்தால் தவிர கொல்லா தீர்கள்! நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக இதையே அவன் உங்களுக்கு வலியுறுத்துகிறான். அல்குர்ஆன் (6 : 151).

மேற்கண்ட வசனத்தைப் போன்று பின்வரும் வசனத்திலும் இறைவன் தடைசெய்த காரியங்களில் இணைவைப்பையே அல்லாஹ் முதல் இடத்தில் குறிப்பிடுகிறான்.

அல்லாஹ்வுடன் மற்றொரு கடவுளை நீர் கற்பனை செய்யாதீர்! அவ்வாறு செய்தால் இழிந்தவராகவும், கை விடப்பட்டவராகவும் அமர்ந்து விடுவீர்! அல்குர்ஆன் (17 : 22).

(முஹம்மதே!) இவை, உமது இறைவன் (தனது) ஞானத்தி லிருந்து உமக்கு அறிவிப்பவை. அல்லாஹ்வுடன் வேறு கடவுளைக் கற்பனை செய்யாதீர்! (அவ்வாறு செய்தால்) இழிந்த வராகவும், (இறையருளை விட்டும்) தூரமாக்கப்பட்டவராகவும் நரகத்தில் வீசப்படுவீர்! அல்குர்ஆன் (17 : 39).

மேற்கண்ட அல்இஸ்ரா அத்தியாயத்தில் பாவங்களை அல்லாஹ் பட்டியலிடுகிறான். இவற்றில் அவன் முதன்மையாக இணைவைப்பையே எச்சரிக்கிறான். இதன்பின் பல்வேறு பாவங்களை தடைசெய்துவிட்டு இறுதியில் மறுபடியும் இணைவைக்க வேண்டாம் என கட்டளையிடுகிறான்.

(ஒரு முறை) "பெரும் பாவங்களிலேயே மிகப் பெரும் பாவங்களை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என்று நபி (ஸல்) அவர்கள் (மூன்று முறை) கேட்டார்கள். மக்கள், "ஆம், அல்லாஹ்வின் தூதரே! (அறிவியுங்கள்)" என்று சொன்னார்கள். உடனே, நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ்வுக்கு இணைவைப்ப தும், பெற்றோருக்குத் துன்பம் தருவதும் (தான் அவை)" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அபூபக்ரா (ரலி). நூல் : புகாரி (2654).

**இணைவைப்பது மாபெரும் அநியாயமாகும்**

உரிமைபடைத்த ஒருவரின் இடத்தில் அதற்குத் தகுதி இல்லாதவரை வைத்தல் அநியாயமாகும்.

நம்முடைய தேவைகள் அனைத்தையும் அல்லாஹ் பூர்த்தி செய்யும் போது எதுவும் செய்ய முடியாத பலவீனமான மனிதர்களை அல்லாஹ்விற்கு இணையாகக் கருதுவது உண்மையில் மாபெரும் அநீதியாகும்.

லுக்மான் தமது மகனுக்கு அறிவுரை கூறும் போது "என் அருமை மகனே! அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்காதே! இணை கற்பித்தல் மகத்தான அநீதியாகும்" என்று குறிப்பிட்டதை நினைவூட்டுவீராக! அல்குர்ஆன் (31 : 13).

'எவர் இறை நம்பிக்கை கொண்டு (பின்னர்) தமது இறை நம்பிக்கையுடன் அநீதியைக் கலந்திடவில்லையோ' என்னும் (6:82) வசனம் அருளப்பட்ட போது அது முஸ்லிம்களுக்கு மிகவும் கடினமானதாகத் தென்பட்டது. ஆகவே, அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! எங்களில் தனக்குத் தானே அநீதியிழைத்துக் கொள்ளாதவர் எவர்?" என்று கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "(இந்த வசனம் குறிப்பிடுவது) அதுவல்ல. அது இணைவைப்பையே குறிக்கின்றது. 'என் அருமை மகனே! அல்லாஹ்வுக்கு இணைவைக்காதே. நிச்சயமாக, இணைவைப்புமாபெரும் அநீதியாகும்' என்று (அறிஞர்) லுக்மான்,

தம் மகனுக்கு அறிவுரை கூறுவதை (திருக்குர்ஆன் எடுத்துரைக்கின்றதே, (31:13) அதை) நீங்கள் கேட்கவில்லையா?" என்று சொன்னார்கள். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி). நூல் : புகாரி (3429).

**இணைவைப்பது சைத்தானின் செயலாகும்**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு நாள் உரையாற்றிய போது பின்வருமாறு கூறினார்கள் : அறிந்து கொள்ளுங்கள்: என் இறைவன் இன்றைய தினம் எனக்குக் கற்றுத் தந்தவற்றிலிருந்து நீங்கள் அறியாதவற்றை உங்களுக்குக் கற்றுத் தருமாறு எனக்குக் கட்டளையிட்டான்.

(இறைவன் கூறினான்:) நான் ஓர் அடியானுக்கு வெகுமதியாக வழங்கியுள்ள அனைத்துப் பொருட்களும் அவனுக்கு அனுமதிக்கப்பட்டவையே ஆகும். நான் என் அடியார்கள் அனைவரையும் (இயற்கையிலேயே) உண்மை வழி நின்றவர்களாகவே படைத்தேன். (ஆயினும்) அவர்களிடம் ஷைத்தான் வந்து அவர்களது இயற்கை நெறியிலிருந்து அவர்களைப் பிறழச் செய்து விட்டான். நான் அவர்களுக்கு அனுமதித்துள்ளவற்றைத் தடை செய்யப்பட்டவையாக ஆக்கி விட்டான்; எனக்கு இணை கற்பிப்பதற்கு எந்தச் சான்றையும் நான் இறக்காத நிலையில் எனக்கு இணை கற்பிக்குமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டு விட்டான். அறிவிப்பவர் : இயாள் பின் ஹிமார் (ரலி). நூல் : முஸ்லிம் (5498).

**இணைவைப்பது நெருப்பில் விழுவதை விடக் கொடியது**

நீ வெட்டப்பட்டாலும், எரிக்கப்பட்டாலும் அல்லாஹ்விற்கு இணையாக எதையும் ஆக்கிவிடாதே என்று எனது உற்றத்தோழர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கு உபதேசித்தார்கள். அறிவிப்பவர் : அபுத்தர்தாஃ (ரலி). நூல் : இப்னு மாஜா (4024) .

## இணைவைத்தவர்களுக்கு நிரந்தர நரகம் உண்டு

அல்லாஹ்விற்கு இணைவைக்காமல் ஓரிறைக் கொள்கையைக் கடைபிடித்தவன் நிறைய பாவங்களைச் செய்திருந்தால் அல்லாஹ் நாடினால் அவனை மன்னித்து சொர்க்கத்திற்கு அனுப்புவான். அல்லாஹ் நாடினால் அவனை நரகத்தில் சிறிது காலம் தண்டித்து விட்டு பிறகு சொர்க்கத்திற்கு அனுப்புவான்.

ஓரிறைக் கொள்கையை ஏற்ற காரணத்தினால் தண்டனை வழங்கப்பட்ட பிறகாவது கண்டிப்பாக என்றைக் காவது ஒரு நாள் சொர்க்கத்திற்குச் சென்று விடுவான்.

ஆனால் இணைவைத்தவர்கள் என்றென்றும் நிரந்தரமாக நரகத்திலேயே கிடப்பார்கள். இவர்கள் என்றைக்கும் சொர்க்கத்திற்குச் செல்ல முடியாது.

அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கி விட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை" என்றே மஸீஹ் கூறினார். அல்குர்ஆன் (5 : 72).

(ஏக இறைவனை) மறுப்போராகிய வேதமுடையோரும், இணைகற்பிப்போரும் நரக நெருப்பில் இருப்பார்கள். அதில் என்றென்றும் நிரந்தரமாக இருப்பார்கள். அவர்களே படைப்பு களில் மிகவும் கெட்டவர்கள். அல்குர்ஆன் (98 : 6).

இணை கற்பிப்போர் தமது (இறை) மறுப்புக்கு, தாமே சாட்சி கூறிக் கொண்டிருக்கும் நிலையில் அல்லாஹ்வின் பள்ளிவாசல்களை நிர்வகிப்பது தகாது. அவர்கள் செய்தவை அழிந்து விட்டன. அவர்கள் நரகில் நிரந்தரமாக இருப்பார்கள். அல்குர்ஆன் (9 : 17).

நபி (ஸல்) அவர்கள் (ஒரு கருத்தை) ஒரு வாக்கியத்தில் சொல்ல, நான் (அதே கருத்தை) வேறொரு வாக்கியத்தில் சொன்னேன். நபி (ஸல்) அவர்கள், "யார் அல்லாஹ் அல்லாததை அவனுக்கு இணை என வாதித்தபடி இறந்து விடுகிறாரோ அவர் நரகம் புகுவார்" என்று கூறினார்கள். "(அப்படியானால்) யார் அல்லாஹ் அல்லாததை அவனுக்கு இணை கற்பிக்காதவராக இறந்துவிடுகிறாரோ அவர் சொர்க்கம் புகுவார்" என்று நான் சொன்னேன். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி). நூல் : புகாரி (4497).

**உறவினரானாலும் நரகவாசியே**

நபிமார்களுக்கு நெருக்கமான உறவினர்களானாலும் இணைவைத்துவிட்டால் அவர்களும் வெற்றி பெற முடியாது. நூஹ் (அலை) மற்றும் லூத் (அலை) ஆகிய இரு இறைத் தூதர்களின் மனைவிமார்கள் வழி கெட்டு விட்டார்கள்; நரகவாசிகள் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான். நபிமார்கள் நினைத்தாலும் அவர்களை காப்பாற்ற முடியாது.

நூஹுடைய மனைவியையும், லூத்துடைய மனைவியையும் (தன்னை) மறுப்போருக்கு அல்லாஹ் முன்னுதாரணமாகக் காட்டுகிறான். அவ்விருவரும் நமது இரு நல்லடியார்களின் மனைவியராக இருந்தனர். அவர்களுக்கு (இறைமறுப்பின் மூலம்) துரோகம் செய்தனர். எனவே அவ்விருவரையும் அல்லாஹ்விடமிருந்து அவர்கள் சிறிதளவும் காப்பாற்றவில்லை. "இருவரும் நரகில் நுழைவோருடன் சேர்ந்து நுழையுங்கள்!" என்று கூறப்பட்டது. அல்குர்ஆன் (66 : 10).

நபி (ஸல்) அவர்களின் தந்தை இணைவைத்தவராக இறந்ததால் அவரும் நரகத்தில் இருப்பார் என்று நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

ஒரு மனிதர் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! (இஸ்லாத்திற்கு முன் இறந்துவிட்ட) என் தந்தை எங்கே இருக்கிறார்?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், '(நரக) நெருப்பில்" என்று பதிலளித்தார்கள். அவர் திரும்பிச் சென்ற போது அவரை நபி (ஸல்) அவர்கள் அழைத்து, "என் தந்தையும் உன் தந்தையும் (நரக) நெருப்பில் தான் (இருக்கிறார்கள்)" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அனஸ் (ரலி) . நூல் : முஸ்லிம் (347).

நபி (ஸல்) அவர்களின் தாயார் இணைவைத்தவராக மரணித்ததால் அவர்களுக்காக பாவமன்னிப்புத் தேடக் கூடாது என்று இறைவன் நபியவர்களுக்குத் தடை பிறப்பித்தான்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நான் என் இறைவனிடம் என் தாயாருக்காகப் பாவமன்னிப்புக் கோர அனுமதி கேட்டேன். அவன் அனுமதி வழங்கவில்லை. அவரது அடக்கத்தலத்தைச் சந்திக்க அனுமதி கேட்டேன். எனக்கு அனுமதி வழங்கினான். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : முஸ்லிம் (1776).

**இணைவைப்பது ஏன் பெருங்குற்றம்?**

தனக்கு மட்டும் கொடுக்க வேண்டிய உரிமையை மற்றவர்களுக்குக் கொடுப்பதை மனிதர்கள் யாரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்.

ஒரு மனைவி கணவன் சொல்கின்ற அனைத்து வேலைகளையும் அழகுறச் செய்கிறாள். சுவையான உணவைச் சமைத்துத் தருகிறாள். ஆனால் இவள் கணவனை மட்டும் வைக்க வேண்டிய இடத்தில் அந்நிய ஆணை வைத்து விட்டால் அவளுடைய கணவனுக்குக் கடுமையான கோபம் வருகிறது.

மனைவியின் பிறப்புக்கோ, வளர்ப்புக்கோ கணவன் எந்த வகையிலும் காரணமாக அமையவில்லை. திருமணம் என்ற ஒப்பந்தத்தால் மட்டுமே இருவரும் இணைகிறார்கள். விரும்பும்

போது இந்த ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வதற்கு மனைவிக்கு உரிமை உண்டு. இந்நிலையில் கணவனுக்கு மட்டும் கொடுக்க வேண்டிய படுக்கை சுகத்தை மற்றவனுக்குக் கொடுக்கும் போது கணவனுக்குக் கடும் கோபம் வருகிறது.

நாம் சம்பாதித்து வாங்கிய நிலத்தில் சிறிதளவை வேறு யாராவது எடுத்துக்கொண்டால் அதை நம்மால் பொறுக்க முடியுமா?

எஜமானிடம் சம்பளம் வாங்கும் தொழிலாளி வேறு இடத்தில் சென்று வேலை பார்ப்பது நியாயமா?

நமது உரிமைகளில் பிறர் தலையிடுவதை நாம் ஒத்துக்கொள்வதில்லை. கடும்கோபம் ஏற்படுகிறது.

மனிதர்களைப் படைத்து உணவளிப்பது அல்லாஹ். எல்லா பாக்கியங்களையும் வழங்குவதும் அல்லாஹ். அல்லாஹ்வின் எல்லா பாக்கியங்களையும் அனுபவித்துக் கொண்டு அவனுடைய உரிமையில் மற்றவர்களை இணையாக் குவது அல்லாஹ்விற்குக் கடும் கோபத்தை ஏற்படுத்துகிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஸகரிய்யா (அலை) அவர்களின் மகனாகிய யஹ்யா (அலை) அவர்கள் இஸ்ரவேலர் களிடத்தில் (பின்வருமாறு) கூறினார்கள். ஐந்து விஷயங்களை நான் கடைப்பிடிக்குமாறு அல்லாஹ் எனக்கு உத்தரவிட்டுள்ளான். நீங்கள் அதன் படி நடப்பதற்கு நான் உங்களுக்கு உத்தரவிடுகிறேன். அல்லாஹ்விற்கு இணையாக எதையும் கருதாமல் அவனை மட்டும் நீங்கள் வணங்கி வர வேண்டும் என்பது அவற்றில் முதன்மையானதாகும்.

ஒரு மனிதன் தன்னுடைய தூய செல்வத்திலிருந்து தங்கம் அல்லது வெள்ளியைக் கொடுத்து ஒரு அடிமையை விலைக்கு வாங்குகிறான். அந்த அடிமை வேலை செய்ய ஆரம்பிக்கிறான். தனது சம்பாத்தியத்தை எஜமான் அல்லாத மற்றவனிடத்தில்

ஒப்படைக்கிறான். தனது அடிமை இவ்வாறு நடப்பதை உங்களில் எவராவது விரும்புவாரா? இதுவே இணை வைப்பவருக்குரிய உதாரணமாகும்.

அல்லாஹ் தான் உங்களைப் படைத்தான். உங்களுக்கு உணவளிக்கிறான். எனவே அவனுக்கு எதையும் இணையாக் காமல் அவனை மட்டும் வணங்கி வாருங்கள். அறிவிப்பவர் : ஹாரிஸ் அல்அஷ்அரீ (ரலி). நூல் : அஹ்மத் (16542).

**இணைவைப்பிற்கு எதிராக நபிமார்களின் வீரியப் பிரச்சாரம்**

இணைவைப்பிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்காக அதிகமான இறைத் தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இணைவைப்பிற்கு எதிராக மக்களிடத்தில் பிரச்சாரம் செய்தார்கள்.

'அல்லாஹ்வை வணங்குங்கள்! (அவனல்லாமல் வணங்கப் படும்) தாகூத்(தீய சக்தி)களை விட்டு விலகிக் கொள்ளுங்கள்!" என்று ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒரு தூதரை அனுப்பினோம். அல்லாஹ் யாருக்கு நேர் வழி காட்டினானோ அவரும் அச்சமுதாயத்தில் இருந்தனர். வழிகேடு உறுதியானவர்களும் இருந்தனர். எனவே பூமியில் பிரயாணம் செய்து பொய்யெனக் கருதியோரின் முடிவு எவ்வாறு இருந்தது என்பதைக் கவனியுங்கள்! அல்குர்ஆன் (16 : 36).

"என்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரு மில்லை; எனவே என்னையே வணங்குங்கள்!" என்பதை அறிவிக் காமல் (முஹம்மதே!) உமக்கு முன் எந்தத் தூதரையும் நாம் அனுப்பியதில்லை. அல்குர்ஆன் (21 : 25).

"அல்லாஹ்வைத் தவிர (எதையும்) வணங்காதீர்கள்!" என்று (போதிக்க) அவர்களுக்கு முன்னரும் அவர்களுக்குப் பின்னரும் மக்களிடம் தூதர்கள் வந்தனர். அல்குர்ஆன் (41 : 14).

**நூஹ் (அலை)**

நூஹை, அவரது சமுதாயத்திடம் அனுப்பி வைத்தோம். "என் சமுதாயமே! அல்லாஹ்வை வணங்குங்கள்! உங்களுக்கு அவனன்றி வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. மகத்தான நாளின் வேதனையை உங்கள் மீது நான் அஞ்சுகிறேன்" என்று அவர் கூறினார். அல்குர்ஆன் (7 : 59).

**ஹூத் (அலை)**

ஆது சமுதாயத்திடம் அவர்களின் சகோதரர் ஹூதை அனுப்பினோம். "என் சமுதாயமே! அல்லாஹ்வை வணங்குங் கள்! உங்களுக்கு அவனன்றி வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை (இறைவனை) அஞ்ச மாட்டீர்களா?" என்று அவர் கேட்டார். அல்குர்ஆன் (7 : 65).

**ஸாலிஹ் (அலை)**

ஸமூது சமுதாயத்திடம் அவர்களின் சகோதரர் ஸாலிஹை அனுப்பி வைத்தோம். "என் சமுதாயமே! அல்லாஹ்வை வணங்குங்கள்! உங்களுக்கு அவனன்றி வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. உங்களுக்கு உங்கள் இறைவனிடமிருந்து சான்று வந்துள்ளது. அது உங்களுக்குச் சான்றாக உள்ள அல்லாஹ்வின் ஒட்டகம். அல்லாஹ்வின் பூமியில் அதை மேய விட்டு விடுங்கள்! அதற்குத் தீங்கு இழைக்காதீர்கள். (அவ்வாறு செய்தால்) உங்களுக்குத் துன்புறுத்தும் வேதனை ஏற்படும்" என்று அவர் கூறினார். அல்குர்ஆன் (7 : 73).

**ஷுஐப் (அலை)**

மத்யன் நகருக்கு அவர்களின் சகோதரர் ஷுஐபை அனுப்பினோம். "என் சமுதாயமே! அல்லாஹ்வை வணங்குங்கள்! உங்களுக்கு அவனன்றி வணக்கத்திற்குரியவன் வேறு யாரு மில்லை. உங்கள் இறைவனிடமிருந்து உங்களிடம் சான்று வந்துள்ளது. எனவே அளவையும், நிறுவையையும் நிறைவாக்

குங்கள்! மக்களுக்கு அவர்களின் பொருட்களைக் குறைத்து விடாதீர் கள்! பூமியில் சீர்திருத்தம் செய்யப்பட்ட பின் அதில் குழப்பம் விளைவிக்காதீர்கள்! நீங்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் இதுவே உங்களுக்குச் சிறந்தது" என்று அவர் கூறினார். அல்குர்ஆன் (7 : 85).

**முஹம்மத் (ஸல்)**

"வேதமுடையோரே! நாம் அல்லாஹ்வைத் தவிர (யாரையும்) வணங்கக் கூடாது; அவனுக்கு இணையாக எதையும் கருதக் கூடாது; அல்லாஹ்வையன்றி நம்மில் ஒருவர் மற்றவரைக் கடவுள்களாக ஆக்கக் கூடாது என்ற எங்களுக்கும், உங்களுக்கும் பொதுவான கொள்கைக்கு வாருங்கள்!" என்று கூறுவீராக! அவர்கள் புறக்கணித்தால் "நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்களே சாட்சிகளாக இருங்கள்!" எனக் கூறி விடுங்கள்! அல்குர்ஆன் (3 : 64).

நான் நபி (ஸல்) அவர்களிடம் "நீங்கள் யார்?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் "நான் ஒரு நபி" என்றார்கள். நான் "நபி என்றால் என்ன?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் "அல்லாஹ் என்னை (தனது செய்தியுடன்) அனுப்பி உள்ளான்" என்று கூறினார் கள். நான் "என்னென்ன செய்திகளுடன் அனுப்பியுள்ளான்?" என்று கேட்டேன். அதற்கு "இரத்த உறவுகளைப் பேணி வாழ வேண்டும்; சிலை (வழிபாடு)களை ஒழிக்க வேண்டும்; இறைவன் ஒருவனே; அவனுக்கு இணையாக எதுவுமில்லை எனும் செய்திகளுடன் என்னை அனுப்பினான்" என்று பதிலளித்தார்கள். அறிவிப்பவர் : அம்ர் பின் அபசா (ரலி). நூல் : முஸ்லிம் (1512).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன். அல்லாஹ்விற்கு எந்த இணையும் கற்பிக்காமல் அவனை மட்டும் வணங்குவதற்கு மக்களை அழைப்பதற்காக

அடியார்களிடத்தில் அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான். அறிவிப்பவர் : மஹ்மூத் பின் லபீத் (ரலி). நூல் : அஹ்மத் (22513).

**நபிமார்கள் பிள்ளைகளுக்குச் செய்த உபதேசம்**

இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றக்கூடிய கொடிய பாவமாக இணைவைப்பு இருப்பதால் நபிமார்கள் இணை வைப்பு குறித்து தங்கள் பிள்ளைகளுக்கு எச்சரிக்கை செய்தார்கள்.

யஃகூபுக்கு மரணம் நெருங்கிய போது, நீங்கள் சாட்சிகளாக இருந்தீர்களா? "எனக்குப் பின் எதை வணங்குவீர்கள்?" என்று தமது பிள்ளைகளிடம் கேட்ட போது "உங்கள் இறைவனும், உங்கள் தந்தையரான இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோரின் இறைவனுமாகிய ஒரே இறைவனையே வணங்குவோம். நாங்கள் அவனுக்கே கட்டுப்பட்டவர்கள்" என்றே (பிள்ளைகள்) கூறினர். அல்குர்ஆன் (2 : 133).

லுக்மான் தமது மகனுக்கு அறிவுரை கூறும் போது "என் அருமை மகனே! அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்காதே! இணை கற்பித்தல் மகத்தான அநீதியாகும்" என்று குறிப்பிட்டதை நினைவூட்டுவீராக! அல்குர்ஆன் (31 : 13).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நூஹ் (அலை) அவர்களுக்கு மரணம் நெருங்கிய போது தனது மகனிடத்தில் இணைவைப்பதை விட்டும் உன்னை நான் தடுக்கிறேன் என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி). நூல் : அஹ்மத் (6295).

## இணைவைப்பவர்கள் இழக்கும் பாக்கியங்கள்

**அல்லாஹ்வைக் காணும் பாக்கியத்தை இழப்பார்கள்**

அல்லாஹ்வைக் காண்பது சொர்க்கவாசிகளுக்குக் கிடைக்கும் இன்பங்களில் மிகப் பெரியதாகும். இந்த பாக்கியத்தை அல்லாஹ் விற்கு இணைவைத்தவர்கள் இழந்து விடுவார்கள்.

அவ்வாறில்லை! அந்நாளில் அவர்கள் தமது இறைவனை விட்டும் தடுக்கப்படுவார்கள். அல்குர்ஆன் (83 : 15).

நபி (ஸல்) அவர்களது காலத்தில் மக்கள் சிலர், "அல்லாஹ்வின் தூதரே! மறுமை நாளில் நாங்கள் எங்கள் இறைவனைக் காண்போமா?" என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், "ஆம்! (காண்பீர்கள்.) மேகமே இல்லாத நண்பகல் வெளிச்சத்தில் சூரியனைப் பார்க்க ஒருவரை ஒருவர் முண்டியடிப்பீர்களா?" என்று கேட்டார்கள். மக்கள், "இல்லை" என்று கூறினர். நபி (ஸல்) அவர்கள், "மேகமே இல்லாத பௌர்ணமி இரவின் வெளிச்சத்தில் நிலவைக் காண்பதற்காக நீங்கள் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொள்வீர்களா?" என்று கேட்டார்கள். மக்கள் (அப்போதும்) "இல்லை" என்று பதிலளித்தார்கள். நபி (ஸல்) அவர்கள், "இவ்விரண்டில் ஒன்றைப் பார்க்க நீங்கள் ஒருவரையொருவர் முண்டியடித்துக் கொள்ளாதது போலவே மறுமை நாளில் கண்ணியமும், மகத்துவமுமிக்க அல்லாஹ்வைக் காணவும் நீங்கள் முண்டியடித்துக் கொள்ள மாட்டீர்கள்" என்று கூறிவிட்டுப் பின்வருமாறு விளக்கினார்கள்:

மறுமை நாள் ஏற்படும் போது அழைப்பாளர் ஒருவர் "ஒவ்வொரு சமுதாயமும் (உலக வாழ்வில்) தாம் வணங்கிக் கொண்டிருந்தவர்களைப் பின்தொடர்ந்து செல்லட்டும்" என்றழைப்பார். அப்போது அல்லாஹ்வை விடுத்துக் கற்பனைக் கடவுள்களையும், கற்சிலைகளையும் வணங்கிக் கொண்டிருந்தவர்கள் ஒருவர் (கூட) எஞ்சாமல் (அனைவரும்) நரக நெருப்பில் விழுவர். முடிவில் அல்லாஹ்வை வணங்கிக் கொண்டு நன்மைகளும் புரிந்து கொண்டிருந்தவர்கள், அல்லது (அல்லாஹ் வையும் வணங்கிக் கொண்டு பாவங்களும் புரிந்து வந்த) பாவிகள், மேலும் வேதக்காரர்களில் மிஞ்சியவர்கள் ஆகியோர் தவிர வேறெவரும் மீதியில்லாத நிலையில்

(வேதக்காரர்களான) யூதர்கள் அழைக்கப்படுவர். அவர்களிடம் "யாரை நீங்கள் வணங்கிக் கொண்டிருந்தீர்கள்?" என்று கேட்கப்படும். அவர்கள், "அல்லாஹ்வின் மைந்தர் உஸைர் அவர்களை நாங்கள் வணங்கிக் கொண்டிருந்தோம்" என்று பதிலளிப்பார்கள். அப்போது அவர்களிடம், "நீங்கள் பொய்யுரைக்கிறீர்கள். அல்லாஹ் தனக்கு எந்தத் துணைவியையும், குழந்தையையும் ஆக்கிக் கொள்ளவில்லை" என்று கூறப்படும். மேலும், "இப்போது உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்கப்படும். அதற்கவர்கள் "எங்கள் இறைவா! எங்களுக்குத் தாகமாக உள்ளது. எங்களுக்கு (நீர்) புகட்டுவாயாக!" என்பார்கள். உடனே நீங்கள் தண்ணீர் உள்ள (அந்த) இடத்திற்குச் செல்லக்கூடாதா என (ஒரு திசையைச்) சுட்டிக் காட்டப் படும். பிறகு (அத்திசையிலுள்ள) நரகத்தின் பக்கம் அவர்கள் கொண்டு செல்லப் படுவார்கள். அது கானலைப் போலக் காணப்படும். அதன் ஒரு பகுதி மற்றொரு பகுதியைச் சிதைத்துக் கொண்டிருக்கும். அப்போது அவர்கள் அந்த நரக நெருப்பில் விழுவார்கள்.

பிறகு கிறித்தவர்கள் அழைக்கப்பட்டு, "நீங்கள் எதை வணங்கிக் கொண்டிருந்தீர்கள்?" என்று அவர்களிடம் கேட்கப் படும். அவர்கள் "நாங்கள் அல்லாஹ்வின் மைந்தர் மஸீஹை (ஈசாவை) வணங்கிக் கொண்டிருந்தோம்" என்று கூறுவர். அப்போது அவர்களிடம், "நீங்கள் பொய்யுரைக்கிறீர்கள். அல்லாஹ் (தனக்கு) எந்தத் துணைவியையும் குழந்தையையும் ஆக்கிக் கொள்ள வில்லை" என்று கூறப்பட்ட பின் அவர்களைப் பார்த்து, "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்கப்படும். முன்பு (யூதர்கள்) கூறியது போன்று இவர்களும் கூறுவர். இறுதியில் அல்லாஹ்வை வணங்கிக் (கொண்டு நன்மைகளும் புரிந்து) கொண்டிருந்த நல்லோர், அல்லது (அல்லாஹ்வையும் வணங்கிக் கொண்டு பாவங்களும் புரிந்து வந்த) தீயோர் தவிர வேறெவரும்

மீதியில்லாத நிலையில் அவர்களிடம் அகிலத்தாரின் இரட்சகன் வருவான். (அவனின் தன்மைகளை முன்பே அறிந்திருந்ததன் மூலம் தம் உள்ளத்தில்) அவனைப் பற்றி அவர்கள் எண்ணி வைத்திருந்த தோற்றங்களில் (அடையாளம் கண்டு கொள்வதற்கு) மிக நெருக்கமானதொரு தோற்றத்தில் (அவன் வருவான்). அப்போது "எதை நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? ஒவ்வாரு சமுதாயமும் (உலகில்) தாம் வணங்கிக் கொண்டிருந்தவைகளைப் பின் தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றனரே!" என்று கேட்கப் படும். அவர்கள், "உலகத்தில் நாங்கள் (வாழ்க்கையின் தேவை களைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக) இந்த மக்களிடம் அதிக அளவில் தேவையுள்ளவர்களாக இருந்தும், அவர்களுடன் ஒட்டி உறவாடிக்கொண்டிராமல் அவர்களைப் பிரிந்திருந்தோம். (அப்படியிருக்க, இப்போதா அவர்களைப் பின்தொடர்வோம்?) நாங்கள் வணங்கிக் கொண்டிருந்த எங்கள் இறைவனையே நாங்கள் (இத்தருணத்தில்) எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக் கிறோம்" என்று பதிலளிப்பர். அதற்கு அல்லாஹ், "நானே உங்கள் இறைவன்" என்பான். அதற்கு அவர்கள் "நாங்கள் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்க மாட்டோம்" என்று இரண்டு தடவையோ அல்லது மூன்று தடவையோ கூறுவர். அறிவிப்பவர் : அபூ சயீத் அல்குத்ரீ (ரலி). நூல் : புகாரி (4581).

**இணைவைத்தவர்களுக்கு சொர்க்கம் கிடைக்காது**

அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கி விட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை. அல்குர்ஆன் (5 : 72).

"எனது இரட்சகனிடமிருந்து ஒரு(வான)வர் என்னிடம் வந்து ஒரு சுபச் செய்தியை அறிவித்தார். அதாவது 'எனது சமுதாயத்தில் யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக் காமல் இறக்கின்றாரோ அவர் சொர்க்கத்தில் நுழைவார்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உடனே நான், "அவர் விபசாரத்திலோ, திருட்டிலோ ஈடுபட்டிருந் தாலுமா?" எனக் கேட்டேன். அவர் விபசாரத்திலோ, திருட் டிலோ ஈடுபட்டிருந்தாலும் தான்" என்று பதிலளித்தார்கள். அறிவிப்பவர் : அபூதர் (ரலி) நூல் : புகாரி (1237).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்விற்கு எதனையும் இணையாக்காமல் யார் அவனைச் சந்திக்கிறாரோ அவர் சொர்க்கத்தில் நுழைந்து விட்டார். அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி). நூல் : அஹ்மத் (13071).

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து கட்டாயமாக்கக் கூடிய இரண்டு விஷயங்களை எவை என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விற்கு எதனையும் இணையாகக் கருதாமல் மரணித்தவர் சொர்க்கம் புகுவார். அல்லாஹ்விற்கு இணை கற்பித்தவராக மரணிப்பவர் நரகம் புகுவார் என்று கூறினார்கள். அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி). நூல் : அஹ்மத் (14667).

**இணைவைப்பவர்களை அல்லாஹ் மன்னிக்க மாட்டான்**

இணைவைப்பைத் தவிர்த்து மற்ற எந்தப் பாவங்களை ஒருவன் செய்திருந்தாலும் மறுமையில் அல்லாஹ் நாடினால் அவனை மன்னிக்க வாய்ப்புண்டு. ஆனால் இணைவைத்து விட்டு திருந்தாமல் இணைவைத்தவனாகவே மரணித்தால் அந்தப் பாவத்தை அல்லாஹ் ஒரு போதும் மன்னிக்க மாட்டான்.

தனக்கு இணை கற்பிக்கப்படுவதை அல்லாஹ் மன்னிக்க மாட்டான். அதற்குக் கீழ் நிலையில் உள்ள (பாவத்)தை, தான்

நாடியோருக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பவர் மிகப் பெரிய பாவத்தையே கற்பனை செய்தார். அல்குர்ஆன் (4 : 48).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எவர் தொழுகையை நிலைநாட்டி சகாத்தையும் கொடுத்து அல்லாஹ்விற்கு எதனையும் இணையாக்காமல் மரணிக்கி றாரோ அவரை மன்னிப்பது அல்லாஹ்வின் மீது கடமையாகி விடுகிறது. அவர் ஹிஜ்ரத் செய்திருந்தாலும் அல்லது பிறந்த ஊரிலே மரணித்திருந்தாலும் சரியே. அறிவிப்பவர் : அபுத்தர்தா ஃ (ரலி). நூல் : நஸயீ (3081)

**இணைவைப்பவர்களின் மற்ற பாவங்களும் மன்னிக்கப் படாது.**

பொய், அவதூறு கூறுதல், விபச்சாரம் புரிதல், திருடுதல், மது அருந்துதல் போன்ற பாவங்களை இறை நம்பிக்கை யாளர்கள் செய்யும் போது அவற்றை அல்லாஹ் தம் கருணையால் மன்னிப்பதற்குத் தயாராக இருக்கிறான்.

ஆனால் இணைவைத்தவன் இது போன்ற பாவங்களைச் செய்தால் அவன் இணைவைத்த ஒரே காரணத்திற்காக அல்லாஹ் அவனுடைய எந்தப் பாவத்தையும் மன்னிக்க மாட்டான்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் கூறுகின்றான் : ஒருவர் எதையும் எனக்கு இணைவைக்காமல் பூமி நிறைய (சிறு) பாவங்களுடன் என்னிடம் வந்தாலும் அதைப் போன்று (பூமி நிறைய) மன்னிப்புடன் நான் அவரை எதிர் கொள்கிறேன். அறிவிப்பவர் : அபூதர் (ரலி). நூல் : முஸ்லிம் (5215).

நபி (ஸல்) அவர்களுக்கு முன்பு எந்த ஒரு நபிக்கும் வழங்காத மூன்று விஷயங்களை நபி (ஸல்) அவர்கள் சித்ரதுல் முன்தஹா என்ற இடத்தில் இருந்த போது அல்லாஹ் அவர்களுக்கு வழங்கினான். அவர்களுக்கு ஐந்து நேரத் தொழுகை

கடமையாக்கப்பட்டுள்ளது. அல்பகரா அத்தியா யத்தின் இறுதி வசனங்கள் அவர்களுக்கு அருளப்பட்டுள்ளது. அவர்களுடைய சமூகத்தாரில் அல்லாஹ்விற்கு எதனையும் இணையாக்காமல் இருந்தவர்களுக்கு நரகத்தில் தள்ளும் பெரும் பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி). நூல் : திர்மிதி (3198).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : சொர்க்கத்தின் கதவுகள் திங்கட்கிழமையும் வியாழக் கிழமையும் திறக்கப்படுகின்றன. அப்போது அல்லாஹ்வுக்கு எதையும் இணை கற்பிக்காத ஒவ்வோர் அடியாருக்கும் மன்னிப்பு வழங்கப்படுகிறது. அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : முஸ்லிம் (5013).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : இணைவைத்தவனாக மரணித்தவன், ஒரு இறை நம்பிக்கை யாளனை வேண்டுமென்றே கொலை செய்தவன் இவர்களைத் தவிர (மற்றவர்களுக்கு) அனைத்து பாவங்களையும் அல்லாஹ் (நினைத்தால்) மன்னித்து விடலாம். அறிவிப்பவர் : அபுத்தர்தா ஃ (ரலி). நூல் : அபூதாவுத் (3724).

**பாவங்களுக்கான பரிகாரம் கிடைக்காது**

ஓர் இறைநம்பிக்கையாளன் செய்கின்ற நற்காரியங்களை அவன் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக அல்லாஹ் ஆக்கி விடுகிறான். ஆனால் இந்தப் பாக்கியம் இணைவைத்தவர்களுக்குக் கிடைக்காது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஐவேளைத் தொழுகைகள், ஒரு ஜுமுஆவிரிலிருந்து மறு ஜுமுஆ, ஒரு (ரமளான்) மாதத்திலிருந்து மறு (ரமாளான்) மாதம் ஆகியன அவற்றுக்கிடையே ஏற்படும் பாவங்களுக்குப் பரிகாரங் களாகும். ஆனால் மூன்று (பாவங்களைத்) தவிர. அவை அல்லாஹ்விற்கு இணை கற்பிப்பதும், உடன்படிக்கையை முறிப்பதும், இஸ்லாமிய

ஆட்சிக்கெதிராகக் கிளம்புவதுமாகும். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : அஹ்மத் (10171).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஐவேளைத் தொழுகைகள், ஒரு ஜுமுஆவிலிருந்து மறு ஜுமுஆ, ஒரு ரமளானிலிருந்து மறு ரமாளான் ஆகியன அவற்றுக்கிடையே ஏற்படும் பாவங்களுக்குப் பரிகாரங்களாகும் ; பெரும் பாவங்களில் ஈடுபடாமல் இருந்தால். அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி). நூல் : முஸ்லிம் (396).

**மறுமையில் நபியவர்களின் பரிந்துரை கிடைக்காது**

மறுமை நாளில் தன் சமூகத்தினர் அனைவருக்கும் நபி (ஸல்) அவர்கள் பரிந்துரை செய்வார்கள். இதன் மூலம் நல்லவர்களும், பாவிகளும் நன்மையை அடைவார்கள். ஆனால் இணைவைத்தவர்களுக்கு நபியவர்கள் பரிந்துரை செய்ய மாட்டார்கள். நபியவர்களின் பிரார்த்தனையின் பலனை இவர்களால் அடைய முடியாது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒவ்வொரு நபிக்கும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு பிரார்த்தனை உண்டு. எனது சமூகத்தாருக்கு (மறுமையில்) பரிந்துரை செய்வதற்காக எனது (விஷேஷ) பிரார்த்தனையை விட்டு வைத்துள்ளேன். அல்லாஹ் நாடினால் என் சமூகத்தாரில் அல்லாஹ்விற்கு எதனையும் இணையாக்காமல் மரணித்த வருக்கு அது கிடைக்கும். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : திர்மிதி (3526).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எனது இரட்சகனிடமிருந்து ஒரு(வான)வர் என்னிடம் வந்தார். எனது சமூகத்தாரில் பாதிப்பேரை சொர்க்கத்தில் நுழையச் செய்வது அல்லது பரிந்துரை செய்வது (இவற்றில் ஒன்றை) தேர்வு செய்வதற்கு எனக்கு வாய்ப்பளித்தார். நான் பரிந்துரை

செய்வதையே தேர்வு செய்து கொண்டேன். அல்லாஹ்விற்கு நிகராக யாரையும் ஆக்காமல் மரணித்தவர்களுக்கு அது உண்டு. அறிவிப்பவர் : அவ்ஃப் பின் மாலிக் (ரலி). நூல் : திர்மிதி (2365).

மறுமை நாளில் முஹம்மத் (ஸல்) அவர்கள் செய்யும் பரிந்துரையைப் பற்றி மக்களில் நான் மிக அறிந்தவன் என்று அபூஹுரைரா கூறினார். மக்கள் அவரிடத்தில் போட்டி போட்டுக் கொண்டு அல்லாஹ் உங்களுக்கு அருள் புரியட்டும். (அதைப் பற்றி சொல்லுங்கள்) என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் (மறுமை நாளில்) இறைவா உனக்கு இணையாக யாரையும் ஆக்காமல் என்னை நம்பிக்கை கொண்டு உன்னைச் சந்திக்கின்ற முஸ்லிமான ஒவ்வொரு அடியானையும் நீ மன்னித்து விடு என்று கூறுவார்கள் என அபூஹுரைரா கூறினார். அறிவிப்பவர் : இப்னு தார்ரா (ரஹ்). நூல் : அஹ்மத் (9475).

**இணைவைப்பவர்களின் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படாது**

இணைவைப்பவர்களின் வேண்டுதல்களை அல்லாஹ் பொருட்படுத்த மாட்டான். அவர்கள் செய்யும் பிரார்த்தனை வீணாகவே முடியும்.

ஒரு முஸ்லிம் இறந்தவுடன் அல்லாஹ்விற்கு எதையும் இணைவைக்காத நாற்பது பேர் அவருக்காக (இறுதித் தொழுகை) தொழுதால் அவர்களின் பரிந்துரையை அல்லாஹ் ஏற்காமல் இருப்பதில்லை' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றுள்ளேன். அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி). நூல் : முஸ்லிம் (1730).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இஸ்லாத்தை ஏற்ற பிறகு அல்லாஹ்விற்கு இணைவைக்கும் அடியானின் பாவமன்னிப்பை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான். அறிவிப்பவர் : முஆவியா (ரலி). நூல் : அஹ்மத் (19198).

**இணைவைப்பதால் நற்காரியங்கள் அழிந்து விடுகிறது**

இணைவைப்பவர்கள் எவ்வளவு தான் தொழுதாலும் நோன்பு நோற்றாலும் தான தர்மங்களைப் புரிந்தாலும் ஹஜ் என்ற வணக்கத்தை நிறைவேற்றினாலும் அல்லாஹ்விற்கு இணைவைத்த ஒரே காரணத்திற்காக இவையெல்லாம் அழிக்கப்பட்டு விடுகின்றது.

இணைவைத்துக் கொண்டு எந்த நன்மையையும் சேமிக்க முடியாது. நன்மைகளைச் சேகரிக்க வேண்டும் என்றால் முதலில் இணைவைப்பதை விட்டு விட வேண்டும்.

"நீர் இணை கற்பித்தால் உமது நல்லறம் அழிந்து விடும்; நீர் நஷ்டமடைந்தவராவீர் மாறாக, அல்லாஹ்வையே வணங்கு வீராக! நன்றி செலுத்துவோரில் ஆவீராக!" என்று ((முஹம்மதே!) உமக்கும், உமக்கு முன் சென்றோருக்கும் தூதுச் செய்தி அறிவிக்கப்பட்டது. அல்குர்ஆன் (39 : 65).

அவர்கள் இணை கற்பித்திருந்தால் அவர்கள் செய்த (நல்ல)வை அவர்களை விட்டும் அழிந்திருக்கும். அல்குர்ஆன் 6 : 88.

இணை கற்பிப்போர் தமது (இறை) மறுப்புக்கு, தாமே சாட்சி கூறிக் கொண்டிருக்கும் நிலையில் அல்லாஹ்வின் பள்ளிவாசல்களை நிர்வகிப்பது தகாது. அவர்கள் செய்தவை அழிந்து விட்டன. அவர்கள் நரகில் நிரந்தரமாக இருப்பார்கள். அல்குர்ஆன் (9 : 17).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : வளமும், உயர்வும் மிக்க அல்லாஹ் கூறினான்: நான் இணை யாளர்களை விட்டும் இணை கற்பித்தலை விட்டும் அறவே தேவையற்றவன். யாரேனும் என்னுடன் பிறரையும் இணை யாக்கி (எனக்காகவும் பிறருக்காகவும்) நற்செயல் புரிந்தால், அவனையும் அவனது இணைவைப்பையும் (தனியே) விட்டு

விடுவேன். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) . நூல் : முஸ்லிம் (5708).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : இஸ்லாத்தை ஏற்ற பிறகு இணைவைக்கும் இணைவைப் பாளனிடமிருந்து எந்த நற்காரியத்தையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான். அறிவிப்பவர் : முஆவியா பின் ஹைதா (ரலி). நூல் : இப்னு மாஜா (2527).

**மறுமையில் எப்பலனும் கிடைக்காது**

இணை கற்பித்தவர்களின் வணக்கங்கள் அழிக்கப்பட்டு விடுவதால் மறுமையில் அவர்களுக்கு எந்தப் பலனும் கிடைக் காது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ் எந்த இறை நம்பிக்கையாளருக்கும் (அவர் செய்த நற்செயலுக்கான) நன்மையில் அநீதி இழைப்பதில்லை. அதற்குரிய நன்மை இம்மையிலும் அவருக்கு வழங்கப்படும். அதற்குரிய நன்மை மறுமையிலும் அவருக்கு வழங்கப்படும். (ஏக) இறைமறுப்பாளர் இறைவனுக்காகச் செய்த நற்செயல் களின் பலனால் இம்மையில் (மட்டும்) அவருக்கு உணவளிக்கப் படும். அவர் மறுமையை அடையும் போது, அவருக்கு வழங்கப் படுவதற்கு நன்மையேதும் இராது. அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி) . நூல் : முஸ்லிம் (5408).

நான், "அல்லாஹ்வின் தூதரே! இப்னு ஜுத்ஆன் அறியாமைக் காலத்தில் உறவுகளைப் பேணி நடப்பவராகவும், ஏழைகளுக்கு உணவளிப்பவராகவும் இருந்தாரே! இவை அவருக்கு (மறுமை நாளில்) பயனளிக்குமா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "அவருக்குப் பயனளிக்காது; அவர் ஒரு நாள் கூட 'இறைவா! விசாரணை நாளில் என் பாவத்தை மன்னித்

தருள்வாயாக!' என்று கேட்டதேயில்லை" என்று பதிலளித் தார்கள். அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி). நூல் : முஸ்லிம் (365).

**உறவினராக இருந்தாலும் பாவமன்னிப்புத் தேடக் கூடாது**

இணைவைத்தவர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்குரிய வர்கள். அவர்களை இறைவன் மன்னிக்கவே மாட்டான் என்ப தால் இணைவைத்தவர்களுக்கு பாவமன்னிப்புத் தேடுவதை அல்லாஹ் ஹராமாக்கி விட்டான்.

இணை கற்பிப்போர் நரகவாசிகள் என்பது தெரிந்த பின்னர், அவர்கள் நெருங்கிய உறவினரேயானாலும் அவர் களுக்காக பாவமன்னிப்புத் தேடுவது நம்பிக்கை கொண் டோருக்கும், இந்த நபிக்கும் (முஹம்மதுக்கும்) தகாது. அல்குர்ஆன் (9 : 113).

இப்ராஹீம் தம் தந்தைக்காக பாவமன்னிப்புத் தேடியது, தந்தைக்கு அவர் அளித்த வாக்குறுதியின் காரணமாகவே. அவர் அல்லாஹ்வின் எதிரி என்பது அவருக்குத் தெரிந்த பின் அதிலிருந்து விலகிக் கொண்டார். இப்ராஹீம் பணிவுள்ளவர்; சகிப்புத் தன்மை உள்ளவர். அல்குர்ஆன் (9 : 114).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நான் என் இறைவனிடம் என் தாயாருக்காகப் பாவமன்னிப்புக் கோர அனுமதி கேட்டேன். அவன் அனுமதி வழங்கவில்லை. அவரது அடக்கத் தலத்தைச் சந்திக்க அனுமதி கேட்டேன். எனக்கு அனுமதி வழங்கினான். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : முஸ்லிம் (1776).

அபூதாலிப் அவர்களுக்கு மரண வேளை வந்து விட்ட போது நபி (ஸல்) அவர்கள் அவரிடம் சென்றார்கள். அப்போது அபூ ஜஹ்ல் அவரருகே இருந்தான். நபி (ஸல்) அவர்கள், "என் பெரிய தந்தையே! 'லா இலாஹ இல்லல்லாஹ்' (வணக்கத்திற் குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவருமில்லை) என்று சொல்லுங்கள். இந்தச் சொல்லை (நீங்கள் சொல்லி விட்டால் அதை) வைத்து

(மறுமையில் நரகத்திலிருந்து விடுதலை கேட்டு) உங்களுக்காக அல்லாஹ்விடம் நான் வாதாடுவேன்" என்று சொன்னார்கள். அப்போது அபூஜஹ்லும், அப்துல்லாஹ் பின் அபீ உமய்யாவும், "அபூதாலிபே! (பெரியவர், உங்கள் தந்தை) அப்துல் முத்தலிபின் மார்க்கத்தையா புறக்கணிக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டனர். அவ்விருவரும் இவ்வாறே தொடர்ந்து அவரிடம் பேச இறுதியில் அவர், " (என் இறப்பு என் தந்தை) அப்துல் முத்தலிபின் மார்க்கத்தில் தான் (நிகழும்)" என்று அவர்களிடம் சொன்னார். எனவே, நபி (ஸல்) அவர்கள், "நான் உங்களுக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரு வேன்; (அவ்விதம் பாவ மன்னிப்புக் கோரக் கூடாது என்று) எனக்குத் தடை விதிக்கப்படும் வரை" என்று சொன்னார்கள். அப்போது தான், "இணைவைப்பவர்கள் நரகவாசிகள் தாம் என்பது தெளிவாகி விட்ட பின்பும் அவர்களுக்காகப் பாவ மன்னிப்புக் கோருவதற்கு, அவர்கள் உறவினர்களாயிருந் தாலும் கூட இறைத்தூதருக்கும், இறை நம்பிக்கையாளர் களுக்கும் உரிமையில்லை" என்னும் (9:113) திருக்குர்ஆன் வசனமும், "(நபியே!) நீங்கள் விரும்பியவரை உங்களால் நேர்வழியில் செலுத்தி விட முடியாது" என்னும் (28:56) திருக்குர்ஆன் வசனமும் அருளப்பட்டன. அறிவிப்பவர் : முஸய்யப் பின் ஹஸ்ன் (ரலி). நூல் : புகாரி (3884).

**இணைவைப்பவர்களுக்கு ஜனாஸா தொழக் கூடாது**

இறந்து போனவர்கள் இணைவைத்தவர்களாக இருந்தால் அவர்களுக்கு ஜனாஸா தொழுவது கூடாது. இறந்தவருக்குப் பிரார்த்தனை செய்வதற்காகத்தான் ஜனாஸா தொழுகை நடத்தப்படுகிறது. இணைவைப்பாளர்களுக்காக பிரார்த்தனை செய்வதை அல்லாஹ் தடை செய்துள்ளான்.

அவர்களில் இறந்து விட்ட எவருக்காகவும் நீர் தொழுகை நடத்தாதீர்! எவரது சமாதியிலும் நிற்காதீர்! அவர்கள்

அல்லாஹ்வையும், அவனது தூதரையும் ஏற்க மறுத்தனர். குற்றம் புரிவோராகவே மரணித்தனர். அல்குர்ஆன் (9 : 84).

(நயவஞ்சகர்களின் தலைவன்) அப்துல்லாஹ் பின் உபை இறந்து விட்டான். அப்போது அவனது ((முஸ்லிமான) மகன், நபி (ஸல்) அவர்களிடம் வந்து "'அல்லாஹ்வின் தூதரே! உங்கள் சட்டையைத் தாருங்கள்; அவரை அதில் பிரேத உடை (கஃபன்) அணிவிக்க வேண்டும்; மேலும் நீங்கள் அவருக்கு ஜனாஸாத் தொழுது, அவருக்காகப் பாவமன்னிப்பும் கேட்க வேண்டும் என்று கூறினார். உடனே நபி (ஸல்) அவர்கள் தமது சட்டையை அவருக்குக் கொடுத்துவிட்டு, "(ஆயத்தமானதும்) எனக்குத் தெரிவியுங்கள்; நான் ஜனாஸாத் தொழுவிப்பேன்" என்றார்கள். பிறகு அறிவிக்கப்பட்டதும் நபி (ஸல்) அவர்கள் அவனுக்கு ஜனாஸாத் தொழ நாடிய போது, உமர் (ரலி), நபி (ஸல்) அவர்களை இழுத்து, நயவஞ்சகர்களுக்கு ஜனாஸாத் தொழக் கூடாது என அல்லாஹ் உங்களைத் தடுக்கவில்லையா?" எனக் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "(ஜனாஸாத் தொழுவது, தொழாம லிருப்பது என) இரண்டில் எதையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை எனக்கு உள்ளது" எனக் கூறிவிட்டு, "நீர் நயவஞ்சகர் களுக்குப் பாவமன்னிப்புத் தேடினாலும் அல்லது தேடாமலிருந் தாலும் சமமே! நீர் அவர்களுக்காக எழுபது முறை பாவமன்னிப்புத் தேடினாலும் அல்லாஹ் அவர்களை மன்னிக்கப் போவதே இல்லை" என்ற (9:80ஆவது) இறைவசனத்தை ஓதிக் காட்டி விட்டு ஜனாஸாத் தொழுதார்கள். உடனே "'அ(ந்நய)வ(ஞ்சக)ர்களில் யாரேனும் இறந்தால் அவர்களுக்காக ஒரு போதும் (ஜனாஸாத்) தொழ வேண்டாம்" எனும் (9:84ஆவது) இறைவசனம் அருளப்பெற்றது. அறிவிப்பவர் : இப்னு உமர்(ரலி). நூல் : புகாரி (1269).

**இணைவைப்பவர்களைத் திருமணம் செய்யக் கூடாது**

இறை நம்பிக்கையாளர்களை மணமுடிப்பதற்கு இணை வைப்பாளர்கள் தகுதியற்றவர்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.

இணை கற்பிக்கும் பெண்கள் நம்பிக்கை கொள்ளும் வரை அவர்களைத் திருமணம் செய்யாதீர்கள்! இணை கற்பிப்பவள் எவ்வளவு தான் உங்களைக் கவர்ந்தாலும் அவளை விட நம்பிக்கை கொண்ட அடிமைப் பெண் சிறந்தவள். இணை கற்பிக்கும் ஆண்கள் நம்பிக்கை கொள்ளும் வரை அவர்களுக்கு (உங்கள் பெண்களை) மண முடித்துக் கொடுக்காதீர்கள்! இணை கற்பிப்பவன் உங்களை எவ்வளவு தான் கவர்ந்தாலும் அவனை விட நம்பிக்கை கொண்ட அடிமை சிறந்தவன். அவர்கள் நரகத்திற்கு அழைக்கின்றனர். அல்லாஹ் தனது விருப்பப்படி சொர்க்கம் மற்றும் மன்னிப்பிற்கு அழைக்கிறான். படிப்பினை பெறுவதற்காக (இறைவன் தனது வசனங்களை மனிதர்களுக்குத் தெளிவுபடுத்துகிறான். அல்குர்ஆன் (2 : 221).

விபச்சாரம் செய்தவன், விபச்சாரம் செய்தவளையோ இணை கற்பிப்பவளையோ தவிர மற்றவர்களை மணந்து கொள்ள மாட்டான். விபச்சாரம் செய்தவளை, விபச்சாரம் செய்தவனோ இணைகற்பிப்பவனோ தவிர மற்றவர்கள் மணந்து கொள்ள மாட்டார்கள். இது நம்பிக்கை கொண்டோர் மீது தடை செய்யப் பட்டுள்ளது. அல்குர்ஆன் (24 : 3).

## இணைவைப்பின் கிளைகள்

**அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிரார்த்திப்பது இணை வைப்பாகும்**

மனிதர்களிடம் கேட்பதற்கும் அல்லாஹ்விடம் கேட்பதற் கும் இடையேயுள்ள வித்தியாசங்களை புத்தகத்தின் ஆரம்பத் தில் விளக்கியுள்ளோம். மனிதர்களிடம் பேசுவது போல் அல்லாஹ்விடம் நாம் பேசுவது கிடையாது.

சப்தமில்லாமல் பல இலட்சக்கணக்கான மக்கள் ஒரே நேரத்தில் வெவ்வேறு மொழியில் அல்லாஹ்விடம் மட்டுமே பிரார்த்தனை செய்ய வேண்டும். ஆனால் இந்த அடிப்படையில் கப்ரு வழிபாட்டு செய்பவர்கள் இறந்து போனவர்களிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் மட்டுமே சக்திபெற்ற விசயங்களில் இறந்தவர்களிடம் உதவி தேடுகின்றனர். எனவே இது இணைவைப்பாகும்.

உண்மையான பிரார்த்தனை அவனுக்கே உரியது. அவனன்றி இவர்கள் யாரைப் பிரார்த்திக்கிறார்களோ அவர்கள் சிறிதளவும் இவர்களுக்குப் பதிலளிக்க மாட்டார்கள். தண்ணீர் (தானாக) வாய்க்குள் செல்ல வேண்டும் என்பதற்காக இரு கை களையும் அதை நோக்கி விரித்து வைத்துக் கொள்பவனைப் போலவே அவர்கள் உள்ளனர். அது (தானாக) அவனது வாய்க் குள் செல்லாது. (ஏக இறைவனை) மறுப்போரின் பிரார்த்தனை வீணாகவே இருக்கும். அல்குர்ஆன் (13 : 14).

அல்லாஹ்வே உண்மையானவன். அவனன்றி அவர்கள் பிரார்த்திப்பவை பொய்யானவை. அல்லாஹ் உயர்ந்தவன்; பெரியவன் என்பதும் இதற்குக் காரணம். அல்குர்ஆன் (22 : 62).

நாங்கள் அவ்லியாக்களிடம் அதைக் கொடுங்கள். இதைக் கொடுங்கள் என்று கேட்கவில்லை. மாறாக எங்களுக்கு மறுமையில் பரிந்துரை செய்யுங்கள் என்று தான் கேட்கிறோம் என்று சிலர் கூறுகிறார்கள்.

பரிந்துரையை வேண்டினாலும் அதுவும் இணைவைப் பாகும். ஏனென்றால் பிரார்த்தனை செய்வதை வணக்கம் என்று நபியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அல்லாஹ் அல்லாதவர் களிடம் சிறியதை வினவினாலும், பெரியதை வினவினாலும் அது நிச்சயம் இணைவைப்புத்தான்.

பிரார்த்தனை தான் வணக்கம் என்று நபி (ஸல்) அவர்கள் கூறிவிட்டு "என்னை அழையுங்கள்! உங்களுக்குப் பதிலளிக் கிறேன். எனது வணக்கத்தை விட்டும் பெருமையடிப்போர் நரகத்தில் இழிந்தோராக நுழைவார்கள் (40 : 60) என்ற வசனத்தை ஓதினார்கள். அறிவிப்பவர் : நுஃமான் பின் பஷீர் (ரலி). நூல் : திர்மிதி (2895).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மறுமை நாளில் நரகத்தின் ஒரு பகுதி கிளம்பும். அதற்குப் பார்க்கும் கண்களும், கேட்கும் செவிகளும், பேசும் நாவும் இருக்கும். வரம்பு மீறி முரண்டு பிடிப்பவன் அல்லாஹ்வுடன் வேறொரு கடவுளிடம் பிரார்த்தித்தவன் உருவங்களை வரைந்தவர்கள் ஆகிய மூன்று பேரின் மீது நான் சாட்டப்பட்டுள்ளேன் என்று அந்த நரகம் கூறும். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : திர்மிதி (2497).

**அல்லாஹ் அல்லாதவர்களிடத்தில் உதவி தேடுவது இணை வைப்பாகும்**

அல்லாஹ்வின் உதவி எப்படி வருகிறது என்று நமக்குத் தெரியாது. அல்லாஹ்வை நேரில் காணமலேயே அவனிடம் உதவி கேட்கிறோம். அல்லாஹ்விடம் கேட்டால் கண்டிப்பாக கிடைக்கும் என்ற உறுதியுடன் பிரார்த்தனை செய்கிறோம்.

இது போன்று இறந்து போனவர்களும் உதவி செய்வார் கள் என்று நம்புவது இணைவைப்பாகும்.

"வானங்களையும், பூமியையும் படைத்த அல்லாஹ்வை யன்றி வேறு பொறுப்பாளனை ஏற்படுத்திக் கொள்வேனா? அவனே உணவளிக்கிறான். அவன் உணவளிக்கப்படுவதில்லை" என்று கூறுவீராக! "கட்டுப்பட்டு நடப்போரில் முதலாமவனாக இருக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளேன்" எனவும் கூறுவீராக!

இணை கற்பித்தவராக ஒரு போதும் நீர் ஆகி விடாதீர்! அல்குர்ஆன் (6 : 14).

அல்லாஹ்விடம் மட்டுமே உதவி தேட வேண்டும் என்று நபியவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

சிறுவனே உனக்கு நான் சில உபதேசங்களைக் கற்றுத் தருகிறேன். அதன் மூலம் அல்லாஹ் உனக்கு பலனைத் தருவான் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்.

நீ அல்லாஹ்வுடைய விஷயத்தில் பேணுதலாக நடந்து கொள். அல்லாஹ் உன்னைப் பாதுகாப்பான். அல்லாஹ்வுடைய விஷயத்தில் நீ பேணுதலாக நடந்து கொள். அவனை நீ உன்னுடன் காண்பாய். நீ சந்தோஷமாக இருக்கும் போது அல்லாஹ்வை நினைத்துப் பார். (உனக்கு) சிரமம் வரும் போது அல்லாஹ் உன்னை நினைப்பான். கேட்பதாக இருந்தால் அல்லாஹ்விடமே கேள். நீ உதவி தேடுவதாக இருந்தால் அல்லாஹ்விடமே உதவி தேடு.

நிச்சயமாக (இந்த) சமுதாயம் உனக்கு நன்மை செய்வதற் காக ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் உனக்கு எதை விதியாக்கி விட்டானோ அதைத் தவிர வேறெதனாலும் அவர்கள் உனக்கு நன்மை செய்துவிட முடியாது. அவர்கள் உனக்கு தீங்கு செய்வதற்காக ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் உனக்கு எந்தத் தீங்கை விதியாக்கி விட்டானோ அதைத் தவிர வேறெதனாலும் அவர்கள் உனக்கு தீங்கு செய்து விட முடியாது. எழுது கோல்கள் உயர்த்தப்பட்டு விட்டன. ஏடுகள் காய்ந்து விட்டன என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி). நூல் : திர்மிதி (2440).

**அல்லாஹ் அல்லாதோரைச் சார்ந்திருப்பது....**

எந்தத் தேவையையும் அல்லாஹ்விடம் மட்டுமே கேட்க வேண்டும். நம்முடைய அனைத்துக் காரியங்களுக்கும்

அல்லாஹ்விடம் மட்டுமே பொறுப்பு சாட்டி அவனையே சார்ந்திருக்க வேண்டும்.

நம்பிக்கை கொண்டோர் யார் எனில் அல்லாஹ்வைப் பற்றிக் கூறப்பட்டால் அவர்களின் உள்ளங்கள் நடுங்கும். அவனது வசனங்கள் அவர்களுக்குக் கூறப்பட்டால் அது அவர்களின் நம்பிக்கையை அதிகப்படுத்தும். அவர்கள் தமது இறைவனையே சார்ந்திருப்பார்கள். அல்குர்ஆன் (8 : 2).

"அல்லாஹ் எங்களுக்கு விதித்ததைத் தவிர எங்களுக்கு வேறு எதுவும் ஏற்படாது. அவன் எங்கள் அதிபதி. நம்பிக்கை கொண்டோர் அல்லாஹ்வையே சார்ந்திருக்க வேண்டும்" என்று கூறுவீராக! அல்குர்ஆன் (9 : 51).

அல்லாஹ்வையே சார்ந்திருப்பீராக! அல்லாஹ் பொறுப்பேற்கப் போதுமானவன். அல்குர்ஆன் (4 : 81).

அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைத்து அவனை மட்டுமே சார்ந்திருப்பவர்களுக்கு கேள்வி கணக்கு இல்லாமல் சொர்க்கத்திற்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தை அல்லாஹ் வழங்குகிறான்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : என் சமுதாயத்தாரில் எழுபதாயிரம் பேர் விசாரணை ஏதுமின்றி சொர்க்கம் செல்வார்கள். அவர்கள் யாரெனில், ஓதிப் பார்க்க மாட்டார்கள். பறவை சகுனம் பார்க்க மாட்டார்கள். தம் இறைவ(ன் மீது முழு நம்பிக்கை கொண்டு அவ)னையே சார்ந்திருப்பார்கள். அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி). நூல் : புகாரி (647).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நீ உன் படுக்கைக்குச் செல்லும் போது தொழுகைக்காக அங்க சுத்தி (உளூ) செய்வது போன்று அங்கசுத்தி செய்து கொள். பிறகு உன் வலப்பக்கத்தின் மீது சாய்ந்து படு. பிறகு, "அல்லா ஹும்ம அஸ்லம்த்து நஃப்ஸீ இலைக்க. வ ஃபவ்வள்த்து அம்ரீ இலைக்க.

வ அல்ஜ:ஃத்து ழஹ்ரீ இலைக்க. ர:ஃக்பத்தன் வ ரஹ்பத்தன் இலைக்க. லா மல்ஜஅ வலா மன்ஜா மின்க்க இல்லா இலைக்க. ஆமன்த்து பி கித்தாபிக்கல்லதீ அன்ஸல்த்த வபி நபிய்யிக்கல்லதீ அர்சல்த்த" என்று ஓதிக் கொள்.

பொருள்: இறைவா! உனக்கு நான் கீழ்ப்படிந்தேன். காரியம் அனைத்தையும் உன்னிடம் ஒப்படைத்தேன். என் விவகாரங்கள் அனைத்திலும் உன்னையே சார்ந்திருக்கிறேன். உன் மீதுள்ள ஆவலும் அச்சத்திலும் தான் (இவற்றை நான் செய்தேன்). உன்னிடமிருந்து தப்பிக்கவும் ஒதுங்கிடவும் உன்னைத் தவிர வேறு போக்கிடமில்லை. நீ அருளிய உன்னுடைய வேதத்தையும், நீ அனுப்பி வைத்த உன்னுடைய நபியையும் நான் நம்பினேன். (இவ்வாறு நீ பிரார்த்தனை செய்துவிட்டு உறங்கி அன்றைய இரவில்) நீ இறந்து விட்டால் (இஸ்லாம் எனும்) இயற்கை மரபில் இறந்தவனாவாய். இந்தப் பிரார்த்தனையை (இரவின்) இறுதிப் பேச்சாக ஆக்கிக்கொள். அறிவிப்பவர் : பராஉ பின் ஆஸிப் (ரலி). நூல் : புகாரி (6311).

**கவலைகள் ஏற்படும் போது**

எவ்வளவு துயரங்கள் வந்தாலும் அல்லாஹ்வை மட்டுமே நாம் சார்ந்திருக்க வேண்டும். அவனால் மட்டுமே நமக்கு ஏற்பட்ட துன்பங்களை அகற்ற முடியும்.

"இதிலிருந்தும், மற்றும் ஒவ்வொரு துன்பத்திலிருந்தும் அல்லாஹ்வே உங்களைக் காப்பாற்றுகிறான். பின்னர் நீங்கள் இணை கற்பிக்கிறீர்கள்; என்றும் கூறுவீராக! அல்குர்ஆன் (6 : 64).

நூஹ், இதற்கு முன் (நம்மிடம்) பிரார்த்தித்த போது, அவருக்காக (அதை) ஏற்றுக் கொண்டோம். அவரையும் அவரது குடும்பத்தினரையும் பெரும் கஷ்டத்திலிருந்து காப்பாற்றி னோம். அல்குர்ஆன் (21 : 76).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் துன்பம் நேரும் போது, "லா இலாஹ இல்லல்லாஹுல் அழீமுல் ஹலீம். லா இலாஹ இல்லல்லாஹு ரப்புல் அர்ஷில் அழீம். லா இலாஹ இல்லல்லாஹு ரப்புஸ் ஸமாவாத்தி வ ரப்புல் அர்ளி வரப்புல் அர்ஷில் கரீம்" என்று ஓதுவார்கள்.

பொருள்: கண்ணியமிக்கோனும் பொறுமை மிக்கோனுமாகிய அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. மாபெரும் அரியாசனத்தின் அதிபதியான அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியும் சிறப்பான அரியாசனத்தின் அதிபதியுமான அல்லாஹ் வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி). நூல் : புகாரி (6346).

துன்பம் ஏற்படும் போது நீ கூற வேண்டிய வார்த்தைகளை நான் உனக்கு கற்றுக் கொடுக்கட்டுமா? அல்லாஹ் தான் என் இறைவன். அவனுக்கு எதனையும் இணையாக்க மாட்டேன் (என்பதே அந்த வார்த்தை) என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள். அறிவிப்பவர் : அஸ்மா பின்த் உமைஸ் (ரலி). நூல் : அபூதாவுத் (1304).

**மற்றவர்களிடம் பாவமன்னிப்பு தேடுவது இணைவைப்பாகும்**

நாம் செய்த பாவத்தினால் பிற மனிதர்கள் பாதிக்கப் பட்டிருந்தால் அவர்களிடம் மன்னிப்பைக் கேட்க வேண்டிய முறையில் கேட்கலாம். ஆனால் அல்லாஹ்விற்கும் மனிதர் களுக்கும் மத்தியில் உள்ள விஷயங்களில் தவறிழைத்தால் அதை மன்னிக்குமாறு அல்லாஹ்விடம் மட்டுமே கேட்க வேண்டும்.

ஏனென்றால் இந்த மார்க்கம் அல்லாஹ்வுடையது. நாம் எவற்றை செய்ய வேண்டும்; எவற்றைச் செய்யக் கூடாது என்பதை அல்லாஹ் தான் தெளிவுபடுத்தினான். நம்மை

சொர்க்கவாசியா கவும், நரகவாசியாகவும் முடிவு செய்யும் அதிகாரம் அவனிடம் மட்டுமே உள்ளது.

இதைப் புரிந்து கொள்ளாமல் நபி (ஸல்) அவர்களிடத்திலும் மகான்கள் என்று இவர்கள் கருதுபவர் களிடத்திலும் பாவத்தை மன்னிக்குமாறு சிலர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு கேட்பது இணைவைப்பாகும்.

அல்லாஹ்வைத் தவிர பாவங்களை மன்னிப்பவன் யார்? அல்குர்ஆன் (3 : 135).

வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ளவையும் அல்லாஹ்வுக்கே உரியன. தான் நாடியோரை அவன் மன்னிக் கிறான். நாடியோரைத் தண்டிக்கிறான். அல்லாஹ் மன்னிப் பவன்; நிகரற்ற அன்புடையோன். அல்குர்ஆன் (3 : 129).

உன்னைத் தவிர வேறு யாரும் பாவங்களை மன்னிக்க முடியாது என்று நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்திருக்கும் போது நபியவர்கள் பாவங்களை மன்னிப்பார்கள் என்று நம்புவது எவ்வளவு மடத்தனமானது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்! நீயே என் அதிபதி. உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உன் அடிமை. நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதி மொழியையும் வாக்குறுதியையும் என்னால் இயன்ற வரை நிறைவேற்றியுள்ளேன். நான் செய்தவற்றின் தீமைகüலிருந்து உன்னிடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன். நீ எனக்கு அருட்கொடைகளை வழங்கியுள்ளாய் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். மேலும், நான் பாவங்கள் புரிந்துள்ளதையும் உன்னிடம் (மறைக்காமல்) ஒப்புக் கொள்கிறேன். ஆகவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், பாவத்தை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறெவரும் இல்லை. அறிவிப்பவர் : ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி). நூல் : புகாரி (6306).

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், "எனது தொழுகையில் நான் பிரார்த்திக்க எனக்கு ஒரு பிரார்த்தனை யைக் கற்றுத் தாருங்கள்" என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள், இறைவா! எனக்கு நானே அதிகமாக அநீதி இழைத்து விட்டேன். உன்னைத் தவிர வேறெவரும் பாவங்களை மன்னிக்க முடியாது. எனவே உன் தரப்பிலிருந்து எனக்கு மன்னிப்பு அளிப்பாயாக! என் மீது கருணை காட்டுவாயாக! நிச்சயமாக நீ மன்னிப்பவனும் கருணையாளனும் ஆவாய் என்று கூறுங்கள்!" என்றார்கள். அறிவிப்பவர் : அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி). நூல் : புகாரி (834).

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு பிரார்த்திப்பது வழக்கம் : என் இறைவா! என் குற்றங்களையும், என் அறியாமையையும், என் செயல்கள் அனைத்திலும் நான் மேற்கொண்ட விரயத்தையும் மன்னித்திடுவாயாக. மேலும், என்னை விட நீ எவற்றையெல்லாம் அறிந்துள்ளாயோ அவற்றையும் மன்னித்திடுவாயாக. இறைவா! நான் தவறுதலாகச் செய்ததையும், வேண்டுமென்றே செய்ததையும், அறியாமல் செய்ததையும், அறிந்து செய்ததையும் மன்னித் திடுவாயாக. இவை யாவும் என்னிடம் இல்லாமலில்லை. இறைவா! நான் முன்னால் செய்ததையும், பின்னால் செய்ததையும், இரகசிய மாகச் செய்ததையும், பகிரங்கமாகச் செய்ததையும் மன்னித்திடு வாயாக. நீயே முன்னேற்றம் அடையச் செய்பவன். பின்னடைவு ஏற்படச் செய்பவனும் நீயே! நீ அனைத்தின் மீதும் ஆற்றல் பெற்றவன். அறிவிப்பவர் : அபூமூசா (ரலி). நூல் : புகாரி (6398).

**சாதாரணப் பொருட்களுக்கு சக்தி இருப்பதாக எண்ணுவது**

கப்ரின் மீது போடப்பட்ட போர்வைக்கும், பூவிற்கும் அங்கு ஊற்றப்பட்ட எண்ணெய்க்கும் நோய்களை நீக்கி குணமளிக்கும்

ஆற்றல் இருப்பதாக கப்ரு வணங்கிகள் நினைத்துக் கொண்டிருக் கிறார்கள்.

குர்ஆன் வசனங்களை எழுதித் தொங்கவிட்டால் அதனால் வீட்டிற்கு எந்தத் தீங்கும் வராது என்று சிலர் கருதுகிறார்கள். மந்திரிக்கப்பட்ட கயிற்றுக்கு சக்தி இருக்கிறது என்று கருதுபவர்களும் உண்டு.

முட்டையைச் சுற்றி நடுத்தெருவில் உடைத்தால் தீமைகள் வராது என்று நம்புகிறார்கள். மிளகாய் உப்பை எடுத்து தலையில் மூன்று முறை சுற்றி அடுப்பில் போட்டால் கண்ணூ போய்விடும் என்று நினைக்கிறார்கள்.

கண்ணூறு கழிவதற்காக சிலர் சூடத்தை ஏற்றுகிறார்கள். காத்துக்கருப்பு வரக்கூடாது என்ற தவறான நம்பிக்கையில் வீடுகளுக்கு முன்னால் மஞ்சலையும் பூசணிக்காயையும் கட்டித் தொங்க விடுகிறார்கள்.

இப்படி ஆதாரமில்லாமல் கற்பனையை அடிப்படையாக வைத்து சாதாரணப் பொருட்களுக்குச் சக்தி இருப்பதாக எண்ணுவது இணைவைப்பாகும்.

இணைவைப்பாளர்கள் தாத்துல் அன்வாத் என்ற மரத்தில் தங்கள் வாட்களைத் தொங்கவிட்டு அங்கே தங்குவார்கள். இவ்வாறு செய்வதால் போரில் வெற்றி கிடைக்கும் என்று நம்பினார்கள்.

இது போன்று ஒரு மரத்திற்கோ, ஒரு கல்லிற்கோ அல்லாஹ்வால் படைக்கப்பட்ட சக்தியில்லாத எந்தப் பொருளுக்கோ ஆற்றல் உண்டு என்று நாம் நம்பிவிடக் கூடாது என்று நபியவர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

மக்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் மக்காவிலிருந்து ஹுனைன் என்ற இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். இணைவைப்பாளர்களுக்கு ஒரு மரம்

இருந்தது. (புனிதம் கருதி) அங்கே அவர்கள் தங்குவார்கள். அதில் தங்களது ஆயுதங்களைத் தொங்க விடுவார்கள். அதற்கு தாதுல் அன்வாத் என்று சொல்லப்படும். நாங்கள் பசுமையான பிரம்மாண்டமான ஒரு மரத்தைக் கடந்து சென்ற போது அல்லாஹ்வின் தூதரே எங்களுக்கும் ஒரு தாதுல் அன்வாத்தை ஏற்படுத்துங்கள் என்று கூறினோம். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "மூஸாவே! அவர்களுக்கு இருக்கும் கடவுள்கள் போல் எங்களுக்கும் கடவுளை எற்படுத்தித் தருவீராக!" (7 : 138) என்று மூஸா (அலை) அவர்களின் சமுதாயத்தினர்கள் கேட்டதைப் போன்று நீங்கள் கேட்டுள்ளீர்கள். எனது உயிர் எவனது கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக இவையெல்லாம் (நரகத்திற்கு அழைத்துச் செல்லும்) வழிகள். உங்களுக்கு முன் வாழ்ந்தவர்களின் வழியை ஒவ்வொன்றாக நீங்கள் கடைப்பிடிப்பீர்கள் என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அபூ வாகித் (ரலி). நூல் : அஹ்மத் (20892).

**தரீக்காவைப் பின்பற்றுவது இணைவைப்பாகும்**

தங்களுடைய சைகுமார்கள் மறைவான விஷயங்களை யெல்லாம் அறிவார்கள் என்று தரீக்காவைப் பின்பற்றக் கூடியவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மறைவான ஞானம் அல்லாஹ்விற்கு மட்டும் இருப்பதால் இவ்வாறு நினைப்பது இணைவைப்பாகும்.

"அல்லாஹ்வின் கருவூலங்கள் என்னிடம் உள்ளன; மறைவானதை அறிவேன்; என்று உங்களிடம் கூற மாட்டேன். நான் வானவர் என்றும் உங்களிடம் கூற மாட்டேன். எனக்கு அறிவிக்கப்படுவதைத் தவிர (வேறெதனையும்) நான் பின்பற் றுவதில்லை" என்று (முஹம்மதே!) கூறுவீராக! "குருடனும், பார்வையுடையவனும் சமமாவார்களா? சிந்திக்க மாட்டீர்களா?" என்று கேட்பீராக! அல்குர்ஆன் (6 : 50).

"அந்த நேரம் எப்போது வரும்?" என்று (முஹம்மதே!) உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். "இது பற்றிய ஞானம் என் இறைவனிடமே உள்ளது. அதற்குரிய நேரத்தில் அவனைத் தவிர யாரும் அதை வெளிப்படுத்த முடியாது. வானங்களிலும், பூமியிலும் அது மகத்தானதாக அமையும். அது உங்களிடம் திடீரென்று தான் வரும்" என்று கூறுவீராக! இது பற்றி நீர் நன்கு அறிந்தவர் போல் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். "இது பற்றிய ஞானம் அல்லாஹ்விடமே உள்ளது" என்று கூறுவீராக! எனினும் மனிதர்களில் அதிகமானோர் அறிந்து கொள்வதில்லை. அல்குர்ஆன் (7 : 187).

நபி (ஸல்) அவர்களுக்கே மறைவான ஞானம் இல்லை என்கிற போது வேறு யாருக்கும் மறைவான ஞானம் இருக்கவே முடியாது.

"அல்லாஹ் நாடினால் தவிர எனக்கே நன்மை செய்யவோ, தீமை செய்யவோ நான் அதிகாரம் பெற்றிருக்க வில்லை. நான் மறைவானதை அறிந்து கொள்பவனாக இருந்திருந்தால் நன்மைகளை அதிகம் அடைந்திருப்பேன். எந்தத் தீங்கும் எனக்கு ஏற்பட்டிருக்காது. நம்பிக்கை கொள்ளும் சமுதாயத்திற்கு நான் எச்சரிப்பவனாகவும், நற்செய்தி கூறுபவனாகவுமே இருக்கிறேன்" என்று (முஹம்மதே!) கூறுவீராக! அல்குர்ஆன் (7 : 188).

நபி (ஸல்) அவர்களுக்கு மறைவான ஞானம் உண்டு என்று ஒரு சிறுமி நபியவர்களைப் பார்த்து பாடிய போது அவ்வாறு பாடாதே. அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் மறைவானதை அறிய முடியாது என்று நபியவர்கள் கூறினார்கள்.

எனக்குத் திருமணம் நடந்த அன்று காலை நபி (ஸல்) அவர்கள் என்னிடம் வந்தார்கள். (இந்த ஹதீஸைக் கேட்டுக் கொண்டிருந்த காலித் பின் தக்வான் -ரஹ்- அவர்களிடம்) "எனக்கருகில் நீங்கள் அமர்ந்திருப்பது போல நபி (ஸல்) அவர்கள்

எனது விரிப்பின் மீது அமர்ந்தார்கள்" (என்று ருபய்யிஉ கூறினார்கள்)- அங்கு சில (முஸ்லிம்) சிறுமிகள் (சலங்கையில்லா) கஞ்சிராக்களை அடித்துக் கொண்டு பத்ருப் போரில் கொல்லப்பட்ட தங்கள் முன்னோர்களைப் புகழ்ந்து (இரங்கல்) பாடிக் கொண்டிருந் தனர். அவர்களில் ஒரு சிறுமி, "எங்களிடையே ஓர் இறைத்தூதர் இருக்கிறார். அவர் நாளை நடக்க விருப்பதையும் அறிவார்" என்று கூறினாள். உடனே நபி (ஸல்) அவர்கள், "இப்படிச் சொல்லாதே. (இதை விடுத்து) முன்பு நீ சொல்லிக் கொண்டிருந்ததை (வேண்டுமானால்) சொல்" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : ருபய்யிஉ பின்த் முஅவ்வித் (ரலி). நூல் : புகாரி (4001).

ஆயிஷா (ரலி) அவர்கள், முஹம்மத் (ஸல்) அவர்கள் மறைவானவற்றை அறிவார்கள் என யார் உங்களிடம் அறிவிக்கிறாரோ அவர் பொய் சொல்லிவிட்டார். இறைவனோ 'அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் மறைவானவற்றை அறிய மாட்டார்' என்று கூறுகின்றான் (27:65)" என்று சொன்னார்கள். அறிவிப்பவர் : மஸ்ரூக் பின் அஜ்தஉ (ரஹ்). நூல் : புகாரி (7380).

**சோதிடம் குறி பார்ப்பது இணைவைப்பாகும்**

மறைவான ஞானம் அல்லாஹ்விற்கு மட்டுமே உரியது என்று மேற்கண்ட வசனங்களும் ஹதீஸ்களும் உறுதி செய்கிறார்கள். இதை விளங்காமல் வருங்காலத்தில் நடக்கவிருப்பதை சோதிடக்காரனும் குறி சொல்பவனும் அறிவான் என்று பலர் நினைக்கிறார்கள். அதனால் தான் அவர்களிடம் சென்று வருங்காலத்தை கணித்துச் சொல்லுமாறு கூறுகிறார்கள்.

இன்றைக்கு நவீனக் கருவிகள் மூலம் இந்த சோதிடம் பார்க்கப்படுகிறது. எடைபோடும் கருவிகள் நம் எடையைத் தெரிவிப்பதுடன் நமது வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதையும் தெரிவிக்கிறது. இதை நம்புவதும் இணைவைப் பாகும்.

நான், "அல்லாஹ்வின் தூதரே! நான் அறியாமைக் காலத்திற்கு நெருக்கமானவன். அல்லாஹ் இந்த இஸ்லாத்தை வழங்கினான். எங்களில் சிலர் சோதிடர்களிடம் செல்கிறார் களே?" என்றேன். அதற்கு அவர்கள் "சோதிடர்களிடம் நீங்கள் செல்லாதீர்கள்" என்றார்கள். நான் "எங்களில் இன்னும் சிலர் பறவையை வைத்துக் குறி பார்க்கிறார்களே?" என்றேன். அதற்கு நபியவர்கள் "இது, மக்கள் தம் உள்ளங்களில் காணும் (ஐதீகம் சார்ந்த) விஷயமாகும். ஆனால், இது 'அவர்களை' அல்லது 'உங்களை' (செயலாற்றுவதிரிருந்து) தடுத்திட வேண்டாம்" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : முஆவியா பின் ஹகம் (ரலி). நூல் : முஸ்லிம் (935).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒருவர் சோதிடனிடம் சென்று, எதைப் பற்றியாவது கேட்டால், அ(வ்வாறு கேட்ட)வருடைய நாற்பது நாட்களின் தொழுகை அங்கீகரிக் கப்படுவதில்லை. அறிவிப்பவர் ; ஸஃபிய்யா (ரலி). நூல் : முஸ்லிம் (4488).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் சோதிடர்கள் குறித்துச் சிலர் கேட்டனர். அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "சோதிடர்கள் (பொருட்படுத்தத் தக்க) ஒரு பொருளே அல்ல" என்று பதிலளித்தார்கள். அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! அவ்வாறாயின், சோதிடர்கள் சில வேளைகளில் ஒன்றைப் பற்றி அறிவிக்க அது உண்மையாகி விடுகிறதே (அது எப்படி?)" என்று வினவினர். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அந்த உண்மையான வார்த்தைகளை ஜின் (வானவரிடமிருந்து) ஒட்டுக் கேட்டு வந்து தம் (சோதிட) நண்பனின் காதில் சேவல் கொக்கரிப்பது போல் போட்டு விடுகிறது. சோதிடர்கள் அதனுடன் நூற்றுக்கும்

அதிகமான பொய்களைக் கலந்து விடுகின்றனர்" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி). நூல் ; புகாரி (6213).

**சகுணம் பார்ப்பது இணைவைப்பாகும்**

பூனை குறுக்கே வந்தால் காரியம் கெட்டுவிடும்; கை அரித்தால் செல்வம் வரப்போகிறது என்று அர்த்தம். ஆந்தை கத்தினால் வீட்டிற்கு ஆகாது. பல்லி கத்தினால் அது நற்சகுணம். இப்படி பலவிதமான மூடநம்பிக்கைகளை மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த ஒரு நன்மை வந்தாலும் தீமை ஏற்பட்டாலும் அது அல்லாஹ்வின் நாட்டத்தால் வந்தது என்று தான் நம்ப வேண்டும். தொடர்பில்லாத விசயங்களை தொடர்புபடுத்தி எதிர்காலத்தில் நடப்பதை முன்கூட்டியே கூறுவதால் சகுணம் பார்ப்பதும் இணைவைப்பாகும்.

"அல்லாஹ் எங்களுக்கு விதித்ததைத் தவிர எங்களுக்கு வேறு எதுவும் ஏற்படாது. அவன் எங்கள் அதிபதி. நம்பிக்கை கொண்டோர் அல்லாஹ்வையே சார்ந்திருக்க வேண்டும்" என்று கூறுவீராக! அல்குர்ஆன் (9 : 51).

குறிப்பிட்ட நட்சத்திரங்களால் தான் மழை பெய்கிறது என்ற நம்பிக்கை நபியவர்களின் காலத்தில் சில மக்களிடம் இருந்தது. அல்லாஹ்வால் நடந்தது என்று கூறுவதற்குப் பதிலாக நட்சத்திரத்தால் தான் மழை வந்தது என்று நம்புவதை இறை மறுப்பு என்று நபியவர்கள் குறிப்பிட்டார்கள்.

எனவே நாமும் இதனால் தான் நடந்தது. இதனால் தான் நடக்கவில்லை என்று அல்லாஹ்வை மறந்து கூறுவதைத் தவிர்க்க வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'ஹுதைபியா' எனுமிடத்தில் எங்களுக்கு சுப்ஹுத் தொழுகை தொழுவித்தார்கள். அன்றிரவு மழை பெய்திருந்தது. தொழுது முடித்ததும் மக்களை

நோக்கி நேராகத் திரும்பி, "உங்கள் இறைவன் என்ன கூறினான் என்பதை நீங்கள் அறிவீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், "அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கு அறிந்தவர்கள்" என்று கூறினர். அப்போது "என்னை நம்பக் கூடியவர்களும் (என்னை) மறுக்கக் கூடியவர்களுமாக என் அடியார்கள் (இரு பிரிவினராக) உள்ளனர். 'அல்லாஹ்வின் தயவாலும், அவன் கருணையாலும் தான் நமக்கு மழை பொழிந்தது' எனக் கூறியவர்களோ என்னை நம்பி, நட்சத்திரத்தை மறுத்தவர்களாவர். இன்ன இன்ன நட்சத்திரத்தால் தான் (எங்களுக்கு மழை பொழிந்தது) எனக் கூறியவர்களோ என்னை மறுத்து, நட்சத்திரத்தை நம்பியவர்களாவர்' என இறைவன் கூறினான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : ஸைத் பின் காலித் (ரலி). நூல் : புகாரி (846).

சகுணம் பார்ப்பது இணைவைப்பாகும். சகுணம் பார்ப்பது இணைவைப்பாகும் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) மூன்று முறை கூறினார்கள். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி). நூல் : அபூதாவுத் (3411).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "பறவை சகுனம் என்பது கிடையாது. சகுனங்களில் சிறந்தது நற்குறியே ஆகும்" என்று சொன்னார்கள். மக்கள், "நற்குறி என்பதென்ன?" என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், "அது நீங்கள் செவியுறும் நல்ல (மங்கலகரமான) சொல்லாகும்" என்று பதிலளித்தார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : புகாரி (5754).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : என் சமுதாயத்தாரில் எழுபதாயிரம் பேர் விசாரணை ஏதுமின்றி சொர்க்கம் செல்வார்கள். அவர்கள் யாரெனில், ஓதிப்பார்க்க மாட்டார்கள். பறவை சகுனம் பார்க்க மாட்டார்கள். தம் இறைவ(ன்

மீது முழு நம்பிக்கை கொண்டு அவ)னையே சார்ந்திருப்பார்கள். அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி). நூல் : புகாரி (6472).

**நல்ல நேரம் கெட்ட நேரம் பார்ப்பது இணைவைப்பாகும்**

நல்ல நேரம் கெட்ட நேரம் பார்த்து காரியங்களைத் துவங்கும் வழக்கம் பலரிடம் உள்ளது. குறிப்பிட்ட நேரம் தீங்கிழைக்கும் என்றும் குறிப்பிட்ட நேரம் நன்மை பயக்கும் என்றும் இவர்கள் நம்புகிறார்கள்.

நன்மை தீமை யாவும் அல்லாஹ் விதித்த விதியின் படியே நடக்கிறது என்று ஒவ்வொரு முஸ்லிமும் நம்ப வேண்டும். இதற்கு மாற்றமாக குறிப்பிட்ட காலத்தினால் தான் நன்மையும் தீமையும் ஏற்படுகிறது என்று நம்புவது இணை வைப்பாகும்.

இறைவனால் ஏற்படுத்தப்பட்ட காலத்தை கெட்ட காலம் என்று கூறுவது இறைவனை ஏசுவதற்கு நிகரானதாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "ஆதமின் மகன் (மனிதன்) என்னைப் புண்படுத்துகின்றான். அவன் காலத்தை ஏசுகின்றான். நானே காலம் (படைத்தவன்) ஆவேன். என் கரத்திலேயே அதிகாரமனைத்தும் உள்ளது. நானே இரவையும் பகலையும் மாற்றி மாற்றிக் கொண்டு வருகின்றேன்" என்று அல்லாஹ் கூறுகின்றான். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : புகாரி (7491).

உலகில் ஏற்படும் விளைவுகள் ஆட்களைப் பொருத்துத் தான் இறைவனால் தீர்மானிக்கப்படுமே தவிர நாட்களைப் பொருத்து அல்ல.

எல்லா மனிதர்களுக்கும் நன்மை மட்டுமே தருகின்ற எந்த நாளும் உலகில் இல்லை. எல்லா மனிதர்களுக்கும் தீமை செய்யும் ஒரு நாளும் உலகில் இல்லை.

உலகத்துக்கு நல்ல நாள் பார்த்துக் கூறுவோர் தமக்கு ஒரு நல்ல நாளைப் பார்த்துக் கொள்ள முடிவதில்லை. அவர்களில் அனேகமாக அனைவருமே தரித்திர நிலையில் தான் உள்ளனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**அல்லாஹ் அல்லாதவர்கள் மீது சத்தியம் செய்வது.**

தான் மிகவும் மதிக்கின்ற உயர்ந்த ஒன்றின் பெயரைக் கூறி அதன்மீது சத்தியம் செய்யும் வழக்கம் மக்களிடம் உள்ளது. அல்லாஹ்வை விட உயர்ந்தவர்கள் யாரும் இல்லை என்பதால் அல்லாஹ்வின் மீது மட்டுமே சத்தியம் செய்ய வேண்டும். மற்றவர்கள் மீது சத்தியம் செய்வது இணைவைப் பாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எவர் சத்தியம் செய்கின்றாரோ அவர் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யட்டும்; அல்லது வாய்மூடி (மௌனமாக) இருக்கட்டும். அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி) . நூல் : புகாரி (2679).

"எவர் சத்தியம் செய்ய விரும்புகிறாரோ அவர் அல்லாஹ்வின் மீதே தவிர (வேறெவர் மீதும்) சத்தியம் செய்ய வேண்டாம்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஏனெனில், குறைஷிகள் தம் முன்னோர்கள் மீது சத்தியம் செய்து வந்தார்கள். ஆகவே நபி (ஸல்) அவர்கள், "உங்கள் முன்னோர்கள் மீது சத்தியம் செய்யாதீர்கள்" என்று சொன்னார்கள். அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி) . நூல் : புகாரி (3836).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் சத்தியம் செய்யும் போது 'லாத்தின் மீது சத்தியமாக! உஸ்ஸாவின் மீது சத்தியமாக!' என்று கூறி விட்டாரோ, அவர் (அதற்குப் பரிகாரமாக) 'லாஇலாஹ இல்லல்லாஹ் (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை) என்று சொல்லட்டும்! எவர் தம் நண்பரிடம், "வா சூது விளையாடுவோம்"

என்று கூறுவாரோ அவர் (எதையேனும்) தர்மம் செய்யட்டும். அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி). நூல் : புகாரி (4860).

யூதர் ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து நீங்களும் இணைவைக்கிறீர்கள். (அல்லாஹ்விற்கு) நிகரை ஏற்படுத்து கிறீர்கள். நீ நாடியதும் அல்லாஹ் நாடியதும் (நடந்து விட்டது) என்று கூறுகிறீர்கள். கஃபாவின் மீது சத்தியமாக என்று கூறுகிறீர்கள். (இது இணைவைப்புத் தானே) என்று கேட்டார். எனவே சத்தியம் செய்ய விரும்பினால் கஃபாவின் இறைவனின் மீது ஆணையாக என்று கூறுமாறும் அல்லாஹ் நாடியதும் பிறகு நீ நாடியதும் (நடந்துள்ளது) என்று கூறுமாறும் மக்களுக்கு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அறிவிப்பவர் : குதைலா (ரலி). நூல் : நஸயீ (3713).

**மற்றவர்களுக்கு அறுத்துப் பலியிடுவது இணைவைப்பாகும்**

அல்லாஹ்விற்காக பிராணிகளை அறுத்துப் பலியிடுவது வணக்கமாகும். இந்த வணக்கத்தை கப்ரு வணங்கிகள் இறந்தவர்களுக்கு செய்து வருகிறார்கள். தர்ஹாக்களுக்குச் சென்று இறந்தவருக்காக அறுத்துப் பலியிடுகிறார்கள். இது இணைவைப்பாகும்.

தாமாகச் செத்தவை, இரத்தம், பன்றியின் இறைச்சி, அல்லாஹ் அல்லாதோருக்காக அறுக்கப்பட்டவை ஆகியவற் றையே அவன் உங்களுக்குத் தடை செய்துள்ளான். அல்குர்ஆன் (2 : 173).

எனவே உமது இறைவனைத் தொழுது அவனுக்காக அறுப்பீராக! அல்குர்ஆன் (108 : 2).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "தன் தந்தையைச் சபித்தவனை அல்லாஹ் சபிக்கின்றான். அல்லாஹ் அல்லாத மற்றவர் பெயரில் (பிராணிகளை) அறுத்தவனை அல்லாஹ் சபிக்கின்றான். (மார்க்கத்தில் இல்லாத) புதிய விஷயங்களை

(மார்க்கத்தின் பெயரால்) உருவாக்கியவனுக்கு அடைக்கலம் அளித்தவனை அல்லாஹ் சபிக்கின்றான். பூமியின் (எல்லைக் கல், மைல் கல், வரப்பு உள்ளிட்ட) அடையாளங்களை மாற்றியமை(த்து பிறர் நிலத்தை அபகரி)ப்பவனை அல்லாஹ் சபிக்கின்றான்". அறிவிப்பவர் : அலீ (ரலி). நூல் : முஸ்லிம் (4001).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (இனி,) தலைக் குட்டி(யைப் பலியிடும் அறியாமைக் காலச் செய்கை)யும் இல்லை. (ரஜப் மாதத்தின் முதல் பத்து நாட்களில்) பிராணிகளைப் பலியிடுவதும் இல்லை.

(ஆடு மற்றும் ஒட்டகம் ஆகியவை ஈனும்) முதலாவது குட்டி 'ஃபரஉ' ஆகும்; அதை (அறியாமைக் கால) மக்கள் தம் தெய்வச் சிலைகளுக்காகப் பலியிட்டு வந்தனர். ரஜப் மாதத்தி(ன் முதல் பத்து நாட்களி)ல் பலியிடப்படும் பிராணி 'அத்தீரா'வாகும். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) . நூல் : புகாரி (5473).

**மற்றவர்களுக்கு நேர்ச்சை செய்வது இணைவைப்பாகும்**

நான் நாடியது நடந்தால் ஏழைகளுக்கு உணவளிக்கிறேன். தர்மம் செய்கிறேன் என்று கூறுவது நேர்ச்சை செய்வதாகும். நேர்ச்சை என்பது வணக்கமாக இருப்பதால் அல்லாஹ்விடம் மட்டுமே இவ்வாறு செய்ய வேண்டும்.

தர்ஹாக்களுக்குச் சென்று நான் நாடியது நடந்தால் அதை செய்வேன் இதை நிறைவேற்றுவேன் என்று ஒருவன் நேர்ச்சை செய்துவிட்டால் அவன் இணைவைத்தவனாக ஆகி விடுவான்.

அவர்கள் நேர்ச்சையை நிறைவேற்றுவார்கள். தீமை பரவிய நாளைப்பற்றி அஞ்சுவார்கள். அல்குர்ஆன் (76 : 7).

நீங்கள் எதையேனும் (நல் வழியில்) செலவிட்டாலோ, நேர்ச்சை செய்தாலோ அல்லாஹ் அதை அறிகிறான். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளரும் இல்லை. அல்குர்ஆன் (2 : 270).

"இறைவா! என் வயிற்றில் உள்ளதை (குழந்தையை) உனக்காக நேர்ச்சை செய்து விட்டேன். அது (உனக்காக) முழுமையாக அர்ப்பணிக்கப்படும். (இதை) என்னிடமிருந்து ஏற்றுக் கொள்வாயாக! நீயே செவியுறுபவன்; அறிந்தவன்" என்று இம்ரானின் மனைவி கூறியதை நினைவூட்டுவீராக! அல்குர்ஆன் (3 : 35 ).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நரகத்தின் ஒரு பகுதி மற்றொரு பகுதியைத் (தின்று) தகர்த்துக் கொண்டிருப்பதை நான் கண்டேன். 'அம்ர் (பின் ஆமிர் அல்குஸாஈ' நரகத்தில்) தன் குடலை இழுத்தபடி சென்று கொண்டிருப்பதையும் கண்டேன். முதன் முதலாக ஒட்டகங்களைச் சிலைகளுக்காக (நேர்ச்சை செய்து)த் திரியவிட்டவர் அவர் தாம். அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி) . நூல் : புகாரி (4624).

தர்ஹாக்களில் நேர்ச்சை செய்பவர்கள் நாங்கள் அல்லாஹ்விற்காகத் தான் நேர்ச்சை செய்கிறோம். இதன் நன்மை இறந்துவிட்ட இந்த நல்லடியாருக்குப் போக வேண்டும் என்பதற்காகச் செய்கிறோம் என்று பொய்யான வாதத்தை எடுத்து வைக்கிறார்கள்.

இவர்கள் கூறுவது பொய்யாகும். தர்ஹாக்களுக்குச் செல்லும் அதிகமானோர் இறந்து விட்டவர்களை வணங்கும் முகமாகத் தான் இதை செய்கிறார்கள்.

இவர்கள் கூறுவது உண்மை என்று வைத்துக் கொண்டாலும் நேர்ச்சையில் அல்லாஹ்விற்காக செய்வது எப்படி முக்கிய நிபந்தனையாக இருக்கிறதோ அது போன்று நேர்ச்சை நிறைவேற்றப்படும் இடம் மார்க்கத்திற்கு மாற்றமான காரியங்கள் அரங்கேற்றப்படும் இடமாக இருக்கக் கூடாது என்பதும் முக்கிய நிபந்தனையாகும்.

மார்க்கத்திற்கு மாற்றமான பல அம்சங்கள் இணை வைப்பு உட்பட தர்ஹாக்களில் அரங்கேறுவதால் அங்கு சென்று அல்லாஹ்விற்காகவும் நேர்ச்சை செய்வது கூடாது. இதைப் பின்வரும் ஹதீஸ் விளக்குகிறது.

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு மனிதர் புவானா என்னுமிடத்தில் ஒட்டகத்தைக் குர்பானி செய்ய நேர்ச்சை செய்திருந்தார். ஆகவே அது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் நான் புவானா என்னுமிடத்தில் ஒட்டகத்தை அறுத்துப் பலியிட நேர்ச்சை செய்துள்ளேன். (அதை நிறைவேற்றலாமா...?) என்று கேட்டார். அப்போது நபி (ஸல்) அவர்கள் அறியாமை காலத்தவர்கள் வணங்கிய சிலைகளில் ஏதாவது ஒரு சிலை அங்கிருக்கிறதா..? என்று கேட்டார்கள். அதற்கு நபித்தோழர்கள் இல்லை என்றார்கள். அவர்களின் விழாக்களில் எந்த விழாவாவது அங்கு கொண்டாடப் படுகிறதா? என்று கேட்டார்கள். அதற்கும் நபித்தோழர்கள் இல்லையென்று கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் உன்னுடைய நேர்ச்சையை நீ நிறைவேற்றலாம் (என்று கூறி) அல்லாஹ்வுக்கு மாற்றமான காரியங்களிலும், ஆதமுடைய சந்ததிக்கு சக்திக்கு மீறிய காரியங்களில் நேர்ச்சை நிறைவேற்றுதல் கூடாது என்று கூறினார்கள். அறிவிப்பவர்: ஸாபித் இப்னு ளஹ்ஹாக் (ரலி) . நூல்: அபூதாவூத் (2881).

தர்ஹாக்களில் நபியவர்கள் தடுத்த விழாக் கொண்டாட்டங்கள் நடைபெறுகிறது. சிலைகளுக்கு பதிலாக கப்ருகள் கட்டப்பட்டு வணங்கப்படுகிறது. எனவே அங்கு செல்வதே கூடாது.

**பிறரது காலில் விழுவது இணைவைப்பாகும்**

தரீக்காவாதிகள் தங்களது சைகுமார்களின் காலில் விழுகிறார்கள். காலை கழுவி அந்த நீரை குடிக்கிறார்கள். இவ்வாறு செய்வது இணைவைப்பாகும். ஏனென்றால் நமது தலை

அல்லாஹ்விற்கு மட்டுமே சாய வேண்டும். அதுபோல் மரியாதையின் நிமித்தமாக பெரியவர்கள் பெற்றோர்களின் கால்களில் சிலர் விழுகின்றனர்.

இரவு, பகல், சூரியன், சந்திரன் ஆகியவை அவனது சான்றுகளில் உள்ளவை. சூரியனுக்கோ, சந்திரனுக்கோ ஸஜ்தாச் செய்யாதீர்கள்! அவனையே நீங்கள் வணங்குவோராக இருந்தால் அவற்றைப் படைத்த அல்லாஹ்வுக்கே ஸஜ்தாச் செய்யுங்கள்! அல்குர்ஆன் (41 : 37).

உமது இறைவனிடம் இருப்போர் (வானவர்கள்) அவனுக்கு அடிமைத்தனம் செய்வதைப் புறக்கணிக்க மாட்டார்கள். அவனைத் துதிக்கின்றனர். அவனுக்கே ஸஜ்தாச் செய்கின்றனர். அல்குர்ஆன் (7 : 206).

அவர்கள் தமது இறைவனுக்காக ஸஜ்தாச் செய்தும், நின்றும் இரவைக் கழிப்பார்கள். அல்குர்ஆன் (25 : 64) .

நபி (ஸல்) அவர்களுக்கு சிரம்பணிய நபித்தோழர்கள் அவர்களிடம் அனுமதி கேட்ட போது நபியவர்கள் அதை தடை செய்தார்கள். நபி (ஸல்) அவர்களுக்கே சிரம் பணியக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கும் போது அவர்களின் கால்தூசிக்கு ஈடாகாத போலி சைகுமார்களுக்கும் பெற்றோர்களுக்கும் கண்டவர்களுக்கும் எப்படி சிரம் பணியலாம்?

நான் எமன் நாட்டிலிருந்து திரும்பி வந்த போது அல்லாஹ்வின் தூதரே யமன் நாட்டில் உள்ள மனிதர்கள் ஒருவர் மற்றவருக்கு சிரம் பணிகிறார்கள். எனவே நாங்கள் உங்களுக்கு சிரம் பணியட்டுமா? என்று கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒருவர் இன்னொரு வருக்கு சிரம் பணியுமாறு நான் கட்டளையிடுவதாக இருந்தி ருந்தால் மனைவி தன் கணவனுக்கு சிரம் பணியுமாறு கட்டளையிட்டிருப்பேன். (அதையே நான் தடை செய்திருக்கும் போது எனக்கு சிரம்

பணிவதை எப்படி அனுமதிப்பேன்) என்று கூறினார்கள். அறிவிப்பவர் : முஆத் பின் ஜபல் (ரலி). நூல் : அஹ்மத் (20983)

**ஸியாரத் என்ற பெயரில் இணைவைப்பு**

மண்ணறைகளைச் சந்தித்து வரும்படி நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஏனென்னறால் மண்ணறைகளை காணும் போது நமக்கு மரண பயம் ஏற்படும். நமது செயல்பாடுகளைத் திருத்தி நல்லவர்களாக வாழ்வதற்கு இந்தப் பயம் உதவும்.

எனவே எல்லோரும் பொது மையவாடிக்குச் சென்று மரண பயத்தை வரவழைத்துக் கொள்ள வேண்டும். இதுவே மார்க்கத்திற்கு மாற்றமான காரியங்கள் அரங்கேறாத மையவாடியாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அடக்கத் தலங்களைச் சந்தியுங்கள். ஏனெனில், அவை மரணத்தை நினைவூட்டும்!' அறிவிப்பவர் : அபூஹ,ரைரா (ரலி). நூல் : முஸ்லிம் (1777).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மண்ணறைகளைச் சந்தியுங்கள். ஏனென்றால் அவை மறுமையை நினைவூட்டுகிறது. அறிவிப்பவர் : புரைதா (ரலி). நூல் : திர்மிதி (974).

தர்ஹாக்களை சென்று தரிசித்து வருவதற்கு கப்ரு வணங்கிகள் மேற்கண்ட ஹதீஸ்களை ஆதாரம் காட்டு கிறார்கள். நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்த ஸியாரத்திற்கும் தர்ஹாக்களுக்குச் செல்வதற்கும் சம்பந்தமே இல்லை.

கப்ருகளை பூசுவதையும், அதன் மேல் கட்டிடங்களை எழுப்புவதையும் நபியவர்கள் தடைசெய்திருக்க தனிப்பட்ட ஒருவருடைய மண்ணறையைப் பூசி அதன் மேல் கட்டிடம் எழுப்பி விதவிதமான இணைவைப்புக்காரியங்களுக்கு இடமாகத் திகழ்வது தான் தர்ஹா என்பது.

கோயில் திருவிழாக்கள் போல் மேளதாளத்துடன் ஆட்டம்பாட்டத்துடன் உரூஸ் விழா தர்ஹாக்களில் நடைபெறும். பெண்களை தவறாக பார்த்து இரசிப்பதற்காகவே இளைஞர் பட்டாளம் அந்த இடத்தை நோக்கி படையெடுக்கும்.

மார்க்கம் தடுத்த பெரும்பெரும் பாவங்களின் கேந்திரமாக விளங்கும் தர்ஹாக்களுக்குச் சென்றால் நிச்சயம் மரண பயம் வராது. மாறாக இவையெல்லாம் மரணத்தை சிந்திக்கவிடாமல் உலக கவர்ச்சியின் பால் அழைத்துச் செல்லும். இது போன்ற இடங்களுக்கு செல்லக் கூடாது என்பதற்கு மார்க்கத்தில் தடை உள்ளது.

அல்லாஹ்வின் வசனங்கள் மறுக்கப்பட்டு, கேலி செய்யப்படுவதை நீங்கள் செவியுற்றால் அவர்கள் வேறு பேச்சுக்களில் ஈடுபடும் வரை அவர்களுடன் அமராதீர்கள்! (அவர்களுடன் அமர்ந்தால்) அப்போது நீங்களும் அவர்களைப் போன்றவர்களே என்று இவ்வேதத்தில் உங்களுக்கு அவன் அருளியுள்ளான். நயவஞ்சகர்களையும், (தன்னை) மறுப்போர் அனைவரையும் அல்லாஹ் நரகில் ஒன்று சேர்ப்பான். அல்குர்ஆன் (4 : 140).

மரண பயத்தை வரவழைத்துக் கொள்ள வேண்டும் என்பதற் காக யாரும் தர்ஹாக்களுக்குச் செல்வதில்லை. மாறாக புனிதம் கருதியே அங்கே செல்கிறார்கள். இவ்வாறு புனிதம் கருதி மூன்று இடங்களைத் தவிர வேறு இடங்களுக்கு பயணம் போகக் கூடாது என்று நபியவர்கள் தடை விதித்துள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுந் நபவீ, மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மூன்று பள்ளிவாசல்களைத் தவிர வேறெங்கும் (புனிதம் கருதி) பயணம் மேற்கொள்ளப்படாது. அறிவிப்பவர் : அபூசயீத் அல்குத்ரீ (ரலி). நூல் : புகாரி (1189).

**தர்ஹாக்கள் இணைவைப்பின் கேந்திரங்கள்**

மண்ணறைகள் மண்ணறைகளாகத் தான் இருக்க வேண்டும். அதை பள்ளிவாசல்களாகவோ புனிதத் தலங்களாகவோ கருதுவது இணைவைப்பாகும்.

யூத கிறிஸ்தவர்கள் நபிமார்களின் மண்ணறைகளைப் புனிதத் தலங்களாகக் கருதிய காரணத்தினால் இறை மறுப்பாளர்களாக ஆனார்கள். தர்ஹாக்கள் என்ற பெயரில் நல்லடியார் என்ற சான்று இல்லாதவர்களுக்கும் குடிகாரனுக்கும் குளிக்காதவனுக்கும் புனிதத் தலங்களை ஏற்படுத்துவர்கள் சந்தேகமில்லாம் இணைவைப்ப வர்களே.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு இறப்பு நெருங்கி விட்ட போது தம் முகத்தின் மீது வேலைப்பாடுகள் கொண்ட கருப்புத் துணி ஒன்றைப் போட்டுக் கொள்ளலா னார்கள். வெப்பத்தை உணரும் போது அதைத் தம் முகத்திலி ருந்து விலக்கி விடுவார்கள். அதே நிலையில் அவர்கள் இருந்து கொண்டிருக்க, "யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் அல்லாஹ் தன் கருணையிலிருந்து அப்புறப்படுத்தவானாக! தம் இறைத் தூதர்களின் அடக்கத் தலங்களை அவர்கள் வணக்கத்தலங்களாக ஆக்கிக் கொண்டார்கள்" என்று கூறி, அவர்கள் செய்ததைப்(ப் போன்று நீங்களும் செய்து விடாதீர்கள் என தம் சமுதாயத்தாரை) எச்சரித்தார்கள். அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி). நூல் : புகாரி (436).

உம்மு ஹபீபா அவர்களும் உம்மு சலமா அவர்களும் (அபிசீனிய ஹிஜ்ரத்தின் போது) அபிசீனியாவில் தாங்கள் பார்த்த உருவப்படங்கள் கொண்ட ஒரு கிறிஸ்தவ ஆலயத்தைக் குறித்து (என்னிடம்) பேசினார்கள். மேலும் அவ்விருவரும், நபி (ஸல்) அவர்களிடம் அதைப் பற்றிக் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "(அவர்கள் எத்தகையவர்கள் என்றால்) அவர்களிடையே நல்ல மனிதர் ஒருவர் வாழ்ந்து இறந்து விடும் போது அவரது

சமாதியின் மீது வணக்கத்தலம் ஒன்றைக் கட்டி அதில் (அவருடைய) அந்த உருவங்களை வரைவார்கள். அவர்கள் தாம் மறுமை நாளில் அல்லாஹ்விடம் மக்களிலேயே மிக மோசமானவர்கள்" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி) . நூல் : புகாரி (427).

**ஹராம்களின் ஒட்டுமொத்த உருவம்**

நபியவர்கள் தடுத்த பல விஷயங்கள் தர்ஹாக்களில் அரங்கேறுவதால் ஹராம்களின் ஒட்டுமொத்த உருவமாக தர்ஹாக்கள் பரிணமித்துக் கொண்டிருக்கிறது. கப்றுகள் காரையால் (சுண்ணாம்புக் கலவையால்) பூசப்படுவதையும் அதன் மீது உட்காருவதையும் அதன் மீது கட்டடம் எழுப்பப்படுவதையும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி). நூல் : முஸ்லிம் (1765).

அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் என்னிடம், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எந்த அலுவலுக்காக என்னை அனுப்பினார்களோ அந்த அலுவலுக்காக உம்மை நான் அனுப்புகிறேன். (அந்த அலுவல் என்னவென்றால்) எந்த உருவச் சிலைகளையும் நீர் அழிக்காமல் விட்டு விடாதீர்; (தரையை விட) உயர்ந்துள்ள எந்தக் கப்றையும் தரை மட்டமாக்காமல் விடாதீர்!" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அபுல்ஹய்யாஜ் அல்அசதீ (ரஹ்). நூல் : முஸ்லிம் (1764).

**சந்தனக் கூடு உரூஸ் கொண்டாட்டங்கள் இணைவைப்பாகும்**

சந்தனக் கூடு உரூஸ் கொண்டாட்டங்களும் நடுத்தெரு வில் கப்பல் இழுப்பது போன்ற கூத்து கும்மாளங்களும் கோவில் திருவிழாக்களை காப்பியடித்து உருவாக்கப்பட்ட தாகும். இறை மறுப்பாளர்கள் தேரை இழுப்பது போல் கப்ர் வணங்கிகள் கப்பலை இழுக்கிறார்கள்.

இந்த அந்நியக் கலாச்சாரம் இஸ்லாத்தில் நுழைந்துவிடக் கூடாது என்பதற்கு நபியவர்கள் அற்புதமான அரண்களை ஏற்படுத்துவிட்டுச் சென்றுள்ளார்கள். மக்களிலேயே சிறந்தவ ரான முஹம்மத் (ஸல்) அவர்கள் தன்னுடைய மண்ணறையில் விழா கொண்டாடக் கூடாது என்று தடை பிறப்பித்துள்ளார்கள்.

நபியவர்களுடைய மண்ணறையை விழாக் கொண்டாடும் இடமாக ஆக்கிவிடக் கூடாது என்றால் அவர்களின் கால்தூசுக் குச் சமமாகத முகவரியில்லாத சக்தியற்ற மனிதர்களின் மண்ணறைகளில் விழாக் கொண்டாடுவதற்கு எள்ளளவு கூட அனுமதி கிடையாது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்கள் வீடுகளை அடக்கத் தலங்கலாக ஆக்காதீர்கள். மேலும் எனது அடக்கத் தலத்தில் விழா எடுக்காதீர்கள். என் மீது சலவாத்துச் சொல்லுங்கள். ஏனென்றால் நீங்கள் கூறும் சலவாத்து நீங்கள் எங்கிருந்தாலும் என்னை வந்தடையும். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : அபூதாவுத் (1746).

தனது மண்ணறையில் மக்கள் குழும்பிவிடக் கூடாது என்பதற்காக நபியவர்கள் என் மீது சலவாத்துச் சொல்லுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் அது என்னை வந்தடையும் என்று போதிக்கிறார்கள்.

இதை விளங்காத காரணத்தினால் ஹஜ் என்ற உயர்ந்த வணக்கத்தை புரிபவர்கள் மதீனாவில் உள்ள நபியவர்களின் மண்ணறைக்குச் சென்று இணைவைக்கும் காரியங்களில் ஈடுபடுகிறார்கள். நபியவர்கள் தாங்கள் சொல்வதைச் செவியுறு கிறார்கள் என்று எண்ணி இணைவைப்பில் வீழ்கிறார்கள்.

நபியவர்கள் மீது நாம் கூறும் சலவாத்தை வானவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் எடுத்துச் செல்கிறார்கள். எனவே

மதீனாவிற்குச் சென்று சலாம் சொல்ல வேண்டும் என்று நினைப்பது தவறு.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : பூமியில் சுற்றித் திரியும் வானவர்கள் அல்லாஹ்விற்கு இருக்கிறார்கள். அவர்கள் என் சமூகத்தினரிடமிருந்து சலாத்தை எனக்கு எத்தி வைக்கிறார்கள். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி). நூல் : அஹ்மத் (3484).

**பள்ளிவாசலுக்குள் இணைவைப்பு**

அல்லாஹ்வை மட்டும் வணங்குவதற்காகக் கட்டப்படுகின்ற ஆலயத்திலும் இன்று இணைவைக்கப்படுகிறது. பள்ளிவாசலுக்கு அருகில் மண்ணறைகளைக் கட்டி வைத்துள்ளார் கள். பெரும்பாலான பள்ளிகள் இப்படித்தான் உள்ளது.

சில ஊர்களில் பள்ளிக்குள்ளேயே மண்ணறைகள் கட்டப்பட்டு அதை நோக்கி மக்கள் தொழுது கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தான் அல்லாஹ்வின் படைப்புகளிலேயே தரங்கெட்டவர்கள். மோசமானவர்கள்.

பள்ளிவாசல்கள் அல்லாஹ்வுக்கே உரியன. எனவே அல்லாஹ்வுடன் வேறு எவரையும் அழைக்காதீர்கள்! அல்குர்ஆன் (72 : 18).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மறுமை நாள் வரும் போது உயிருடன் இருப்பவர்களும் மண்ணறைகளை பள்ளிவாசல்களாக ஆக்கிக் கொள்பவர் களும் மக்களிலேயே படுமோசமானவர்கள். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி). நூல் : அஹ்மத் (3929).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அடக்கத் தலங்களை (கப்று) நோக்கித் தொழாதீர்கள்; அவற்றின் மீது உட்காராதீர்கள். அறிவிப்பவர் : அபூமர்ஸத் அல்ஃகனவீ (ரலி). நூல் : முஸ்லிம் (1769).

உங்கள் வீடுகளை தொழுகை நடத்தப்படாத மண்ணறைகளை போன்று ஆக்கி விடாதீர்கள். வீடுகளில் தொழுங்கள் என்று நபியவர்கள் கூறியுள்ளார்கள். இதன் மூலம் மூலம் மண்ணறை உள்ள இடத்தில் தொழக்கூடாது என்பதை உணர்த்துகிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்களது தொழுகைகளில் சிலவற்றை உங்களுடைய இல்லங்களிலும் நிறைவேற்றுங்கள் உங்களுடைய இல்லங்களை கப்று (சவக்குழி)களாக ஆக்கி விடாதீர்கள். அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி). நூல் : புகாரி (432).

**அல்லாஹ்வை அஞ்சுவது போல் மற்றவற்றை அஞ்சுவது.**

நாம் என்ன செய்தாலும் அதை அல்லாஹ் அறிகிறான். எனவே தறுகள் செய்யும் போது அவனுக்கு அஞ்சுகிறோம். அல்லாஹ்விற்கு மாறு செய்தால் அவன் தண்டித்து விடுவானோ என்று பயப்படுகிறோம். இவ்வாறு அல்லாஹ் விற்கு மட்டுமே பயப்பட வேண்டும்.

தர்ஹாக்களில் நடக்கும் காரியங்கள் அனைத்தும் வழிகேடு என்று தெளிவாகத் தெரிந்தாலும் அதை வெளியில் சொல்வதற்குச் சிலர் பயப்படுகிறார்கள்.

இணைவைப்பைக் கண்டித்துப் பேசுபவர்களுக்கு உறுதுணையாக இவர்கள் இருப்பதில்லை. கப்ரில் அடக்கம் செய்யப்பட்டவர் நம்மை தண்டித்து விடுவாரோ என்ற பயம் தான் பலரை சிந்திக்க விடாமல் முழுமையான ஈமானுக்கு வரவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு இறந்து போனவர்களுக்கு அஞ்சுவது இணைவைப்பாகும். இறந்து போனவர்களால் நன்மை மட்டுமின்றி எந்த தீமையும் நமக்கு செய்ய முடியாது என்றே நாம் நம்ப வேண்டும்.

ஷைத்தானே, தனது நேசர்களை (இவ்வாறு) அச்சுறுத்துகிறான். அவர்களுக்கு அஞ்சாதீர்கள்! நீங்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் எனக்கே அஞ்சுங்கள்! அல் குர்ஆன் (3 : 175).

நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வை அஞ்சுகின்ற விதத்தில் அஞ்சுங்கள்! நீங்கள் முஸ்லிம்களாகவே தவிர மரணிக்காதீர்கள்! அல்குர்ஆன் (3 : 102).

அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பி தொழுகையை நிலை நாட்டி ஸகாத்தும் கொடுத்து அல்லாஹ்வைத் தவிர எவருக்கும் அஞ்சாதிருப்போரே அல்லாஹ்வின் பள்ளிவாசல்களை நிர்வகிக்க வேண்டும். அவர்களே நேர் வழி பெற்றோராக முடியும். அல்குர்ஆன் (9 : 18).

அவரது சமுதாயத்தினர் அவரிடம் விவாதித்தனர். "அல்லாஹ் எனக்கு நேர்வழி காட்டிய நிலையில் அவனைப் பற்றி என்னிடம் விவாதிக்கிறீர்களா? நீங்கள் இணை கற்பித்தவற்றுக்கு அஞ்ச மாட்டேன். என் இறைவன் எதையே னும் நாடினாலன்றி (எனக்கு ஏதும் நேராது.) அவன் அறிவால் அனைத்துப் பொருட்களையும் சூழ்ந்திருக்கிறான். உணர மாட்டீர்களா?"

"அல்லாஹ் உங்களுக்கு எந்தச் சான்றையும் வழங்காதவற்றை அவனுக்கு இணை யாக்குவதற்கு நீங்கள் அஞ்சாத போது நீங்கள் இணை கற்பித்தவைகளுக்கு எவ்வாறு நான் அஞ்சுவேன்? நீங்கள் அறிந்தால் இரு கூட்டத்தினரில் அச்சமற்றிருக்க அதிகத் தகுதி படைத்தவர் யார்?" (என்றும் இப்ராஹீமு; கூறினார்.) அல்குர்ஆன் (6 : 80,81)

**அல்லாஹ்வை நேசிப்பது போல் மற்றவைகளை நேசிப்பது.**

இறை நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வை கடுமையாக நேசிக்க வேண்டும். யாரையும் நேசிக்காத அளவிற்கு நேசிக்க வேண்டும். துன்பம் வந்தாலும் இன்பம் வந்தாலும் அல்லாஹ் வையே நினைவு கூற வேண்டும்.

ஆனால் தரீக்காவாதிகளும் கப்ரு வணங்கிகளும் அல்லாஹ்வை மட்டும் நினைவு கூற வேண்டிய இடங்களில் நேரங்களில் முஹ்யித்தீனையும் அப்துல்காதர் ஜீலானியையும் நினைக்கிறார்கள்.

வீட்டுச் சுவர்களிலும் கடிதத்தை துவக்கும் போதும் யா முஹ்யித்தீன் யா ரசூலல்லாஹ் என்று எழுதுகிறார்கள். இதையே திக்ருகளாகக் கூறுபவர்களும் இருக்கிறார்கள்.

அல்லாஹ்வை நேசிப்பதை விட அடியார்களை இவர்கள் நேசிக்கிற காரணத்தினால் இப்படிப்பட்ட இழி செயல்களைச் செய்கிறார்கள். அல்லாஹ்வை நேசிக்கும் பாக்கியத்தை இழக்கிறார்கள். இது இணைவைப்பாகும்.

அல்லாஹ்வையன்றி பல கடவுள்களைக் கற்பனை செய்து, அல்லாஹ்வை விரும்புவது போல் அவர்களை விரும்புவோரும் மனிதர்களில் உள்ளனர். நம்பிக்கை கொண்டோர் (அவர்களை விட) அல்லாஹ்வை அதிகமாக நேசிப்பவர்கள். அநீதி இழைத்தோர் வேதனையைக் காணும் போது அனைத்து வல்லமையும் அல்லாஹ்வுக்கே என்பதையும், அல்லாஹ் கடுமையாகத் தண்டிப்பவன் என்பதையும் கண்டு கொள்வார்கள். அல்குர்ஆன் (2 : 165).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (மூன்று தன்மைகள் அமையப் பெறாத) எவரும் இறை நம்பிக்கையின் சுவையை உணர மாட்டார். (அவை:)

1. ஒருவரை நேசிப்பதானால் அல்லாஹ்வுக்காகவே நேசிப்பது.

2. இறை மறுப்பிலிருந்து அல்லாஹ் காப்பாற்றிய பின் மீண்டும் அதற்குத் திரும்புவதை நெருப்பில் வீசப்படுவதை வெறுப்பது போன்று வெறுத்தல்.

3. அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் மற்றெதையும் விட அவருக்கு அதிக நேசத்திற்குரியோராவது. அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி) . நூல் : புகாரி (6041).

### மவ்லூதுகளிலும் இணைவைப்புண்டு

அல்லாஹ் அல்லாதவர்களிடத்தில் உதவி கேட்பது, பாவமன்னிப்புக் கோருவது, நோயை நீக்குமாறு கூறுவது அல்லாஹ் அல்லாதவர்கள் மீது சத்தியம் செய்வது, மற்றவர்களுக்கு மறைவான ஞானம் உண்டு என்று நம்புவது இப்படி எல்லா இணைவைப்புக் காரியங்களுக்கும் மவ்லூத் என்ற குப்பையில் பல உதாரணங்களை கூறலாம்.

'அந்த அளவிற்கு ஒட்டுமொத்த இணைவைப்பின் தொகுப்பாக அந்தப் புத்தகம் இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட மோசமான நூலை வணக்கம் என்ற பெயரில் பலர் ஓதி வருகிறார்கள். உதாரணத்திற்காக இணைவைப்புள்ள சில வரிகளை மவ்லூதிலிருந்து இங்கே குறிப்பிடுகிறோம்.

### நபியவர்களிடத்தில் பாவமன்னிப்புக் கோரப்படுகிறது

اَلسَّلام عَلَيْكَ يَا مَاحِي الذُّنُوْب

பாவங்களை அழிப்பவரை நும் மீது ஸலாம்

اَلسَّلَامُ عَلَيْكَ يَا جَالِي الْكُرُوْبِ

கவலைகளை அகற்றுபவரே நும் மீது ஸலாம்

اَنْتَ غَفَّارُ الْخَطَايَا   وَالذُّنُوْبِ الْمُوْبِقَات

குற்றங்களை மன்னிப்பது தாங்களன்றோ அழிவேற் படுத்தும் பாவங்களை மன்னிப்பது தாங்களன்றோ

كَفِّرُوْا عَنِّيْ ذُنُوْبِيْ   وَاعْفُ لِيْ عَنْ سَيِّئَاتِ

என்னில் நிகழும் பெரும்பிழைகள் யாவையும் மன்னித் தருள்வீரே. சின்னஞ் சிறிய தீமைகளை சீராய் பொறுத்தருள் புரிபவரே.

### நபியவர்களிடத்தில் உதவி தேடப்படுகிறது

اِنِّيْ اِذَا مَسَنِّيْ ضَيْمٌ يُرَوِّعُنِيْ

اَقُوْلُ يَا سَيِّدَ السَّادَاتِ يَا سَنَدِيْ

என்னை நடுங்கச் செய்துவிடும் ஏதேனும் பேரிடர்கள் என்னைத் தீண்டும் வேளையில் இன்னுதவி கேட்டவனாய் அனைத்துலகத் தலைவர்களுக்கெல்லாம் அருந்தலைவர் ஆனவரே. இணையில்லா என்னிணைப்பே என்றுரைப்பேன் நிச்சயமாய்.

اَنْتَ حَقًّا غِيَاثُ الْخَلْقِ اَجْمَعِهِمْ

மெய்யாகப் படைப்புகளுக்கெல்லாம் மெய்க்காவல் தாங்கள் தான்.

فَاَنْجِدُوا الْمِسْكِيْنَ قَبْلَ الْغَرَقِ

நான் கவலையில் மூழ்குவதற்கு முன்னரே இந்த ஏழையைக் காப்பாற்றுங்கள்.

**நபியவர்கள் மீது சத்தியம் செய்யப்படுகிறது**

أَقْسَمْتُ فِيْ نَصْرِيْ بِكُمْ عَلَيْكُمْ

நபியே தாங்களைக் கொண்டு நான் உதவி பெறுவதில் உங்களின் மீது சத்தியம் செய்கிறேன்.

**நபியவர்கள் நோயை நீக்குவார்கள் என்று கூறப்படுகிறது**

اَلسَّلام عَلَيْكَ يَا مُبْرِى السَّقَامِ

நோய்களை குணமாக்குபவரே நும் மீது ஸலாம்.

**நபியவர்களுக்கு மறைவான ஞானம் உண்டு என்று கூறப்படுகிறது.**

عَالِمُ سِرٍّ وَأَخْفى  مُتْسَجِيْبُ الدَّعَوَاتِ

அகமிய ரகசியம் அறிபவரே ஆழிய மர்ம் அறிபவரே அகமுணர்ந்திரங்கும் இறைஞ்சல்களை அன்பாய் ஏற்றுக் கொள்பவரே.

சூடான நரகத்திற்கு அழைத்துச் செல்லும் சுப்ஹான மவ்லிதில் இடம்பெற்றுள்ள இணைவைப்பு வரிகள் தான் இவை. இன்னும் ஏராளம் இருக்கிறது. படுமோசமான இந்த இணைவைப்பை விட்டு அல்லாஹ் நம்மை காப்பானாக.

**வரம்பு மீறிப் புகழக்கூடாது**

மவ்லித் ஓதுபவர்கள் நபியவர்களை வரம்பு மீறிப் புகழந்து அல்லாஹ்விற்கு நிகராக அவர்களைக் கருதுகிறார்கள். இவ்வாறு வரம்பு மீறி புகழ்வது இணைவைப்பில் தள்ளிவிடும் என்பதால் நபி (ஸல்) அவர்கள் இதை தடை செய்துள்ளார்கள்.

மர்யமுடைய மகனை (ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை) கிறித்தவர்கள் வரம்பு மீறிப் புகழ்த்தைப் போன்று என்னை நீங்கள் வரம்பு மீறிப் புகழாதீர்கள்...! நிச்சயமாக நான் அவனின் அடிமையாக இருக்கிறேன். எனவே, (என்னை) அல்லாஹ்வின் அடியான் என்றும் அவன் தூதர் என்றும் கூறுங்கள்...! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: உமர் (ரலி). நூல்: புகாரீ (3445).

இணைவைப்பில்லாத வார்த்தைகளைக் கூறி நபித் தோழர்கள் நபி (ஸல்) அவர்களை புகழ்ந்த போது சைத்தானுடைய வழியான இணைவைப்பில் விழுந்து விடாதீர்கள் என்று நபியவர்கள் எச்சரிக்கை செய்தார்கள்.

நான் பனூ ஆமிர் கூட்டத்தாருடன் சேர்ந்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் சென்றோம். அப்போது நாங்கள் (அவர் களைப் பார்த்து) நீங்கள் தான் எங்களின் தலைவர் என்று கூறினோம். அதற்கு நபியவர்கள் உயர்ந்தோனும் பாக்கியமிக் கோனுமான அல்லாஹ்வே தலைவன் என்று கூறினார்கள். நீங்கள் தான் எங்களில் சிறந்தவரும் மதிப்பிற்குரியோருமாவீர் என்று நாங்கள் கூறினோம். அதற்கு நபி (ஸல்) அவர்கள் (வரம்பு கடக்காமல்) நீங்கள் கூறுவதை கூறிக் கொள்ளுங்கள். சைத்தான் தன்னுடைய வழியில் உங்களை நடக்க வைத்து விட வேண்டாம் என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் ஷஹீர் (ரலி). நூல் : அபூதாவுத் (4172).

மற்றொரு அறிவிப்பில் பின்வருமாறு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மக்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! ஷைத்தான் உங்களை வழிகெடுத்துவிட வேண்டாம். நான் அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது ஆவேன். அல்லாஹ்வின் அடிமையும் அவனது தூதரும் ஆவேன். மாண்பும் வலிமையும் மிக்க அல்லாஹ் என்னை எவ்விடத்தில் வைத்தானோ அந்த இடத்திற்கு மேலாக என்னை நீங்கள் உயர்த்துவதை நான் விரும்பவில்லை. அறிவிப்பவர் : அனஸ் (ரலி) . நூல் : அஹ்மது (12093).

**ஓதிப்பார்ப்பதில் இணைவைப்பு**

இணைவைப்பின் கூடாரமான தர்ஹாக்களுக்குச் சென்று பலர் ஓதிப் பார்க்கிறார்கள். சாதாரண கயிற்றுக்கும் தகட்டிற்கும் மகத்துவம் இருப்பதாக நினைத்து கட்டிக் கொள்கிறார்கள். இது வெல்லாம் இணைவைப்பாகும். அல்லாஹ்விற்கு இணைவைக்கா மல் மார்க்கம் காட்டித்தந்த அடிப்படையில் ஓதிப்பார்ப்பது தவறு கிடையாது.

நாங்கள் அறியாமைக் காலத்தில் ஓதிப் பார்த்து வந்தோம். எனவே (நபியவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! இது குறித்து தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?" என்று கேட்டோம். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (எங்களிடம்), "நீங்கள் ஓதிப் பார்ப்பதை என்னிடம் சொல்லிக் காட்டுங்கள். (இறைவனுக்கு) இணை கற்பித்தல் இல்லையானால் ஓதிப் பார்த்தலில் எந்தக் குற்றமும் இல்லை" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அவ்ஃப் பின் மாலிக் (ரலி). நூல் : முஸ்லிம் (4427).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : என் சமுதாயத்தாரில் எழுபதாயிரம் பேர் விசாரணை ஏதுமின்றி சொர்க்கம் செல்வார்கள். அவர்கள் யாரெனில், (தவறான அடிப்படையில்) ஓதிப்பார்க்க மாட்டார்கள். பறவை சகுனம் பார்க்க

மாட்டார்கள். தம் இறைவ(ன் மீது முழு நம்பிக்கை கொண்டு அவ)னையே சார்ந்திருப்பார்கள். அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி). நூல் : புகாரி (6472).

**தகடு தாயத்துகளைத் தொங்கவிடுவது இணைவைப்பாகும்**

குர்ஆன் வசனங்கள் எழுதப்பட்ட தாளை மடித்து தாவீஸாகத் தயாரித்து கழுத்திலும், கையிலும், இடுப்பிலும் பலர் மாட்டிக் கொள்கிறார்கள். குறிப்பிட்ட சில வார்த்தைகளைச் செம்புத் தகட்டில் எழுதி கடைகளில் தொங்க விடுகிறார்கள்.

என்னைப் பார் யோகம் வரும் என்று எழுதப்பட்ட கழுதை யின் படத்தை கடைகளில் தொங்க விட்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் தட்டில் எதையோ எழுதி கறைத்துக் குடிக்கிறார்கள்.

அல்லாஹ்வின் மீது வைக்க வேண்டிய நம்பிக்கையை கையிற்றின் மீதும் செம்புத் தட்டின் மீதும் தாளின் மீதும் வைத்து விடுவதால் இது இணைவைப்பாகும். நபி (ஸல்) அவர்கள் இதை தடை செய்துள்ளார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடத்தில் (பைஅத் செய்வதற்காக பத்து பேர் கொண்ட) சிறு கூட்டம் ஒன்று வந்தது. அவர்களில் ஒன்பது நபர்களிடம் நபி (ஸல்) அவர்கள் உறுதிமொழி வாங்கினார்கள். ஒருவரிடம் உறுதிமொழி வாங்கவில்லை. மக்கள் அல்லாஹ்வின் தூதரே ஒன்பது பேர்களிடத்தில் உறுதிமொழி வாங்கினீர்கள். இவரை விட்டு விட்டீர்களே என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் அவர் மீது தாயத்து உள்ளது என்று கூறினார்கள். அப்போது அந்த மனிதர் தன் கையை உள்ளே விட்டு அந்த தாயத்தைக் கழற்றினார். அவரிடத்தில் நபியவர்கள் பைஅத் செய்த பிறகு யார் தாயத்தைத் தொங்க விடுகிறானோ அவன் இணைவைத்து விட்டான் என்று கூறினார்கள். அறிவிப்பவர் : உக்பா பின் ஆமிர் (ரலி). நூல் : அஹ்மத் (16781)

நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதரின் கை புஜத்தில் மஞ்சள் நிற உலோகத்தால் ஆன வளயத்தைக் கண்டார்கள். உனக்கு என்ன ஆனது? இது வென்ன? என்று நபி (ஸல்) அவர்கள் (அவரிடம்) கேட்டார்கள். அதற்கு அவர் கை புஜத்தில் ஏற்பட்ட நோயின் காரணமாக (இதை அணிந்துள்ளேன்) என்று கூறினார். நபி (ஸல்) அவர்கள் (அவரிடம்) அறிந்து கொள். இது உனக்கு சிரமத்தைத் தவிர வேறெதையும் அதிகப்படுத்தாது. உன்னை விட்டு இது எரிந்துவிடு. இது உன்மீது இருக்கும் நிலையில் நீ மரணித்து விட்டால் ஒரு போதும் நீ வெற்றியடைய முடியாது என்று கூறினார்கள். அறிவிப்பவர் : இம்ரான் பின் ஹுசைன் (ரலி). நூல் : அஹ்மத் (19149).

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய பிரயாணம் ஒன்றில் அவர்களுடன் இருந்தேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தூதுவர் ஒருவரை அனுப்பி, "எந்த ஒட்டகத்தின் கழுத்திலும் (ஒட்டக வாரினால் ஆன, கண் திருஷ்டி கழிவதற்காகக் கட்டப்படுகின்ற) கயிற்று மாலையோ அல்லது (காற்று, கருப்பு விரட்டுவதற்காகக் கட்டப்படுகின்ற) வேறெந்த மாலையோ இருக்கக் கூடாது. அப்படியிருந்தால் கட்டாயம் அதைத் துண்டித்து விட வேண்டும்" என்று (பொது மக்களிடையே) அறிவிக்கச் செய்தார்கள். அறிவிப்பவர் : அபூ பஷீர் அல் அன்சாரீ (ரலி) . நூல் : புகாரி (3005).

**மார்க்கம் காட்டித்தராத முறையில் ஓதிப்பார்க்கக் கூடாது**

ஓதிப் பார்ப்பதற்கு நபி (ஸல்) அவர்களிடம் சிலர் அனுமதி கேட்ட போது ஓதிப் பார்க்கும் முறையைத் தன்னிடம் கூறுமாறு நபியவர்கள் கூறினார்கள். அதில் குறை ஏதும் இல்லை என்று அவர்கள் அங்கீகாரம் அளித்த பிறகே ஓதிப் பார்ப்பதற்கு அனுமதியளித்தார்கள்.

எனவே நம் இஷ்டத்திற்கு ஆதாரமில்லாம் மனதில் தோன்றியவாரெல்லாம் ஓதிப்பார்க்கக் கூடாது. எப்படி ஓதிப்பார்க்க வேண்டும் என்று மார்க்கம் கற்றுத் தந்துள்ளதோ அந்த அடிப்படையில் ஓதிப் பார்க்க வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஓதிப்பார்க்க வேண்டாமெனத் தடை விதித்தார்கள். அப்போது அம்ர் பின் ஹஸ்ம் குடும்பத்தார் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! தேள் கடிக்காக ஓதிப் பார்க்கும் வழக்கம் எங்களிடம் இருந்தது. (ஆனால்,) தாங்களோ ஓதிப் பார்க்க வேண்டாமெனத் தடை விதித்து விட்டீர்கள்!" என்று கூறினார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், அ(வர்கள் ஓதிப் பார்த்து வ)ந்த வாசகத்தைக் கூறுமாறு கேட்டார்கள். அவர்கள் அ(ந்த வாசகத்)தைக் கூறியபோது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நான் (இதில்) குறையெதையும் காணவில்லை. உங்களில் ஒருவரால் தம் சகோதரருக்குப் பயனளிக்க முடியுமானால் அவ்வாறே பயனளிக்கட்டும்!" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி). நூல் : முஸ்லிம் (4226).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (தவறான முறையில்) ஓதிப் பார்க்கிறவர் அல்லது சூடுபோட்டுக் கொள்பவர் (அல்லாஹ்வின் மீது) நம்பிக்கை வைப்பதை விட்டும் விலகி விட்டார். அறிவிப்பவர் : முஃகீரா பின் ஷுஃபா (ரலி). நூல் : திர்மிதி (1980)

**சூரத்துல் பாத்திஹாவை வைத்து ஓதிப் பார்க்கலாம்.**

நபி (ஸல்) அவர்களுடைய தோழர்களில் சிலர் (ஒரு பயணத்தின் போது) ஓர் அரபுக் குலத்தாரிடம் சென்றார்கள். அவர்களுக்கு அக்குலத்தார் விருந்தளிக்க முன்வரவில்லை. இந்நிலையில் அக்குலத்தாரின் தலைவனுக்குத் தேள் கொட்டி

விட்டது. அப்போது அக்குலத்தார் (நபித்தோழர்களிடம் வந்து) "உங்களிடம் (இதற்கு) மருந்து ஏதும் உள்ளதா? அல்லது ஓதிப் பார்ப்பவர் எவரும் இருக்கிறாரா?" என்று கேட்டனர். அதற்கு நபித்தோழர்கள், "நீங்கள் எங்களுக்கு விருந்தளிக்க முன்வர வில்லை. ஆகவே, நீங்கள் எங்களுக்கு (ஒரு) குறிப்பிட்ட கூலியைத் தந்தாலே தவிர (வெறுமனே) உங்களுக்கு நாங்கள் ஓதிப் பார்க்க மாட்டோம்" என்று கூறினர்.

உடனே, நபித் தோழர்களுக்காக அக்குலத்தார் (முப்பது ஆடுகள் கொண்ட) ஓர் ஆட்டு மந்தையைக் கூலியாக நிர்ணயித்தார்கள். நபித் தோழர்களில் ஒருவர் (எழுந்து சென்று) 'குர்ஆனின் அன்னை' எனப்படும் 'அல்ஃபாத்திஹா' அத்தியாயத்தை ஓதித் தமது எச்சிலைக் கூட்டி (கடிபட்ட இடத்தில்) உமிழ்ந்தார். உடனே அவர் வலி நீங்கி குணமடைந்தார். (பேசியபடி) அவர்கள் ஆடுகளைக் கொண்டு வந்(து கொடுத்)தனர். நபித்தோழர்கள், "நபி (ஸல்) அவர்களிடம் (அனுமதி) கேட்காத வரை இதை நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது" என்று (தமக்குள்) பேசிக்கொண்டு அவ்வாறே நபி (ஸல்) அவர்கபடம் (வந்து அனுமதி) கேட்டனர். நபி (ஸல்) அவர்கள் சிரித்துவிட்டு 'அல் ஃபாத்திஹா' அத்தியாயம் ஓதிப் பார்க்கத் தகுந்தது என்று உமக்கு எப்படித் தெரியும்? அந்த ஆடுகளை எடுத்துக் கொள்ளுங்கள்; எனக்கும் அதில் ஒரு பங்கு கொடுங்கள்" என்று சொன்னார்கள். அறிவிப்பவர் : அபூசயீத் அல்குத்ரீ (ரலி) .நூல் : புகாரி (5736).

**112, 113, 114 ஆகிய அத்தியாயங்களை ஓதி ஊதலாம்**

நபி (ஸல்) அவர்கள் தமது படுக்கைக்கு (உறங்கச்) சென்றால் ஒவ்வோர் இரவிலும் தமது உள்ளங்கைகளை இணைத்து, அதில் 'குல் ஹுவல்லாஹு அஹத்', 'குல் அஊது பிரப்பில் ஃபலக்', 'குல் அஊது பிரப்பின்னாஸ்' ஆகிய (112, 113, 114) அத்தியாயங்களை ஓதி ஊதிக் கொள்வார்கள். பிறகு தம் இரு கைகளால் (அவை

எட்டும் அளவிற்கு) தமது உடலில் இயன்ற வரையில் தடவிக் கொள்வார் கள். முதலில் தலையில் ஆரம்பித்து, பிறகு முகம், பிறகு தம் உடலின் முற்பகுதியில் கைகளால் தடவிக் கொள்வார்கள். இவ்வாறு மூன்று முறை செய்வார்கள். அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி). நூல் : புகாரி (5017).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்டு விட்டால் பாதுகாப்புக் கோரும் வசனங்களை(க் கொண்ட குர்ஆனின் கடைசி மூன்று அத்தியாயங்களை) ஓதித் தம் மீது ஊதி, தமது கையை (தம் உடல் மீது) தடவிக் கொள்வார்கள். நபி (ஸல்) அவர்கள் எந்த நோயில் இறந்து போனார்களோ அந்த நோயின் போது, அவர்கள் (ஓதி) ஊதிக் கொள்ளும் பாதுகாப்பு வசனங்களை நான் அவர்கள் மீது (ஓதி) ஊதலானேன். அதை நபி (ஸல்) அவர்களின் (கையில் ஊதி அந்தக்) கையாலேயே அவர்களின் (உடல்) மீது தடவலானேன். அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி) .நூல் : புகாரி (4439).

**நபியவர்கள் கற்றுக்கொடுத்த பிரார்த்தனைகளை வைத்து...**

நோயாளி குணமாவதற்காக செய்ய வேண்டிய பிரார்த்தனையை நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள். குழந்தைகள் நோயுறும் போது அவற்றை நாம் ஓதிக் கொள்ள வேண்டும்.

நானும் ஸாபித் பின் அஸ்லம் அல்புனானீ (ரஹ்) அவர்களும் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களிடம் சென்றோம். ஸாபித் (ரஹ்) அவர்கள் "அபூஹம்ஸாவே! நான் நோய் வாய்ப்பட்டுள்ளேன்" என்று சொல்ல, அனஸ் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எதனால் ஓதிப் பார்த்தார்களோ அதனால் உங்களுக்கும் நான் ஓதிப் பார்க்கட்டுமா?" என்று கேட்டார்கள். ஸாபித் (ரஹ்), "சரி (அவ்வாறே ஓதிப் பாருங்கள்)" என்று சொல்ல, அனஸ் (ரலி)

அவர்கள், "அல்லாஹும்ம ரப்பன்னாஸ்! முத்ஹிபல் பஃஸி, இஷ்ஃபி அன்த்தஷ் ஷாஃபீ, லா ஷாஃபிய இல்லா அன்த்த, ஷிஃபாஅன் லா யுஃகாதிரு சகமன்' என்று கூறி ஓதிப் பார்த்தார்கள்.

(பொருள்: இறைவா! மக்களை இரட்சிப்பவனே! துன்பத்தைப் போக்குபவனே! குணமளிப்பாயாக! நீயே குணமளிப்பவன். உன்னைத் தவிர குணமளிப்பவர் வேறு எவருமில்லை. அறவே நோய் இல்லாதவாறு குணமளிப்பாயாக.) .அறிவிப்பவர் : அப்துல் அஸீஸ் பின் ஸுஹைப் (ரஹ்). நூல் : புகாரி (5742).

உஸ்மான் பின் அபில் ஆஸ் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து (அல்லாஹ்வின் தூதரே) என்னை அழிக்கின்ற அளவிற்கு எனக்கு வலி ஏற்பட்டுள்ளது என்று கூறினார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (வலி ஏற்பட்ட இடத்தில்) ஏழு முறை தடவி அவூது பிஇஸ்ஸதில்லாஹி வகுத்ரதிஹீ மின் ஷர்ரீ மா அஜிது என்று கூறு என்று சொன்னார்கள்.

பொருள் : அல்லாஹ்வின் கண்ணியத்தின் பொருட்டாலும் அவனது ஆற்றலின் பொருட்டாலும் நான் அடைந்த தீங்கிலிருந்து (அவனிடம்) பாதுகாப்புத் தேடுகிறேன்.

நான் இவ்வாறு கூறினேன். எனக்கிருந்த வலியை அல்லாஹ் போக்கினான். எனது குடும்பத்தார்களுக்கும் மற்றவர்களுக்கும் இவ்வாறு செய்யுமாறு நான் ஏவிக் கொண்டே இருக்கிறேன். அறிவிப்பவர் : உஸ்மான் பின் அபில் ஆஸ் (ரலி). நூல் : மாலிக் (1479).

**பிறர் பார்க்க வேண்டும் என்பதற்காக வணக்கங்களைப் புரிவது இணைவைப்பாகும்**

பிறர் பார்க்க வேண்டும் என்பதற்காக நல்ல காரியங்களைப் புரிவதும் இணைவைப்பாகும். ஆனால் இது சிறிய இணைவைப்பு

என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே இதையும் நாம் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

எனது சமூகத்தார் விஷயத்தில் இணைவைப்பை நான் அஞ்சுகிறேன் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரே உங்களுக்குப் பிறகு உங்கள் கூட்டத்தார்கள் இணைவைப்பார்களா? என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம். இவர்கள் சூரியனையோ சந்திரனையோ கல்லையோ சிலையையோ வணங்க மாட்டார்கள். மாறாக (பிறருக்கு) காட்டுவதற்காக நற்காரியங்களைப் புரிவார்கள். (இதுவும் சிறிய இணைவைப்பாகும்) என்று கூறினார்கள். அறிவிப்பவர் : ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி). நூல் : அஹ்மத் (16498).

உங்கள் விஷயத்தில் நான் மிகவும் அஞ்சுவது சிறிய இணைவைப்பைத் தான் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது மக்கள் சிறிய இணைவைப்பு என்றால் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் அது தான் முகஸ்துதி. மறுமை நாளில் மக்களுடைய செயல்பாடுகளுக்கு கூலி கொடுக்கப்படும் போது இந்த உலகத்தில் யாருக்காக நீங்கள் நற்காரியங்களைச் செய்தீர்களோ அவர்களிடம் செல்லுங்கள். உங்களுக்குக் கூலி அவர்களிடம் உள்ளதா என்று பாருங்கள் என்று சங்கையும் மகத்துவமும் மிக்க அல்லாஹ் கூறுவான் என்று சொன்னார்கள். அறிவிப்பவர் ; மஹ்மூத் பின் லபீத் (ரலி). நூல் : அஹ்மத் (22523).

**பெயரில் இணைவைப்பு இருக்கக் கூடாது**

அல்லாஹ்வுடைய தன்மையைக் குறிக்கும் பெயர்களைச் சூட்டுவது கூடாது. இன்று வழக்கில் ஷா ஆலம் (பிரபஞ்சத்தின் அரசன்) ஷாஜஹான் (உலகின் அரசன்) ஷாகுல் ஹமீது புகழுக்குரியவனின் அரசன் ஆகிய பெயர்கள் சூட்டப்படுகின்றன.

இவற்றில் இணைவைப்பு கலந்திருப்பதால் இப்பெயர்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பெயர் சூட்டும் போது அதன் பொருளில் இணைவைப்பு ஏதேனும் தென்படுகிறதா என்று கவனித்துச் சூட்ட வேண்டும். இதை பின்வரும் ஹதீஸ்களிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

மறுமை நாளில் அல்லாஹ்விடத்தில் மிக வெறுப்பிற்குரிய பெயரைக் கொண்டவன் மலிகுல் அம்லாக் (அரசர்களுக்கெல்லாம் அரசன்) என்ற பெயருடையவனாவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹு,ரைரா (ரலி). நூல் : புகாரி (6205).

மக்கள் ஹானிஃ (என்ற நபித் தோழரை) அபுல் ஹகம் (ஞான மிக்கோனின் தந்தை) என்று குறிப்புப் பெயரால் அழைத்தார்கள். அவர் நபி (ஸல்) அவர்களிடம் வருகை தந்த போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவரை அழைத்து அல்லாஹ்வே ஞானமிக் கவன். அவனிடமே சட்டமியற்றும் அதிகாரம் உள்ளது. அவ்வாறி ருக்க நீர் ஏன் ஞானமிக்கவனின் தந்தை என குறிப்புப் பெயர் வைக்கப்பட்டுள்ளீர் என்று அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் என்னுடைய சமுதாயம் ஏதேனும் ஒரு விஷயத்தில் பிணங்கிக் கொண்டால் என்னிடம் (தீர்ப்பு கேட்டு) வருவார்கள். அவர்களுக்கு (நல்ல) தீர்ப்பை வழங்குவேன். இரு கூட்டத்தாரும் (அதில்) திருப்தி அடைந்து கொள்வார்கள். (ஆகையால் இப்பெயரை எனது சமுதாயம் எனக்கு வைத்தது) என்று அவர் கூறினார். நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு தீர்ப்பு வழங்குவது எவ்வளவு சிறந்தது என்று கூறிவிட்டு உமக்கு எத்தனை குழந்தைகள் உள்ளனர் என்று கேட்டார்கள். அவர் ஷ, ரைஹ், அப்துல்லாஹ், முஸ்லிம் ஆகியோர் உள்ளனர் என்று கூறினார். இவர்களில் மூத்தவர் யார் என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டதற்கு ஷ,ரைஹ் என்று கூறினார். அப்படியா னால் நீர் அபூ

ஷ,ரைஹ் (ஷ,ரைஹின் தந்தை) ஆகும் எனக் கூறி விட்டு அவருக்காகவும், அவரது குழந்தைக்காகவும் பிரார்த்தனை புரிந்தார்கள். அறிவிப்பவர் : ஹானிஃ (ரலி). நூல் : நஸயீ (5292).

அறியாமைக் காலத்தில் என்னுடைய தந்தையின் பெயர் அஸீஸ் (மிகைத்தவர்) என்று இருந்தது. நபி (ஸல்) அவர்கள் அவர்களுக்கு அப்துர் ரஹ்மான் (அளவற்ற அருளாளனின் அடிமை) என்று (மாற்றி) பெயர் வைத்தார்கள். அறிவிப்பர் : அப்துர் ரஹ்மான் (ரலி). நூல் : அஹ்மத் (16944).

## இணைவைப்பில் விழுவதற்கான காரணங்கள்

தவறான கற்பனைகளாலும் அவசியம் அறிய வேண்டிய விஷயங்களை அறியாததாலும் அதிகமான மக்கள் இணை வைப்பில் விழுந்து கிடக்கிறார்கள். எனவே இணைவைப்பதற்கு அடிப்படைக் காரணமாக உள்ள விஷயங்களில் உண்மை நிலையை இவர்கள் அறிந்து கொண்டால் ஒருபோதும் இணைவைக்க மாட்டார்கள்.

**அல்லாஹ்வின் வல்லமையைப் புரியாமல் இருத்தல்**

அல்லாஹ் என்றால் யார். அவனுடைய ஆற்றல் எத்தகையது. அவனுடைய அதிகாரம் எத்தகையது என்பதையெல்லாம் பலர் அறியாமல் இருக்கிறார்கள். அல்லாஹ்வின் பண்புகளையும், சக்தியையும் புரிந்து கொண்டால் அவனை விட்டுவிட்டு வேறு யாரிடமும் இவர்கள் கையேந்த மாட்டார்கள்.

பின்வரும் ஆதாரங்கள் அல்லாஹ்வின் மகத்துவத்தைத் தெளிவாக விளக்குகிறது.

"உங்கள் செவிப்புலனையும், பார்வைகளையும் அல்லாஹ் நீக்கி விட்டு, உங்கள் உள்ளங்கள் மீது முத்திரையிட்டால் அதைக் கொண்டு வருகின்ற அல்லாஹ் அல்லாத (வேறு) கடவுள் யாரேனும் உண்டா? என்பதற்குப் பதில் சொல்லுங்கள்!" எனக்

கேட்பீராக! சான்றுகளை எவ்வாறு விளக்குகிறோம் என்பதையும், பின்னர் அவர்கள் எவ்வாறு புறக்கணிக்கின்றனர் என்பதையும் கவனிப்பீராக! அல்குர்ஆன் (6 : 46).

"அல்லாஹ் எனக்கு ஒரு தீங்கை நாடி விட்டால் அவனது தீங்கை அவர்கள் நீக்கி விடுவார்களா? அல்லது அவன் எனக்கு அருளை நாடினால் அவர்கள் அவனது அருளைத் தடுக்கக் கூடியவர்களா? அல்லாஹ் எனக்குப் போதும். சார்ந்திருப்போர் அவனையே சார்ந்திருப்பார்கள்" என்று கூறுவீராக! அல்குர்ஆன் (39 : 38).

நிச்சயமாக (இந்த) சமுதாயம் உனக்கு நன்மை செய்வதற்காக ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் உனக்கு எதை விதியாக்கி விட்டானோ அதைத் தவிர வேறெதனாலும் அவர்கள் உனக்கு நன்மை செய்துவிட முடியாது. அவர்கள் உனக்கு தீங்கு செய்வதற்காக ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் உனக்கு எந்தத் தீங்கை விதியாக்கி விட்டானோ அதைத் தவிர வேறெதனாலும் அவர்கள் உனக்கு தீங்கு செய்து விட முடியாது. எழுதுகோல்கள் உயர்த்தப்பட்டு விட்டன. ஏடுகள் காய்ந்து விட்டன என்று நபி (ஸல்) அவர்கள் (என்னிடம்) கூறினார்கள். அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி). நூல் : திர்மிதி (2440).

'நபி (ஸல்) அவர்கள் கடமையான ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் லாயிலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு, லா ஷரீக்க லஹு, லஹுல் முல்(க்)கு, வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். அல்லாஹும்ம! லா மானிஅ லிமா அஉதைத்த, வலா முஉத்திய லிமா மனஉத்த, வலா யன்ஃபஉ தல்ஜத்தி மின்கல் ஜத் என்று கூறுவார்கள்.

பொருள் : அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை. அவன் ஏகன். அவனுக்கு நிகர் எவருமில்லை (எதுவுல்லை). ஆட்சியதிகாரம் அவனுக்குரியது. புகழனைத்தும் அவனுக்கே

உரியன. அவன் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன். இறைவா! நீ கொடுப்பதைத் தடுப்பவன் இல்லை. நீ தடுத்ததை கொடுப்பவன் இல்லை. எச்செல்வம் உடையவருக்கும் அவரது செல்வம் உன்னிடம் எந்தப் பயனுமளிக்க முடியாது. அறிவிப்பவர் : முஃகீரா (ரலி). நூல் : புகாரி (844).

நபி (ஸல்) அவர்கள் வளமும் உயர்வும் மிக்க அல்லாஹ் பின்வருமாறு கூறியதாக அறிவித்தார்கள்: என் அடியார்களே! அநீதியிழைப்பதை எனக்கு நானே தடை செய்து கொண்டேன். அதை உங்களிடையேயும் தடை செய்யப்பட்டதாக ஆக்கிவிட்டேன். ஆகவே, நீங்கள் ஒருவருக்கொருவர் அநீதியிழைக்காதீர்கள்.

என் அடியார்களே! உங்களில் யாரை நான் நல்வழியில் செலுத்தினேனோ அவர்களைத் தவிர மற்ற அனைவரும் வழிதவறியவர்களே. ஆகவே, என்னிடமே நல்வழியில் செலுத்து மாறு கேளுங்கள். உங்களை நான் நல்வழியில் செலுத்துவேன்.

என் அடியார்களே! உங்களில் யாருக்கு நான் உணவளித் துள்ளேனோ அவர்களைத் தவிர மற்ற அனைவரும் பசித்திருப் பவர்களே. ஆகவே, என்னிடமே உணவாதாரத்தைக் கேளுங்கள். நான் உங்களுக்கு உணவளிக்கிறேன்.

என் அடியார்களே! உங்களில் யாருக்கு நான் ஆடையணிவித் துள்ளேனோ அவர்களைத் தவிர மற்ற அனைவரும் நிர்வாணமான வர்களே. ஆகவே, என்னிடமே ஆடை கேளுங்கள். நான் உங்களுக்கு ஆடையணிவிக்கிறேன்.

என் அடியார்களே! நீங்கள் இரவிலும் பகலிலும் பாவம் செய்கிறீர்கள். நான் அனைத்துப் பாவங்களையும் மன்னித்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே, என்னிடமே பாவமன்னிப்புக் கோருங்கள். நான் உங்கள் பாவங்களை மன்னிக்கிறேன்.

என் அடியார்களே! உங்களால் எனக்கு எவ்விதத் தீங்கும் அளிக்க முடியாது; மேலும், உங்களால் எனக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாது. என் அடியார்களே! உங்களில் முற்காலத்தார், பிற்காலத்தார், மனிதர்கள், ஜின்கள் ஆகிய அனைவரும் உங்களில் மிகவும் இறையச்சமுடைய ஒரு மனிதரைப் போன்று மாறி விட்டாலும் அது எனது ஆட்சியில் எதையும் அதிகமாக்கி விடுவதில்லை.

என் அடியார்களே! உங்களில் முற்காலத்தார், பிற்காலத்தார், மனிதர்கள், ஜின்கள் ஆகிய அனைவரும் மிகவும் தீய மனிதர் ஒருவரைப் போன்று மாறிவிட்டாலும் அது எனது ஆட்சியில் எதையும் குறைத்து விடப் போவதில்லை.

என் அடியார்களே! உங்களில் முற்காலத்தார், பிற்காலத்தார், மனிதர்கள், ஜின்கள் ஆகிய அனைவரும் சேர்ந்து ஒரே திறந்த வெளியில் நின்று என்னிடத்தில் (தத்தம் தேவைகளைக்) கோரினாலும் ஒவ்வொரு மனிதருக்கும் அவர் கேட்பதை நான் கொடுப்பேன். அது என்னிடத்தில் இருப்பவற்றில் எதையும் குறைத்துவிடுவதில்லை; கடலில் நுழை(த்து எடு)க்கப்பட்ட ஊசி (தண்ணீரைக்) குறைப்பதைப் போன்றே தவிர (குறைக்காது)!

என் அடியார்களே! நீங்கள் செய்துவரும் நல்லறங்களை நான் உங்களுக்காக எண்ணிக் கணக்கிடுகிறேன். பிறகு அதன் நற்பலனை நான் முழுமையாக வழங்குவேன். நல்லதைக் கண்டவர் அல்லாஹ்வைப் போற்றிப் புகழட்டும். அல்லதைக் கண்டவர் தம்மையே நொந்து கொள்ளட்டும்! அறிவிப்பவர் : அபூதர் (ரலி). நூல் : முஸ்லிம் (5033).

**அல்லாஹ்வின் அருளை விட்டு நிராசையடைதல்**

பாவம் செய்பவர்களால் அல்லாஹ்வை நெருங்க முடியாது என்ற நம்பிக்கையால் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதை விட்டுவிட்டு மற்றவர்களிடம் கையேந்துகிறார்கள். இவர்கள்

மகான்கள் என்று யாரைக் கருதுகிறார்களோ அவர்கள் அல்லாஹ்வை விட கருணை மிகுந்தவர்கள் இரக்க குணம் கொண்டவர்கள் என்ற நம்பிக்கையே இவர்களை இணைவைப்பில் தள்ளுகிறது.

அல்லாஹ்வின் அளவற்ற கருணையைப் புரிந்து கொண்டால் எவ்வளவு பாவம் செய்தாலும் அவனிடமே பிரார்த்தனை செய்வதை விட்டுவிட மாட்டார்கள். அவனைத் தவிர்த்து மற்றவர்களிடம் செல்வதற்கு இவர்களின் மனம் இடம் தராது.

அல்லாஹ்வின் கருணை தனக்குக் கிடைக்காது என்று நினைப்பது பாவமாகும். எவ்வளவு பாவங்கள் செய்தாலும் அதை அல்லாஹ் மன்னிப்பான் என்று நினைத்து திருந்தி வாழ முயற்சி செய்ய வேண்டும்.

"என் மக்களே! நீங்கள் சென்று யூஸுஃபையும், அவரது சகோதரரையும் நன்றாகத் தேடுங்கள்! அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழக்காதீர்கள்! (ஏக இறைவனை) மறுக்கும் கூட்டத்தைத் தவிர வேறு எவரும் அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழக்க மாட்டார்கள்" என்றார். அல்குர்ஆன் (12 : 87).

"வழி கெட்டவர்களைத் தவிர வேறு யார் தமது இறைவனின் அருளில் நம்பிக்கை இழக்க முடியும்?" என்று அவர் கேட்டார். அல்குர்ஆன் (15 : 56).

தமக்கு எதிராக வரம்பு மீறிய எனது அடியார்களே! அல்லாஹ் வின் அருளில் நம்பிக்கையிழந்து விடாதீர்கள்! அல்லாஹ் பாவங் கள் அனைத்தையும் மன்னிப்பான். அவன் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன் என்று (அல்லாஹ் கூறுவதைத்) தெரிவிப்பீராக! அல்குர்ஆன் (39 : 53).

இவர்கள் யாரிடம் பிரார்த்திக்கிறார்களோ அவர்களில் (இறைவனுக்கு) மிகவும் நெருக்கமானவர்களே தமது இறைவனை

நோக்கி வஸீலாவைத் தேடுகின்றனர். அவனது அருளை எதிர்பார்க்கின்றனர். அவனது வேதனைக்கு அஞ்சுகின்றனர். உமது இறைவனின் வேதனை அச்சப்பட வேண்டியதாகும். அல்குர்ஆன் (17 : 57).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அன்பின் நூறு பாகங் களும் அல்லாஹ்வுக்கே உரியவையாகும். அவற்றில் ஒன்றை ஜின், மனிதன், மிருகங்கள், ஊர்வன ஆகியவற்றுக்கிடையே இறக்கினான். இந்த ஒரு பங்கினால் தான் அவை ஒன்றன் மீதொன்று பாசம் கொள்கின்றன; பரிவு காட்டுகின்றன. அதன் மூலம் தான் காட்டு விலங்கு கூட தன் குட்டி மீது பாசம் காட்டுகிறது. (அவற்றில்) தொண்ணூற்று ஒன்பது பாகம் அன்பை அல்லாஹ் ஒதுக்கி வைத்துள்ளான். அவற்றின் மூலம் மறுமை நாளில் தன் அடியார் களுக்கு (விஷேசமாக) அன்பு காட்டுவான். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : முஸ்லிம் (4812).

**பாவிகளால் இறைவனை நெருங்க முடியாதா?**

பெரிய அந்தஸ்த்தில் உள்ள மனிதரை நேரடியாக நெருங்க முடியாது. அவருக்கு நெருக்கமான மனிதரை அனுகி அதன் பிறகு அவரை நெருங்க முடியும். இறைவனை நெருங்குவதாக இருந்தால் இப்படித் தான் நெருங்க முடியும். எனவேதான்இறைவனுக்கு நெருக்கமான மகான்களிடத்தில் முதலில் தொடர்பு கொள்கிறோம் என்று இணைவைப்பவர்கள் வாதத்தை எடுத்து வைக்கிறார்கள்.

இவர்கள் கூறுவது மனிதர்களுக்கு வேண்டுமானால் பொருந்தலாம். ஆனால் அல்லாஹ்விற்கு அறவே பொருந்தாது. ஏனென்றால் அல்லாஹ் நமக்கு அருகில் நெருக்கமாக இருக்கிறான். நேரடியாகத் தன்னிடம் வேண்டுமாறு கட்டளையிடுகிறான். இடைத் தரகர்களை ஏற்படுத்துவதைக் கண்டிக்கிறான்.

பதவியில் உள்ளவர்களுக்கு நம்மைப் பற்றி தெரியாத காரணத்தினால் அறிமுகப்படுத்துவதற்கு ஒரு ஆள் தேவை. நம்மைப் பற்றி யாரும் அறிய முடியாத அளவிற்கு துல்லியமாக அறிந்துள்ள இறைவனிடம் நம்மைப் பற்றி அறிமுகப்படுத்துவதற்கு யாரும் தேவையில்லை. எனவே நேரடியாகவே அவனிடம் கேட்க வேண்டும்.

"என்னை அழையுங்கள்! உங்களுக்குப் பதிலளிக்கிறேன்; எனது வணக்கத்தை விட்டும் பெருமையடிப்போர் நரகத்தில் இழிந்தோராக நுழைவார்கள்" என்று உங்கள் இறைவன் கூறுகிறான். அல்குர்ஆன் (40 : 60).

என்னைப் பற்றி எனது அடியார்கள் உம்மிடம் கேட்டால் "நான் அருகில் இருக்கிறேன். பிரார்த்திப்பவன் என்னைப் பிரார்த்திக்கும் போது பிரார்த்தனைக்குப் பதிலளிக்கிறேன். எனவே என்னிடமே பிரர்த்தனை செய்யட்டும்! என்னையே நம்பட்டும். இதனால் அவர்கள் நேர் வழி பெறுவார்கள்" (என்பதைக் கூறுவீராக!) அல்குர்ஆன் (2 : 186).

**இடைத் தரகர்களை ஏற்படுத்தியதால் மக்கத்துக் காஃபிர்கள் வழிகெட்டார்கள்.**

அல்லாஹ்விடத்தில் நம்மால் நேரடியாக தொடர்பு கொள்ள முடியாது என்ற இதே நம்பிக்கையால் தான் மக்கத்து காஃபிர்கள் இடைத் தரகர்களை ஏற்படுத்தினார்கள். இணைவைப்பாளர்களாக மாறினார்கள். இதை அல்லாஹ் தவறு என்று திருக்குர்ஆனில் கூறுகிறான்.

கவனத்தில் கொள்க! தூய இம்மார்க்கம் அல்லாஹ்வுக்கே உரியது. அவனையன்றி பாதுகாவலர்களை ஏற்படுத்திக் கொண்டோர் "அல்லாஹ்விடம் எங்களை மிகவும் நெருக்கமாக்கு வார்கள் என்பதற்காகவே தவிர இவர்களை வணங்கவில்லை" (என்று கூறுகின்றனர்). அவர்கள் முரண்பட்டது பற்றி அவர்க

ளிடையே அல்லாஹ் தீர்ப்பளிப்பான். (தன்னை) மறுக்கும் பொய்யனுக்கு அல்லாஹ் நேர் வழி காட்ட மாட்டான். அல்குர்ஆன் (39 : 3).

அல்லாஹ்வையன்றி அவர்களுக்கு தீமையும், நன்மையும் செய்யாதவற்றை வணங்குகின்றனர். "அவர்கள் அல்லாஹ்விடம் எங்களுக்குப் பரிந்துரை செய்பவர்கள்" என்றும் கூறுகின்றனர். "வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ்வுக்குத் தெரியாததை அவனுக்குச் சொல்லிக் கொடுக்கிறீர்களா? அவன் தூயவன். அவர்கள் இணை கற்பிப்பதை விட்டும் உயர்ந்தவன்" என்று கூறுவீராக! அல்குர்ஆன் (10 : 18)

தெய்வங்கள் என்று நீங்கள் கருதிக் கொண்டிருந்த, உங்கள் பரிந்துரையாளர்களை நாம் உங்களுடன் காணவில்லையே? உங்களுக்கிடையே (உறவுகள்) முறிந்து விட்டன. நீங்கள் கற்பனை செய்தவை உங்களை விட்டும் மறைந்து விட்டன" (என்று கூறப்படும்.) அல்குர்ஆன் (6 : 94)

**மறுமையில் மகான்கள் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை**

இறந்துபோன நல்லடியார்களிடத்தில் பிரார்த்தனை செய்தால் மறுமையில் நம்மைக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையும் இணைவைப்பிற்குக் காரணமாக அமைந்துள்ளது. இப்படி ஆதாரமில்லாத சொந்தக் கற்பனைகளால் தான் பலர் வழிகெட்டுப் போகிறார்கள்.

கவனத்தில் கொள்க! வானங்களிலும், பூமியிலும் இருப்போர் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். அல்லாஹ்வையன்றி தெய்வங் களை அழைப்போர் எதைப் பின்பற்றுகின்றனர்? அவர்கள் ஊகத்தையே பின்பற்றுகின்றனர். அவர்கள் கற்பனை செய்வோரா கவே உள்ளனர். அல்குர்ஆன் (10 : 66).

எந்த ஒருவரையும் மகான் என்று நம்மால் முடிவு செய்ய முடியாது. அல்லாஹ்வுடைய நேசர்கள் யார் என்பதை அல்லாஹ்

மட்டுமே அறிவான். ஒரு பேச்சிற்கு இறந்து போனவர் இறைநேசர் தான் என்று வைத்துக் கொண்டாலும் மறுமையில் அவர் நம்மைக் காப்பாற்ற மாட்டார்.

இறை நேசரான ஈஸா (அலை) அவர்களிடம் பிரார்த்தித்தவர் களுக்கு ஈஸா (அலை) அவர்களால் மறுமையில் எந்த நன்மையும் செய்ய முடியாது. இறைவனின் தண்டனையிலிருந்து காப்பாற்ற வும் முடியாது.

இணைவைப்பு என்ற மாபாதகச் செயலை செய்துவிட்டதால் இவர்களுக்காகப் பரிந்து கூட இறைவனிடம் ஈஸா (அலை) அவர்கள் பேச மாட்டார்கள்.

"நீ எனக்குக் கட்டளையிட்ட படி 'எனது இறைவனும், உங்கள் இறைவனுமாகிய அல்லாஹ்வை வணங்குங்கள்!' என்பதைத் தவிர வேறு எதையும் நான் அவர்களிடம் கூறவில்லை. நான் அவர்களுடன் இருக்கும் போது அவர்களைக் கண்காணிப் பவனாக இருந்தேன். என்னை நீ கைப்பற்றியதும் நீயே அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தாய். நீ அனைத்துப் பொருட்களையும் கண்காணிப்பவன்." அல்குர்ஆன் (5 : 117).

காப்பாற்றுவார்கள் என்று இவர்கள் யாரை நினைத்தார்களோ அவர்கள் மறுமையில் கைகழுவி விடுவார்கள் என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

நீங்கள் அவர்களை அழைத்தால் உங்கள் அழைப்பை அவர்கள் செவியுற மாட்டார்கள். செவியேற்றார்கள் என்று வைத்துக் கொண்டாலும் உங்களுக்குப் பதில் தரமாட்டார்கள். கியாமத் நாளில் நீங்கள் இணை கற்பித்ததை அவர்கள் மறுத்து விடுவார்கள். நன்கறிந்தவனைப் போல் உமக்கு எவரும் அறிவிக்க முடியாது. அல்குர்ஆன் (35 : 14).

அவர்களையும், அல்லாஹ்வையன்றி அவர்கள் வணங்கிய வற்றையும் அவன் ஒன்று திரட்டும் நாளில் "எனது அடியார்களை

நீங்கள் தான் வழி கெடுத்தீர்களா? அவர்களாக வழி கெட்டார்களா?" என்று கேட்பான்.

"நீ தூயவன் உன்னையன்றி உற்ற நண்பர்களை ஏற்படுத்துவது எங்களுக்குத் தகாது. நீ அவர்களுக்கும், அவர்களின் முன்னோர்களுக்கும் வசதிகளை அளித்தாய். (உன்னை) நினைக்க மறந்தனர். அழிந்து போகும் கூட்டமாக ஆகி விட்டனர்" என்று அவர்கள் கூறுவார்கள்.

நீங்கள் கூறுவதை அவர்கள் பொய்யெனக் கருதினார்கள். தடுக்கவோ, உதவவோ உங்களுக்கு இயலாது. உங்களில் அநீதி இழைத்தோருக்குப் பெரிய வேதனையை சுவைக்கச் செய்வோம். அல்குர்ஆன் (25 : 17.18.19)

அல்லாஹ்வையன்றி நீங்கள் இணைகற்பித்தவை எங்கே என்று பின்னர் அவர்களிடம் கேட்கப்படும். "எங்களை விட்டும் மறைந்து விட்டன. இல்லை! இதற்கு முன் எதையும் நாங்கள் பிரார்த்தித்துக் கொண்டிருக்கவில்லை" என்று அவர்கள் கூறுவார்கள். இவ்வாறே (தன்னை) மறுப்போரை அல்லாஹ் வழி கேட்டில் விடுகிறான். அல்குர்ஆன் (40 : 7374 ,).

நபி (ஸல்) அவர்களின் தோழர்களாக இருந்த சிலர் மறுமையில் நரகத்திற்கு இழுத்துச் செல்லப்படும் போது அவர்களை நபியவர்களால் காக்க முடியாது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (மறுமை நாளில்) என் தோழர்களில் சிலர் இடப்பக்கம் (நரகத்தை நோக்கி) கொண்டு செல்லப்படுவார்கள். நான், "இவர்கள் என் தோழர்கள். இவர்கள் என் தோழர்கள்" என்று (அவர்களை விட்டுவிடும்படி) கூறுவேன். அப்போது, "தாங்கள் இவர்களைப் பிரிந்(து மரணித்)ததிலிருந்து இவர்கள் தம் மார்க்கத்தை விட்டு விலகி, தாம் வந்த சுவடுகளின் வழியே திரும்பிச் சென்று கொண்டிருந்தார்கள்" என்று கூறுவார்கள். அப்போது, (அல்லாஹ்வின்) நல்லடியார் (ஈஸா-

அலை- அவர்கள்) கூறியதைப் போல், "நான் அவர்களோடு இருந்த காலமெல்லாம் அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தேன். நீ என்னைத் திரும்ப அழைத்துக் கொண்ட போது நீயே அவர்களையும் கண்காணிப் பவனாக இருந்தாய். மேலும், நீ (இப்போது) அவர்களுக்கு தண்டனை அளித்தால் அவர்கள் நிச்சயமாக உன் அடிமைகளே. நீ அவர்களை மன்னித்தாலும் (அப்போதும்) நீயே யாவற்றையும் மிகைத்தவனும் நுண்ணறிவுடையவனுமாய் இருக்கின்றாய்" என்னும் (5:117,118) இறைவசனத்தை (பதிலாகக்) கூறுவேன். அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி). நூல் : புகாரி (3349).

**அனுமதி பெற்றவரே பரிந்துரைக்க முடியும்**

அல்லாஹ்விடத்தில் பரிந்துரை செய்பவர்கள் யார் என்பதை முடிவு செய்யும் அதிகாரம் மக்களிடத்தில் இல்லை. பரிந்துரை யாளர்கள் என்று மக்கள் முடிவு செய்பவர்கள் எல்லோரும் அல்லாஹ்விடத்தில் பரிந்துரை செய்ய முடியாது.

இந்த அதிகாரத்தை அல்லாஹ் தன் கைவசத்தில் வைத்திருக் கிறான். மறுமையில் அல்லாஹ் யாருக்கு பரிந்துரை செய்வதற்கு அனுமதி அளிக்கிறானோ அவர் தான் பரிந்துரை செய்ய முடியும். மற்றவர்களால் அவனிடத்தில் பேசுவதற்குக் கூட முடியாது.

எனவே அனைத்து அதிகாரங்களையும் தன்னிடமே வைத்துள்ள அல்லாஹ்விடம் மட்டும் கேட்பது தான் நியாயமானது. அறிவுப்பூர்வமானது.

அவன் அனுமதித்தால் தவிர அவனிடம் யார் தான் பரிந்து பேச முடியும்? அல்குர்ஆன் (2 : 255).

அவனது அனுமதியின்றி எந்தப் பரிந்துரைப்பவனும் இல்லை. அவனே அல்லாஹ். உங்கள் இறைவன். அவனை

வணங்குங்கள்! படிப்பினை பெற மாட்டீர்களா? அல்குர்ஆன் (10 : 3).

அந்நாளில் அளவற்ற அருளாளன் யாருக்கு அனுமதியளித்து அவரது சொல்லையும் பொருந்திக் கொண்டானோ அவரைத் தவிர எவரது பரிந்துரையும் பயனளிக்காது. அல்குர்ஆன் (20 : 109).

யாருக்கு அவன் அனுமதியளித்தானோ அவருக்கே தவிர அவனிடம் பரிந்துரை பயன் தராது. அல்குர்ஆன் (34 : 23).

மறுமையில் அல்லாஹ் அனுமதித்தப் பிறகு தான் நபி (ஸல்) அவர்கள் பரிந்துரை செய்வார்கள்.

(மறுமை நாளில்) மக்கள் என்னிடம் வருவார்கள். நான் இறை சிம்மாசனத்திற்குக் கீழே சஜ்தா செய்வேன். அப்போது "முஹம்மதே! உங்கள் தலையை உயர்த்துவீராக! பரிந்துரை செய்யுங்கள். (உங்கள்) பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படும். கேளுங் கள். அது உங்களுக்குத் தரப்படும்" என்று (இறைவனின் தரப்பிலி ருந்து) சொல்லப்படும். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி). நூல் : புகாரி (3340).

எனவே அனைத்து அதிகாரங்களையும் பெற்ற வல்ல இறைவன் ஒருவனிடமே நாம் பிரார்த்தித்துநம் வணக்கத்தை , நம் நம்பிக்கையை .அவனுக்கு மாத்திரமே செலுத்த வேண்டும் அவன் ஒருவன் மாதே வைத்து அவனையே சார்ந்திருக்க .வேண்டும்

அல்லாஹ் நம் அனைவருக்கும் ஓரிறைக் கொள்கையில் வாழ்ந்து மரணிக்கும் பாக்கியத்தைத் தந்தருள்புரிவானாக!.